உ

# பெரிய புராண வசனச் சுருக்கம்

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக்கன் மிதப்பில் அணைந்த பிரானடி போற்றி
வாழி திரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி



சீகழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக்கரசருக்கு மங்களம்
சீர் பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்

வெளியீடு:-
பாலர் ஞானேதய சபை
பழைய மாணவர் சங்கம்

ஓம்

திருச்சிற்றம்பலம்

திருத்தொண்டர்

# பெரிய புராண வசனச் சுருக்கம்

(மாணவர்களுக்கு ஏற்றது)

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.


தெல்லிநகர் காசிவிநாயகர் தேவஸ்தான குரு

**சிவஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள்**


அவர்களால் (சுருக்கி) எழுதப்பட்டது.



தெல்லிப்பழை - பாலர் ஞானோதய சபையின்
பழைய மாணவர் சங்கத்தினருக்காக
திரு. நா. செல்வநேசன் அவர்களால்
காங்கேசன்துறை சந்திரா அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடப்பட்டது
இரத்தாக்ஷி ஹு தை மீ 25 உ
(7 – 2 – 1985)

வெளியீடு: 1 விலை ரூபா – 15/=

# சமர்ப்பணம்



பாலர் ஞானோதய சபையின் ஸ்தாபகரும்
காசிவிநாயகர் தேவஸ்தான பிரதம குருவுமாகிய
**அமரர் சிவஸ்ரீ. மு. சிவகடாக்ஷக் குருக்கள்**
அவர்களின் பாதகமலங்களுக்கு
இம்மலரினை சமர்ப்பிக்கின்றோம்.

ஓம்

# முகவுரை

சைவசமயிகளின் மிகப் பெரிய சொத்து புராணங்களும் இதிகாசங்களுமாகும், புராணங்களுள் மிகப் பெருமை வாய்ந்தது பெரிய புராணமாகும், எமது பாலர் ஞானோதய சபையின் அநுசரணையுடன் சமய வகுப்பு முப்பத்தெட்டு ஆண்டு காலமாகக் காசிவிநாயகர் தேவஸ்தானத்தில் நடாத்தப்பட்டு வருகின்றது. இதில் பலன் பெற்றோர் பல நூற்றுக் கணக்கானோராகும். பெரிய புராணத்தில் உள்ள நாயன் மார்களுடைய சரித்திரங்களை மாணவர்களுக்குப் புகட்டப் பலமுறை முயற்சித்தபோது பலன்தரவில்லை. வசனநடை கடினமாக இருப்பதாலும் சரித்திரங்கள் நீண்டதாக இருப்பதாலும் மாணவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இவ்வாண்டு புது முயற்சியாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருடைய வசன நூலைப் பலமுறை படித்து அதில் உள்ள முக்கிய அம்சங்களை இயன்றவரை தவறவிடாது நாயன்மார்களுடைய கதைகளைச் சுருக்கி எழுதினேன். வினாவிடைகளும் கொடுத்தேன். மிகவும் இலகுவாகக் கற்பிக்க முடிந்தது.

வாரத்திற்கு இரு கதைகளாகப் படித்த மாணவர்கள் நாயன்மார்களுடைய சரிதங்களை ஆறுமாத காலத்தில் கற்றுத் தேறினார்கள். இங்ஙனம் கற்பதனால் கல்லூரிகளில் கற்கும் சமய பாடத்திற்கும் பெரும் துணையாக அமைகின்றது. இக் கதைச் சுருக்கத்தைப் படித்த மாணவர்கள் புத்தகமாக வெளியிட வேண்டுமென விருப்பம் தெரிவித்தார்கள். இதனைப் பழைய மாணவர் சங்கத்தினரின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் மனமுவந்து ஏற்றுச் சங்கத்தின் வெளியீடாக வெளியிட முன் வந்துள்ளார்கள்.

இத்தகைய கதைச் சுருக்கம் அறிவால் மேம்பட்ட அறிஞர்களால் எழுதப்படவேண்டும். அறிவாளர்கள் இந் நூலில் குற்றங்கள் இருப்பின் மன்னிப்பார்களாக.

சி. க. கு.

## அணிந்துரை

சிவகதைகளைக் கேட்க விரும்பினன் தஞ்சைப் பெரு மன்னன் இராசராசசோழன். தனது முதன் மந்திரி யாகக் கடமை புரிந்த சேக்கிழார் சுவாமிகளின் மூலம் இப் பணியை நிறைவேற்றினன். இதனலேயே சேக்கிழார் சுவாமிகளுக்குத் தொண்டச் சீர்பரவுவார் என்ற பட்டப் பெயரும் ஏற்பட்டது. பெரிய புராணம் என்றும் திருத் தொண்டர் புராணமென்றும் பேசப்படும் இந் நூல் சைவ மக்களுக்குக் கிடைத்த சிறந்த வொரு ஞானக் கருவூலமாகும். செய்யுள் நடையில் அமைந்த இந் நூல் பன்னிரண்டாம் நூற்றுண்டில் பாடப்பட்டது. பத்தொன் பதாம் நூற்றுண்டில் ஆறுமுக நாவலர் பெருமான் இதனை வசன நடையில் அழகுற அமைத்து வெளியிட்டார்.

இன்று எம் மத்தியில் ஒரே பரபரப்பு: எதிலும் வே கம்; பெருக்கத்திலும் பார்க்கச் சுருக்கத்துக்கு நல்ல வர வேற்பு; காலமும் சுருக்குகிறது; கல்வியும் சுருக்குகிறது அதிலும் சமயக் கல்வியென்றல் மிகமிகச் சுமையாக வாழ்க்கையோடு ஒட்டி ஊட்டினலன்றி மாணவருலகு ஏற்றுக் கொள்ளாது.

இதனைக் கருத்திற் கொண்டு தெல்லிப்பளை காசி விநாயகர் கோயில் பாலர் ஞானேதய சபைத் தலைவர் **சிவஸ்ரீ. கணேசலிங்கக் குருக்கள்** அவர்கள் பணியாற்றி யுள்ளார். எளிமையும் இனிமையும் விளங்க அறுபத்து மூவருடைய திருச் சரிதத்தையும் எழுதியுள்ளார் கதை கேட்க விரும்புவார்கள் பிள்ளைகள்; இது ஞானக் கதை. எம்மை நல்வழிப்படுத்தும் கதை. என்பதை ஒரு சில குழந்தைகளாவது உணராமல் இருக்கமாட்டார்கள். எனவே ஐயா அவர்கள் காலத்தை ஒட்டி ஆற்றிய இச் சேவை போற்றுதற்குரியது. இந் நூலை வெளியிட முன் வந்தோர் தவம் பெற்றவர்கள். பாலர் ஞானேதய சபை யின் பழைய மாணவர்கள் மிகவும் பண்பாடுடையவர்கள் அவர்களையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

இத்தகைய சிவப் பணிகளில் மேலும் மேலும் பாலர் ஞானேதய சபை ஈடுபட எல்லாம் வல்ல காசி விநாயகப் பெருமான் நல்லருள் பாலிக்க வேண்டு மென்று பிரார்த் திக்கிறேன்.

**சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்கா துரந்தரி**

**செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**

# பாராட்டுரை

சைவசமயத்தவர்களின் சிறந்தசேமநிதி பெரிய புராணம், பக்தியின் நெறியைப் பலவித உண்மைச் சரித்திர வாயிலாக எடுத்துக் காட்டுவது, திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறையாய் உள்ளது. சைவ சமயத்தில் உள்ளவர்கள் யாவரும் பெரிய புராணத்தைப் பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

பக்திச்சுவை நனிசொட்டும் பெரிய புராணம் செய்யுள்ரூபமாக உள்ளது. அதனை வசனரூபத்தில் தந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். அவரின் அந்த வசனமே மிக மிகச் சிறந்தது என்பது யாவரும் அறிந்த உண்மை.

தற்காலத்தில் அந்த வசனத்தை வாசித்துக் கொள்ளவே அடிப் படைத் தமிழறிவு மிகவும் அவசியம். இப்போ எங்கே பார்த்தாலும் சிறுகதை இலக்கியம் என்று ஒருவகை இலக்கியம் பரவியுள்ளது. சிறுவசனங்களால் அவையெழுதப் படுகின்றன. தற்போதைய பாட புத்தகங்களும் அவற்றையே பின்பற்றுகின்றன. எனவே சமயநெறி யிற் பயிலும் மாணவர்க்கு மிக இலகுவான வசன நடையிலே பெரிய புராணம் போன்ற நூல்கள் வெளிவரவேண்டியது அவசிய மாகிறது.

பலவருடங்களாகத் தெல்லி, காசிவிநாயகர் தேவஸ்தானத்தில் பாலர் ஞானோதய சபை இலவச சமய வகுப்புக்களை நடாத்தி வருகிறது. அந்த வகுப்புகளிற் படித்த பலர் இன்று நல்ல சமய அறிவு உள்ளவர்களாக உயர் வாழ்க்கை நடாத்தி வருகிறார்கள்.

ஷி சபையின் தலைவராகவும், கோயிற் குருக்களாகவும் சபைச் சமய ஆசிரியராகவும் விளங்கும் சிவஸ்ரீசி. கணேசலிங்கக் குருக்கள் அவர்கள் மாணவருக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் போது பெரிய புராண சரித்திரங்களைச் சிறு சிறு வசனங்களாக்கிச் சுருக்கி எழுதி அதையே பாடமாகச் சொல்லிக் கொடுத்தும் சில இடங்களை மனனம் செய்வித்தும் வந்துள்ளார். அந்த வசனமே இன்று மாண வர்களின் முயற்சியால் புத்தகரூபமாகிறது.

நாலாம் ஐந்தாம் வகுப்புக்கள் தொடக்கம் இப் பெரிய புராண வசனம் வாசித்துப் பயிலக் கூடியதாய் உள்ளது. தமிழறிவில் ஒர ளவு பயிற்சி உடையவர்கள் கூட இதனை வாசித்து விளங்கத்தக்க தாக எழுதப்பட்டுள்ளது எனவே இந்த நூல் வயது முதிர்ந்தோர், சிறுவர்கள், குறைந்த கல்வியறிவுடையோர், நிறைந்த அறிவுடை யோர் யாவர்க்கும் பயன்படும்.

இப்படியான ஒரு நூலை வெளியீடு செய்யத் துணிந்த சிவஸ்ரீசி கணேசலிங்கக் குருக்களையும், அவருக்கு உதவி செய்தோரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். எமது மனமுவந்த பாராட்டு அவர்கட்குரியதாகும்.

சைவ உலகம் இந் நூலை நன்கு பயன் படுத்துமென எதிர் பார்க்கிறேன்.

**பௌராணிக வித்தகர் பிரம்மஸ்ரீ. வ. குகசர்மா அவர்கள்**

# வெளியீட்டுரை

குழந்தைக்குமரன் கிழவியிடம் பெரிது எது என ஒரு முறை வினவிய ஞான்று பெரிது பெரிது புவனம் பெரிது எனத் தொடங்கி "அடியார்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்று கனியொழுகு வாயினாலே கவியமுதமாகப் பகர்ந்தார்.

"அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம் முடியா முதலே," எனத் திருவாசகம் தந்த மாணிவாசகப் பெருமான் இறைவனிடம் இரந்தார். மெய்யடியார் சரிதங்களைச் சிறார்கள் மனத்தில் பதிக்க வேண்டுமென்ற பெருவிருப்பம் கொண்ட பாலர் ஞானோதய சபைத் தலைவரும், காசி விநாயகர் தேவஸ்தானத்தின் பிரதம குருக்களுமான சிவஸ்ரீ. கணேசலிங்கக் குருக்கள் அவர்கள் இதனை இலகு நடையில் எழுதியுள்ளார்கள்.

முப்பத்தெட்டாண்டுகளுக்கு முன்பு ஷ்டி தேவஸ்தானத்தின் பிரதம குருக்களாக இருந்து அரும் பணியாற்றிய அமரர் அந்தணச் செம்மல் சிவஸ்ரீ. மு சிவகடாக்ஷக் குருக்கள் அவர்களது இதய கமலத்தினின்றும் தோன்றியதே பாலர் ஞானோதய சபை. இரைது அயராமுயற்சியினாலும் ஆலயச் சூழலில் உள்ளவர்களது ஆதரவாலும் ஷ்டி சபை பலவகைகளில் வளர்ந்து பல அறிஞர்கள் வருகை தந்து பேருரைகளாற்றினர்கள். இது காரணமாகச் சபையின் மாணவ மாணவிகள் சமய அறிவு கைவரப் பெற்ற அறிஞர்களானார்கள். இப் பெரியாரின் சிவப்பணிகளை அன்னாரின் ஏக புத்திரன் இன்று திறம்படச் செய்து வருவது யாமறிந்த தொன்றாகும்.

இந் நூலைத் திருத்தியும் பிரதிகளில் காணப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்தும், அகவேடைமையாது இந் நூலுக்கோர் பாராட்டுரை தந்தும் என்றும் ஊக்கம் தந்துவரும் பௌராணிக வித்தகர் வ குகசர்மா அவர்களுக்கு எமது நன்றி கலந்த வணக்கத்தைச், சமர்ப்பிக்கின்றோம். பெரிய புராணமாகிய இவ்வரிய நூலுக்கு அணிந்துரை வேண்டுமென்ற போது மிகவும் அன்போடு அதனைத் தமக்கே உரிய தீந்தமிழில் எல்லார் நெஞ்சிலும் குடிகொண்டு கிருபை புரியும் துர்க்கா தேவிக்கு அடிமை பூண்டு ஒழுகும் துர்க்கா துரந்தரி, செந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் எழுதி அழகு செய்துள்ளார்கள். அன்னாருக்கு எமது நன்றி கலந்த வணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

பல சிரமங்களுக் கிடையில் குறுகிய கால எல்லைக்குள் இதனை நூலாக்கி வனப்புற அமைத்துத் தந்த சந்திரா அச்சகத்தினருக்கு எமது பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந் நூல் வெளியீட்டுக்கு பேராதரவு தந்த அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் மீண்டும் தங்கள் ஒத்துழைப்புகளையும் நல்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பழைய மாணவர் சங்கம்

# நம்பியாண்டார் நம்பி

புண்ணிய பூமியாகிய பரத கண்டத்திலே, தமிழ் நாட்டின் சிறப்பு மிக்க சோழமண்டலத்திலே, திருவாரூரிலே வைதீக சைவமார்க்கமானது சிறப்புற்று விளங்கும்படியாக அபயகுலசேகர சோழமகாராஜாவானவர் செங்கோல் நடாத்திவந்தார்.

சோழமகாராஜாவானவர் சமயகுரவர்களின் தேவாரப் பதிகங்களைச் சிவனடியார்கள்மூலம் ஓதக்கேட்டு மனம் உருகினார். அத்தேவாரத் திருப்பதிகங்களை எடுப்பதற்காக எங்குந் தேடினார். அகப்படவில்லை,

திருநாரையூரில் பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசைசெய்யும் ஆதிசைவர் ஒருவர் இருந்தார். அந்த ஆதிசைவருக்கு "மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்குமாறு" ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ் செய்தருளினார், அப்புத்திரர் உரியகாலத்திலே உபநயனஞ் செய்யப்பட்டு வேதம் முதலாய கலைகள் யாவற்றையும் கற்றுவந்தார், இவ்வாறு இருக்கும் நாளில் தந்தையார் வேறு ஊருக்குச் செல்லவேண்டியிருந்ததால் இச் சிறுவனே பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசைசெய்யச் சென்றார், முதலில் திருமஞ்சனம் ஆட்டினார். அதன் மேல் திருவமுதைப் பிள்ளையார் முன்னிலையில் வைத்து "எம்பெருமானே திருவமுது செய்தருளும்" என்று வேண்டினார். பிள்ளையார் திருவமுது செய்யவில்லை, இதனால் கவலைகொண்ட நம்பி தமது தலையைக் கல்லிலே மோதப் புகுந்தார். இதனைக் கண்ட எம்பெருமான் "நம்பி பொறு எனத் தடுத்துத் திருவமுது முழுவதையும் உட்கொண்டார்" இதனால் நம்பி பெரும் மகிழ்ச்சியடைந்தார், பிள்ளையாரைப் பார்த்து சுவாமீ! இனி யான் பாடசாலை சென்றால் ஆசிரியர் தண்டிப்பார், எனவே, வேதம் முதலாய கலைகளையெல்லாம் தாங்களே ஓதுவித்தல் வேண்டும் என்று பிரார்த்தித்தார். அவ்வாறே பிள்ளையார் நம்பிக்குச் சகல கலைகளையும் சொல்லிக் கொடுத்தார், நம்பி பொல்லாப் பிள்ளையார் மேல் திருவிரட்டை மணிமாலை பாடினார்.

இந்த அற்புதச் செயல்களைக் கேள்வியுற்ற அபயகுலசேகர சோழமகாராஜாவானவர் பிள்ளையாருக்கு நெய்வேதிக்கும் பொருட்டுப் பழவர்க்கங்களையும், தேன், அவல், எள்ளுருண்டை முதலியவற்றையும் கொண்டு திருநாரையூருக்கு வந்தார், நம்பியாண்டார் நம்பியினுடைய திருவடிகளை வணங்கிச் சுவாமீ! இவற்றை விநாயகப் பெருமானுக்கு நெய்வேதிக்கவேண்டும் என வேண்டினார். நம்பி அவற்றையெல்லாம் நாற்சுத்தி செய்து படைத்தார். பிள்ளையார் தமது துதிக்கையை நீட்டி அவற்றைத் திருவமுது செய்தருளினார். இதனைக் கண்டு மகிழ்ந்த சோழமகாராஜா தேவாரத் திருமுறைகளும், திருத்தொண்டர் சரிதங்

களும் பூவுலகில் சிறந்து விளங்குமாறு பிள்ளையாரே அநுக்கிரகம் செய்யவேண்டும் எனப் பிரார்த்தித்தார், இவ் வேண்டுகோளை நம்பி பொல்லாப்பிள்ளையாருக்குச் சமர்ப்பித்தார். இதனைச் செவிமடுத்த பொல்லாப்பிள்ளையார் நம்பி சிதம்பரத்திலே மூவர் கையடையாளம் உள்ள அறையிலே தேவாரத் திருமுறைகள் இருக்கின்றன, என்று அருளிச்செய்தார். அத்துடன் திருத்தொண்டர்களுடைய சரிதங்களையும் தெரிவித்தார்.

சோழமகாராஜா நம்பியாரூரரையும் அழைத்துக்கொண்டு சிதம்பரத்துக்குச் சென்றார். தனது நியமங்களை முடித்துக்கொண்டு சபாநாயகரை வணங்கினார். நம்பியாரூரர் சபாநாயகர்மீது "கோயிற் றிருப்பண்ணியர் விருத்தம்" பாடியருளினர், இதன்மேல் சோழமகாராஜா நடராஜப் பெருமானுக்கு விசேட பூசை செய்வித்தார், சமயகுரவர் மூவருக்கும் விசேட ஆராதனைகள் நடைபெற்றன. பின்னர் சமயகுரவர்களைத் திருவுலா எழுந்தருளச் செய்து கனகசபையை வலம்வந்து திருமுறைகள் இருக்கும் அறையின் வாயிலுக்குக் கொண்டு சென்றார்கள், கதவு திறக்கப்பட்டது. திருமுறை ஏடுகள் பலவற்றை வன்மீகம் மூடியிருக்கக் கண்ட சோழராஜா கவலைகொண்டார். "இக் காலத்துக்கு வேண்டுவனவற்றைச் செல்லு மூடாதிருக்கச் செய்தோம்" என்று அசரீரி கேட்டது. சோழராஜாவின் கேள்விப்படி நம்பியாண்டார்நம்பியினால் திருமுறைகள் பதினொன்றாக வகுக்கப்பட்டன.

தேவாரப் பதிகங்களுக்குப் பண்ணடைவு செய்யவேண்டும் என்று சோழராஜா பிரார்த்தித்தார். இறைவனின் ஆணைப்படி திருநீலகண்டரின் மரபிலே பிறந்த பெண்ணினால் கனகசபைக்கு முன்னால் பண்ணடைவு வகுக்கப்பட்டது. இதன்பின் நம்பியாண்டார்நம்பி திருநாரையூரில் சிலகாலம் இருந்து சிவபதம் அடைந்தார். சோழமகாராஜா பதினொரு திருமுறைகளையும் செப்பேடு செய்வித்துத் தியாகேசர் சந்நிதியிலே ஏற்றுவித்துச் சைவநெறி தழைக்கும்படி நெடுங்காலம் அரசியற்றிக்கொண்டிருந்து சிவபதம் அடைந்தார்.

## தில்லைவாழ் அந்தணர்

பல சிறப்புகள் நிறைந்த தில்லைவனத்திலே முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாகிய சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் பொருட்டுத் திருமூலத்தானத்தில் சிவலிங்க வடிவாய் எழுந்தருளியிருப்பார். திருமூலத்தானத்திற்குத் தெற்குத் திக்கிலே திருவருள் வடிவான கனகசபை இருக்கிறது. அக் கனக சபையின்கண்ணே சிவபெருமான் தமது அருட்சத்தியாகிய சிவகாமி அம்மையார் காண அனவரதமும் ஆனந்தத்தாண்டவம் செய்தருளுவார். திருமூலத்தான லிங்கத்துக்கும் சபாநாயகருக்கும் பூசை செய்பவர்கள் தில்லை வாழ் அந்தணர் என்று அழைக்கப்படுவார்கள்.

அவர்கள் மூவாயிரவர். குற்றம் இல்லா வம்சத்தில் உதித்தவர்கள். பாவம் சிறிதும் இல்லாது புண்ணியமே வடிவெடுத்தாற் போன்றவர்கள். நான்கு வேதங்களையும், ஆறு வேதாங்கங்களையும், நான்கு உபாயங்களையும் ஓதியுணர்ந்தவர்கள். மூன்று அக்கினிகளையும் வளர்க்கின்றவர்கள். அறுதொழில்களையும் செய்கின்றவர்கள். நான்கு தீட்சைகளையும் பெற்றவர்கள், நான்கு பாதங்களையும் வழுவாது அநுட்டிக்கின்றவர்கள். தியாகேசர் சுந்தரருக்குத் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன்" என்று சிறப்பாக அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட பெருமைக்கு உரியவர்கள். இவர்களின் மகிமையோ அளவிடற்கரியது.

## சுந்தரமூர்த்தி நாயனூர்

திருக்கைலாயமலையிலே ஆன்மாக்களுக்கு அநுக்கிரகம் செய்துகொண்டு சிவபெருமான் உமாதேவியாரோடு எழுந்தருளியிருந்தார். அடியார் கூட்டத்துள் ஒருவராகிய ஆலாலசுந்தரர் அருச்சனைக்குப் புஷ்ப்பங்கள் கொய்வதற்காகத் திருநந்தவனத்திற்குப் போனூர். அங்கே உமாதேவியாரின் சேடியர்களாகிய அனிந்திதை, கமலினி என்போர் புஷ்ப்பம் கொய்துகொண்டு நின்றூர்கள். அவர்களைக் கண்ட ஆலாலசுந்தரருக்கு அப்பெண்கள்மேல் விருப்பம் ஏற்பட்டது. அப்பெண்மணிகளுக்கும் ஆலாலசுந்தரர்மேல் விருப்பம் உண்டானது. பின்னர் இருபகுதியினரும் மனதை மாற்றிக்கொண்டு தத்தமது சந்நிதானங்களுக்குச் சென்றனர். சர்வவியாபியாகிய இறைவன் ஆலாலசுந்தரரை நோக்கி "நீ பெண்கள் மேல் விருப்பம் கொண்டமையால் தக்ஷிண பூமியிலே பிறந்து அப்பெண்களைத் திருமணம் செய்வாயாக" என்று திருவாய்மலர்ந்தருளினூர். இதனைக் கேட்ட ஆலாலசுந்தரர் நமஸ்காரம் பண்ணிச் சுவாமீ! பிரபஞ்ச வாழ்க்கையிலே அடியேன் தடுமாறும்போது தடுத்தாட்கொள்ளவேண்டும் என்று பிரார்த்தித்தார். இறைவனும் அவ் வேண்டுகோளுக்கு இசைந்தருளினூர்.

ஆலாலசுந்தரர் திருமுனைப்பாடி நாட்டிலே, திருநாவலூரிலே ஆதிசைவ அந்தணராகிய சடையனூருக்கும் கற்பிலே சிறந்த இசைஞானியாருக்கும் புத்திரராகத் திருவவதாரஞ் செய்தருளினூர். சைவசமயம் சிறப்புற்று ஓங்க அவதாரஞ் செய்த அப்பிள்ளைக்கு "நம்பியாரூரர்" என்று நாமஞ்சூட்டினூர்கள். நம்பியாரூரர் சிறுதேர் உருட்டி விளையாடும் நாளில் அவ்வழியாலே சென்ற அந்நாட்டு அரசராகிய நரசிங்கமுனையர் என்பவர் நம்பியாரூரர் மேல் விருப்பங்கொண்டு, தந்தையாரின் அநுமதியைப் பெற்று அப்பிள்ளையைக்

கொண்டுசென்று தமது அபிமான புத்திரராக வளர்த்தார். அரசரால் வளர்க்கப்பட்டபோதிலும் பிராமண குலத்திற்குரிய ஒழுக்கத்தினின்றும் தவருதவராய் உரிய காலத்திலே உபநயனஞ் செய்யப் பெற்று வேதம் முதலாய கலைகள் யாவற்றையும் கற்ருர்.

விவாகம் செய்தற்குரிய பருவத்தை அடைந்தபோது, தந்தையாராகிய சடையனுர் பந்துவாய்ப்புத்தூரில் இருக்கின்ற சடங்கவி சிவாச்சாரியரின் மகளுக்கும் இவருக்கும் திருமணம் பேசி நிச்சயித்தார். சுபதினத்திலே நம்பியாரூரர் மணக்கோலம் பூண்டு குதிரைமேல் ஏறி மங்கலவாத்தியங்கள் முழங்கச் சென்று மணப்பந்தலை அடைந்தார். சிவபெருமான் இவரைத் தடுத்து ஆட்கொள்ளத் திருவுளம் கொண்டார். ஒரு வயோதிகப் பிராமண வடிவத்தில் திருமண வீட்டிற்குச் சென்ருர். மணமகனுகிய நம்பியாரூரரைப் பார்த்து உனக்கும் எனக்கும் ஒரு வழக்கு இருக்கிறது என்ருர். சபையோரைப் பார்த்து "இந்த நம்பியாரூரன் எமக்கு அடிமை" என்ருர். இதனுல் கோபங்கொண்ட நம்பியாரூரர் பிராமணரைப் பார்த்து நீர் பித்தனு? என்ருர். அத்துடன் பிராமணர் வைத்திருந்த ஓலையையும் பறித்துக் கிழித்தார். இதன்மேல் இந்த வழக்கு திருவெண்ணெநல்லூரில் விசாரிக்கப்பட்டது. சிவபெருமானுகிய பிராமணர் மூலவோலையைக் காட்டி நம்பியாரூரர் தமக்கு அடிமை என்பதை நிரூபித்தார். பின்னர் நம்பியாரூரரையும் அழைத்துக் கொண்டு சென்று திருவருட்டுறை என்னும் ஆலயத்ினுள்ளே சென்று மறைந்துவிட்டார். இந்நிகழ்ச்சியின் பின்னர்தான் சிவபெருமானே தம்மை வந்து ஆட்கொண்டார் என்பதை நம்பியாரூரர் உணர்ந்தார். எம்பெருமான் பார்வதி சமேதராகக் காட்சி கொடுத்து, "சுந்தரர்" என்னும் நாமம் சூட்டியும் "பித்தாப் பிறைசூடி" என்று அடியெடுத்துக் கொடுத்தும் தம்மைப் பாடும்படியும் பணித்தார். நம்பியாரூரர் அந்த அடியை முதலாகக் கொண்டு தேவாரப் பதிகங்கள் பாடியருளினுர். இவ்வாறு இருக்கும் நாளிலே சடங்கவிசிவாச்சாரியாருடைய புத்திரியார் சுந்தரமூர்த்தி நாயனுரையே தியானஞ் செய்து கொண்டிருந்து சிவலோகத்தை அடைந்தார்.

இதன்மேல் சுந்தரமூர்த்திநாயனுர் திருநாவலூருக்கும், திருத்துறையூருக்கும் போய்த் திருப்பதிகம் பாடியருளினுர். திருவதிகை என்னும் தலத்திற்குப் போகாமல் சமீபத்தில் உள்ள சித்தவடமடத்திற்குப் போய் வீரட்டானேஸ்வரரைத் தியானித்துக் கொண்டு நித்திரை செய்தார். விருத்தப்பிராமணர் வேடத்தில் அங்குசென்ற வீரட்டானேஸ்வரர் சுந்தரருடைய தலையின்மேல் கால்களை வைத்து நித்திரை செய்பவர் போலக் காட்டியருளினுர். விழித்த சுந்தரர் ஐயரே என் சிரசின் மேல் கால்களை வைத்த காரணம் யாது? என்று வினவினுர். பிராமண வேடத்தில் வந்த

சிவபெருமான் எனது மூப்பினுலே வைத்தேன் என்ருர். பின்னர் சுந்தரர் வேறெரு இடத்தில் சென்று நித்திரை செய்தார். அங்கேயும் எம்பெருமான் கால்களேச் சிரசில் படும்படியாக வைத்து நித்திரை செய்தார். சுந்தரர் "நீவிர் யார்? என்று வினவினுர். பிராமணராகிய சிவபெருமான் "என்னே நீ அறியாயோ"? என்று சொல்லி மறைந்தருளினுர். இதன்மேல் சுந்தரர் "தம்மானேயறியாத சாதியருளரோ" என்ற திருப்பதிகத்தைப் பாடியருளினுர். இதன்பின்னர் சுந்தரர் திருமாணிக்குழி, திருத்தினேநகர், தில்லேநகர் முதலாய திருப்பதிகளுக்குச் சென்று வழிபாடு செய்து பதிகங்கள் பாடித்துதித்தார்.

இறைவனின் கட்டளேப்பிரகாரம் சுந்தரர் திருவாரூருக்குச் சென்று அங்கே வழிபாடு செய்தருளினுர். அப்போ வன்மீகநாதருடைய திருவருளினுலே "நாம் உனக்குத் தோழராஞேம்" என்று அசரீரி கேட்டது. கமலினி என்பவர் திருவாரூரிலே பரவையார் என்னும் பெயருடன் வளர்ந்து மங்கைப்பருவம் அடைந்தருளினுர். ஒருநாள் சுவாமி தரிசனஞ் செய்யும்பொருட்டுச் சென்ற சுந்தரமூர்த்திநாயனுர் அங்கே நின்ற பரவையாரைக் கண்டு அவர்மேல் விருப்பம் கொண்டார். பரவையாரும் இவர்மேல் விருப்பம் கொண்டார். பின்னர் இருவரும் மனதை மாற்றிக்கொண்டு சென்ருர்கள். அதன்மேல் இறைவனின் ஆஞ்ஞைப்படி இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. பரவையாரோடு சுந்தரர் இல்லறம் நடத்திவரும் நாளில் இறைவன் "தில்லேவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்தார். அதன்பிரகாரம் சுந்தரமூர்த்தி நாயனுர் "திருத்தொண்டத் தொகை" பாடியருளினுர் இவ்வாறு திருவாரூரிலே வாழ்கின்ற காலத்திலே குண்டையூர்க் கிழார் இவருக்கு நெல்லுக் கொண்டு வந்து கொடுத்தார். பொன் வேண்டும்போது இறைவன் பொன் கொடுத்தார்.

திருநாட்டியத்தான் குடியில் வசிக்கின்ற கோட்புலி நாயனுர் சுந்தரமூர்த்திநாயனுரைத் தம்முடைய இல்லத்துக்கு வரும்படி அழைத்தார். சுந்தரர் அங்கு சென்றபோது அவரை வரவேற்று உபசரித்து அருச்சனே செய்து திருவமுது செய்வித்தார், பின்னர் தமது புத்திரிகள் "சிங்கையடியார், வனப்பாகையார்" ஆகிய இருவரையும் அழைத்துவந்து அடிமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேண்டினுர். சுந்தரமூர்த்திநாயனுர் இப்பெண்கள் எமக்குப் புத்திரிகள் என்று சொல்லித் தமது மடியிலே இருத்தினுர். பின் ஆலயத்திற்குச் சென்று "பூணுணவதோ ரரவம்" என்னும் திருப்பதிகம் பாடினுர். அத்திருப்பதிகத்திலே கோட்புலிநாயனுரைச் சிறப்பித்துப் பாடினுர். அதன்மேல் தலயாத்திரை செய்யவிரும்

பித் திருநன்னிலம், திருவீழிமிழலை, திருவாஞ்சியம், திருநறையூர். அரிசிற்கரைப்புத்தூர், திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேச்சரம், சிவபுரம், திருக்கலய நல்லூர், கும்பகோணம், திருவலஞ்சுழி, திருநல்லூர், திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருவையாறு, திருப்பூந்துருத்தி முதலாய தலங்களுக்கு யாத்திரை செய்தார்.

திருமுதுகுன்றிற்குச் சென்று வழிபட்டபோது அப்பெருமான் பன்னீராயிரம் பொன் கொடுத்தருளினார். அப்பொன்னை மணிமுத்தா நதியிலே போட்டார். திருவாரூருக்கு வந்தபோது "பொன் செய்த மேனியீர்" என்ற திருப்பதிகம் பாடித் திருவாரூர்க் குளத்திலே பொன்னைப் பெற்றார். இதன்பின்னர் தலயாத்திரை செய்ய விரும்பித் திருநள்ளாறு, திருக்கடவூர், வீரட்டம், திருக்கடவூர் மயானம், திருவலம்புரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருநனிபள்ளி, திருச்செம்பொன்பள்ளி, திருநின்றியூர், திருநீடூர், திருப்புன்கூர், திருக்கோலக்கா ஆகிய பன்னிரண்டு தலங்களையும் வணங்கித் திருப்பதிகம் பாடினார். திருக்குருகாவூருக்குப் போகும் வழியில் இறைவன் தண்ணீர்ப்பந்தல் அமைத்து இவருக்குப் பொதிசோறு கொடுத்தார். திருக்கச்சூரிலே சென்று வழிபட்டபோது இறைவன் அந்தண வடிவத்தில் வந்து அன்னமும் கறியும் யாசித்துக் கொடுத்தார். சுந்தரமூர்த்தி நாயனார் மேலும் திருமேற்றளி, திருவோணகாந்தன்றளி, திருப்பனங்காட்டூர், திருமாற்பேறு, திருவல்லம், திருக்காளத்தி முதலாம் தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்து திருப்பதிகமும் பாடியருளினார். இதன்மேல் வேறும் பல தலங்களை வணங்கிக்கொண்டு சமுத்திரக்கரையில் இருக்கின்ற திருவொற்றியூருக்கும் திருப்பதிகம் பாடித் திரிகாலமும் தரிசனஞ் செய்தார்.

இவ்வாறு ஆலயங்கள் தோறும் சென்று சுந்தரர் திருப்பதிகம் பாடிவரும் நாளில் திருக்கைலாயமலையில் இவர்மேல் ஆசைகொண்ட அனிந்திதை, ஞாயிறுகிழவர் என்பவருக்குப் புத்திரியாகப் பிறந்து சங்கிலியார் என்னும் பெயருடன் வளர்ந்து மணப்பருவத்தை அடைந்தார். தாயும் தந்தையும் மணமுடிக்க எத்தனித்தபோது அவர் தாம் இறைவனின் அடியவரையே மணப்பதாகவும் திருவொற்றியூரில் இருக்கும் இறைவனுக்குத் தொண்டு செய்யப்போவதாகவும் கூறினார். அதன்பிரகாரம் திருவொற்றியூரில் கன்னிமாடம் அமைக்கப்பட்டது, அவர் அங்கிருந்துஇறைவனுக்குப் புஷ்பமாலைகள் கட்டிக் கொடுத்துவந்தார். ஓர் தினம் ஆலயத்துக்கு வழிபாடு செய்யச் சென்ற சுந்தரர் புஷ்பமண்டபத்திலே சங்கிலியாரைக் கண்டு அவர்மேல் விருப்பங்கொண்டார். இதனை உணர்ந்த பரமபதியானவர் சுந்தரருக்கும், சங்கிலியாருக்கும் திருமணம் செய்து வைத்தார். திருமணத்தின்போது சங்கிலியாரின் கேள்விப்படி, "உன்னைப் பிரியேன்" என்று சுந்தரால் சத்தியம் செய்து கொடுக்

கப்பட்டது. சங்கிலியாருடன் சிலகாலம் தங்கியிருந்து வாழ்ந்த சுந்தரர் திருவொற்றியூரை நீங்கித் திருவாரூருக்குப் போகப் புறப் பட்டார். அவரது சத்தியம் தவறியமையால் சுந்தரரின் இரு கண் களும் மறைந்தன. அப்போது உறுதி தவறாத சுந்தரர் சில அடிய வர்களின் உதவியுடன் திருவாரூருக்குப் புறப்பட்டார். போகும் வழியில், திருமுல்லைவாயிலுக்குச் சென்று தேவாரம் பாடியபோது இறைவனால் இவருக்கு ஊன்றுகோல் ஒன்று கொடுக்கப்பட்டது. காஞ்சிபுரம் திருவேகம்பரத்தில் உள்ள ஏகாம்பரநாத சுவாமியை வணங்கி ''ஆலந்தானுகந்தமுது செய்தானை'' என்ற பதிகம் பாடிய போது இறைவனால் இடக்கண் மாத்திரம் கொடுக்கப்பட்டது அத்தலத்தை வழிபாடு செய்தபின் அங்கிருந்து புறப்பட்டுப் பல தலங்களை வழிபாடு செய்துகொண்டு திருவாரூரை அடைந்தார். அங்கு தமக்கு வலக்கண்ணையும் தந்தருளுமாறு ''மீளாவடிமை யுமக்கேயாளாய்'' என்ற பதிகம் பாடி வலக்கண்ணையும் பெற்றார்.

இரு கண்களையும் பெற்ற சுந்தரர் பரவையார் வீட்டிற்குச் செல்ல முற்பட்டபோது பரவையார் மறுத்துவிட்டார். சுந்தரர் சிவபெருமானை வேண்டுதல் செய்து ''சுவாமி! பரவையாரின் கோபத் தைத் தணித்து அடியேன் அங்கு செல்வதற்கு வழிசெய்தருள வேண்டும்'', என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அவ்வேண்டுகோ ளின் பிரகாரம் பரவையாரிடம் பலமுறை தூதுசென்று அவரை உடன்படச் செய்தார். பின்பு சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பரிசனங் களும் பரவையாரின் வீட்டுக்குச் சென்றார்கள். சுந்தரர் பரவையா ருடன் மகிழ்ச்சியாக இருக்கும் நாளில் கொடுங்கோளூரில் இருக்கின்ற சேரமான் பெருமாள் நாயனார் இவரது மகிமைகளைக் கேள்வியுற்று அங்கு சென்று அவரை வணங்கி அவரின் நண்பரானார். இதனால் சுந்தரருக்குச் ''சேரமான் தோழர்'' என்ற பெயரும் உண்டாயிற்று. மேலும் பல தலங்களுக்குச் சென்று வணங்கித் தேவாரம் பாடினார். இராமேஸ்வரத்துக்குப் போனபோது அங்கிருந்தே மாதோட்டத்தில் உள்ள திருக்கேதீஸ்வரத்தையும் வழிபட்டுத் தேவாரம் பாடினார். திருப்புக்கொளியூருக்குச் சென்றபோது அங்கே முதலை விழுங்கிய சிறுவனை வரவழைத்துக் கொடுத்தார்.

இறுதியாகச் சுந்தரமூர்த்திநாயனார் திருவஞ்சைக்களத்துக்குச் சென்றபோது தம்மை இப்பிரபஞ்ச வாழ்க்கையினின்றும் நீக்கித் திருவடியிலே சேர்த்தருள வேண்டும் என்று பிரார்த்தித்துத் 'தலைக் குத்தலை மாலை'' என்னும் திருப்பதிகம் பாடினார். சிவபெருமான் தேவர்களை அழைத்து ''நீங்கள் நம்முடைய தோழனாகிய சுந்தரரை வெள்ளையானையில் அழைத்துக்கொண்டு வாருங்கள்'', என்று கட்டளை யிட்டார். அதன்பிரகாரம் வெள்ளையானை வந்தது. சுந்தரர் தமது தோழராகிய சேரமான் பெருமாள் நாயனாரை நினைத்துக்கொண்டு

வெள்ளையானையில் ஏறிச்சென்றூர். இதனை அறிந்த சேரமான் பெருமாள் நாயனூர் தாம் ஒரு குதிரையின்மேல் ஏறிக்கொண்டு, அதன் காதிலே ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதினூர். குதிரையானது ஆகாயத்திலே பாய்ந்து சென்று வெள்ளையானையை வலஞ்செய்துகொண்டு அதற்கு முன்னதாகச் சென்றது. இருவரும் திருக்கைலாய மலையின் தெற்கு வாசலை அடைந்தார்கள். யானையினின்றும், குதிரையினின்றும் இறங்கினூர்கள் அங்கே சேரமான்பெருமாள் தடைப்பட்டு நிற்கச் சுந்தரர் உள்ளே சென்று சுவாமி சந்நிதானத்திலே வணங்கி நின்றூர். சுவாமி அவரை நோக்கி "சுந்தரா, வந்தாயா?" என்றூர். சுந்தரர் "அடியேன் செய்த பிழைகளைப் பொறுத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார் மேலும் "சுவாமீ? சேரமான் திருவனுக்கன் வாசலிலே நிற்கின்றூர் என்றூர்." சிவபெருமான் அவரை உள்ளே அழைப்பித்து இருவரும் கணங்களுக்குத் தலைவராய் இருங்கள், என்று அருளிச் செய்தார். சுந்தரர் முன்போல் ஆலாலசுந்தரராகித் தாம் செய்த தொண்டையே செய்தருளினூர். சேரமான் பெருமாள் கணநாதராகி தாம் செய்யவேண்டிய பணிகளை மேற்கொண்டார். பரவையாரும் சங்கிலியாரும் முறையே கமலினி, அனிந்திதையாகி உமாதேவியாருக்குத் தாங்கள் செய்துவந்த தொண்டைச் செய்து வந்தார்கள்.

## திருநீலகண்டநாயனூர்

சிதம்பரத்திலே குயவர் குலத்திலே பொய்சொல்லல் சிறிதும் இல்லாத சிவபக்தி மிக்க தொண்டர் ஒருவர் இருந்தார். இவர் தம்முடைய குலத்தொழிலாகிய மட்கலங்களை வனைந்து விற்றுச் சீவித்து வந்தார். அத்துடன் சிவனடியார்களுக்குத் திருவோடுகள் வனைந்து கொடுத்தும் வந்தார். இத்தொண்டர் இறைவனது திருநீலகண்டத்தின்மேல் மிகுந்த பக்தி உடையவராக விளங்கினூர்; இக்காரணத்தால் இவருக்குத் திருநீலகண்ட நாயனூர் என்னும் பெயர் உண்டாயிற்று. தொண்டர் வேறு ஒரு பெண்ணிடம் சிநேகம் கொண்ட காரணத்தால் இவரது மனைவியார் "திருநீலகண்டம் ஆணையாக எம்மைத் தீண்டாது விடுக" என்று சபதம் செய்தார் இதனைக் கேட்ட தொண்டர் கற்பிலே திறந்த மனைவியார் மட்டுமன்றிப் பிற பெண்களையும் தொடேன்" என்று சபதம் எடுத்தார். வருடங்கள் பல சென்றன. தொண்டரும் மனைவியாரும் வயோதிபத்தை அடைந்தார்கள். ஆனுல் தமது சபதத்தைத் தவறுது கடைப்பிடித்து வந்தார்கள். இறைவன் இவர்களின் பக்திநெறியை உலகுக்குக் காட்ட விழைந்தார்.

இறைவன் சிவயோகி வடிவத்தில் தொண்டர் இல்லம் வந்தார் திருவோடு ஒன்றைக் கொடுத்துத் தாம் கேட்கும்போது தருமாறும்

பணித்தார். தொண்டர் அந்த ஓட்டை வாங்கிச் சேமித்து வைத்தார். நாட்கள் பல சென்றன. சிவபெருமானுகிய சிவயோ கியார் மீண்டும் வந்தார். நாம் முன்னர் தந்த திருவோட்டை இப்பொழுது தாரும் என்ருர். தொண்டர் சென்று தாம் வைத்த இடத்தில் பார்த்தபோது ஓட்டைக் காணவில்லை. தொண்டர் சிவயோகியாரிடம் வந்து அந்த ஒடு வைத்த இடத்தில் காணவில்லை. புதிய ஒடு தருவேன் என்ருர். இதனுல் கோபங் கொண்ட சிவயோ கியார் எனது மண் ஒடு அல்லாமல் பொன்னேடு தந்தாலும் ஏற்கேன் என்ருர். ஒடு காணவில்லை என்பதைச் சத்தியம் செய்து தருமாறு சிவயோகியார் கேட்டார். இவ் வழக்குத் தில்லைவாழ் அந்தணரின் சபைக்கு அழைத்துச் செல்லப்பட்டது. அவர்களும் மனைவியைக் கைப்பிடித்துச் சத்தியம் செய்யுமாறு பணித்தனர். தொண்டரும், மனைவியாரும் திருப்புலீச்சரத்துக்கு அருகாமையில் உள்ள குளத்திற்குச் சென்ருர்கள். ஒரு மூங்கிற் றண்டின் இருபக் கங்களையும் பிடித்துக் கொண்டு தமது சபதத்தைச் சொல்லிக் கொண்டு குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்தார்கள். இளமைத் தோற்றத்துடன் வெளியேறினுர்கள். சிவபெருமான் இடபாரூட ராகக் காட்சி கொடுத்தார், திருநீலகண்டரும் மனைவியாரும் சிவ லோகத்தை அடைந்து பேரின்பத்தை அடைத்தார்கள்.

## இயற்பகைநாயனுர்

காவிரிசங்கமம் என்னும் விசேட தீர்த்தம் பொருந்திய காவி ரிப்பூம் பட்டணத்திலே, வைசியர் குலத்திலே, குருலிங்க சங்கம பத்தியிற் சிறந்தவரான இயற்பகையார் என்பவர் ஒருவர் இருந்தார் அவர் இல்லறத்திலே இருந்து விபூதி, உருத்திராக்கம் தரித்த சிவ னடியார்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து வந்தார். இவரது அடியார் பத்தியை உலகுக்குக் காட்ட விரும்பிய இறைவன் பிரா மண வேடங் கொண்டு விபூதி திருமேனியில் பிரகாசிக்க இயற்பகை யார் வீட்டிற்கு எழுந்தருளினுர். இயற்பகையார் மிகுந்த அன்புடன் வரவேற்று உபசரித்து ஆசனத்து இருத்தி வழிபட்டார். பிராமண வேடங் கொண்ட சிவபெருமான் அவரைப் பார்த்து ''யான் உம் மிடத்து உள்ள ஒரு பொருளை விரும்பி வந்தேன் அதனைத் தருவ தற்குச் சம்மதம் ஆயின் சொல்லுவேன்'' என்ருர். இயற்பகையார் ''என்னிடம் இருக்கும் பொருள் எதுவானுலும் தருவேன்'' என்ருர், ''பிராமணர் உம்முடைய மனைவியை விரும்பி வந்தேன்" என்ருர் இதனைக் கேட்ட இயற்பகையார் மிக மகிழ்ந்து மனை வியாரை அழைத்து ''நான் இன்றைக்கு உன்னை இச் சிவனடியா ருக்குக் கொடுத்து விட்டேன்'' என்ருர். இதனைக்கேட்ட மனைவியார் திகைத்தார். பின்னர் கணவன் கட்டளைப்படியே நடக்கவேண்டும் எனத் தெளிந்தார்.

பிராமணவடிவத்தில் வந்த இறைவன் இயற்பகையாரைப் பார்த்து உமது பந்துக்கள் துன்புறுத்தா வண்ணம் நீவிர் எம்முடன் வந்து ஊர் எல்லையில் விடவேண்டும் என்றார். இயற்பகையார் போர்க் கோலம் பூண்டு அவர்களுக்குத் துணையாகச் சென்றார் இச் சமாச்சாரத்தைக் கேள்வியுற்ற சுற்றத்தவர்கள் கோபத்தோடு வந்து இப் பெண்ணைப் பிராமணர்க்குக் கொடுக்கவிடோம் என்று தடுத்தார்கள். பின்னர் இயற்பகையாருக்கும் சுற்றத்தவர்கட்கும் பெரும்போர் நடைபெற்றது. இயற்பகையார் வாளினாலே அனைவரையும் வெட்டி வீழ்த்தினார், இறுதியாகச் திருச்சாய்க்காடு என்னும் சிவஸ்தலத்துக்கு அண்மையில் வந்ததும் இறைவன் மறைந்தருளினார்; பிராமணரைக் காணாது இயற்பகையார் திகைத்தார். இறைவன் இடபாரூடராகக் காட்சி கொடுத்தார்.

இயற்பகையாரும் மனைவியாரும் வணங்கினார்கள். அவர்களுக்குச் சிவலோக வாழ்வு இறைவனால் கொடுக்கப்பட்டது. யுத்தத்திலே இறந்த சுற்றத்தவர்கள் அனைவரும் வானுலகத்தை அடைந்தார்கள்.

## இளையான்குடி மாறநாயனார்

இளையான்குடி என்னும் ஊரிலே வேளாளர் குலத்திலே, வேளாண்மையால் வரும் பொருளைச், சிவனடியார்களுக்குச் செலவிட்டு மகேசுரபூசை செய்து வருபவராகிய மாறனார் என்னும் ஒருவர் இருந்தார், இவ்வாறு மாறனார் மகேசுரபூசை செய்து வரும் நாளில் இவரது சிவபுண்ணியத்தினாலே செல்வம் அதிகரித்தது. குபேரனை ஒத்தவராக வாழ்ந்த போதிலும் மகேசுரபூசை செய்தலாகிய தொண்டைத் திறம்படச் செய்துவந்தார். மாறனார் வறுமை வந்த போதும் இத் தொண்டினின்றும் தவற மாட்டார் என்பதை உலகுக்குக் காட்ட விரும்பிய இறைவன் மாறனாரது செல்வம் யாவும் சுருங்கச் செய்தார், ஆனால் நாயனாரோ மகேசுரபூசையைத் தங்கு தடையின்றிச் செய்துவந்தார். தம்மிடம் உள்ள நிலங்களை விற்றும், கடன் வாங்கியும் இத் தொண்டைத் தவறாது செய்வாராயினர். ஓர் தினம் மழை அதிகமாகப் பெய்தது. ஒருவரிடமும் கடன் வாங்கவும் முடியவில்லை. பசி மிகுதியுடன் மாறனார் வீட்டைப் பூட்டி விட்டு உறங்கச் சென்றார். அந்நேரத்தில் பரமபதியானவர் சைவ வேடத்தில் எழுந்தருளி வந்து நாயனாரின் வீட்டுக் கதவைத் தட்டி எழுப்பினார். நாயனார் கதவைத் திறந்து சைவரை உள்ளே அழைத்துச் சென்று மழையினால் நனைந்த அவரது மேனியை வஸ்திரம் கொண்டுதுடைத்து ஆசனத்தில் இருத்தினார். பின்னர் சிவனடியாருக்கு அமுதூட்டுவதற்கு மாறனாரும் மனைவியாரும் விரும்பினார்கள். வீட்டிலே யாதொரு பதார்த்தமும் இல்லை. அயலவர்களிடமும் வாங்கமுடியாது இறுதில் அன்று பகல் வயலில் விதைக்கப்பட்ட நெல் முளைகளை

மாறனூர் கூடையிலே வாரிக் கொண்டு வந்தார். வீட்டுக் கூரையிலே உள்ள வரிச்சுக்களை விறகிற்காக அறுத்தார். நாயனாரின் மனைவி ஈரம்போக்கி அரிசியாக்கிப். பின்சோறு சமைத்தார். புறக்கடைத் தோட்டத்தில் உள்ள சிறுபயிர்களை நாயனார் பிடுங்கி வர மனைவியார் அவற்றைக் கொண்டு வெவ்வேறு கறிகள் சமைத்தார். இவையா வும் நிறைவேறியதும் சிவனடியாருக்கு அருகாமையிலே சென்று அழைக்க அவர் சோதிவடிவாகத் தோன்றியருளினார். மாறனாரும் மனைவியாரும் திகைத்தார்கள். பரமசிவன் இடபாரூடராகக் காட்சி கொடுத்து நம்முடைய அடியவர்களை அமுது செய்வித்தலாகிய தொண்டைத் தவறாது செய்தமையினாலே நீ உன் மனைவியோடு நம்முடையபதந்தை அடைவாய்என்று அநுக்கிரகஞ் செய்தருளினார்.

## மெய்ப்பொருள் நாயனார்

சேதிநாட்டிலே, திருக்கோவலூரிலே, மலையமா நாட்டு அரச ரும், வேதாகமங்களை அறிந்தவரும், சிவனடியார்களின் வேடத்தையே மெய்ப்பொருள் என்று மதிப்பவருமாகிய மெய்ப்பொருள் நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார், தம்மை எதிர்ப்பவர்களை ஜெயங் கொண்டும் ஆலயங்களில் நித்திய நைமித்தியங்களை நடாத்தியும், சிவனடியார்கள் வேண்டுவனவற்றைக் கொடுத்தும் வந்தார்.

இவ்வாறு இருக்கும் நாளில் முத்திநாதன் என்னும் ஓர் அரசன் இந்த மெய்ப்பொருள் நாயனாருடன் பலமுறை போர் செய்து தோற்று விட்டான். இறுதியாக இவரை வஞ்சனையால் வெல்லக் கருதினான். இவரது அடியார் பக்தியை அறிந்த அவ் வஞ்சகன் ஒரு சிவனடியார் போல வேடந்தரித்து ஒரு புத்தகக்கவளிக்குள்ளே உடைவாளை மறைத்து வைத்துக் கொண்டு மெய்ப்பொருள் நாயனா ருடைய மாளிகையை அடைந்தான். வாயிற் காவலாளர்கள் சிவ னடியார் என நினைத்து உள்ளே செல்லவிட்டார்கள். இறுதி வா யிற் காவலனாகிய தத்தன் என்பவன் இப்பொழுது அரசர் நித்திரை செய்கின்றார். சமயம் அறிந்து போகவேண்டும் என்றான் அப்பொ ழுது கபடதாரியாகிய முத்திநாதன் யான் அவருக்குச் சாஸ்திரம் கற்பிக்கப் போகிறேன் என்று சொல்லி உள்ளே சென்றான். அங்கே மெய்ப்பொருள் நாயனார் நித்திரை செய்ய மனைவியார் பக்கத்தி லே இருந்தார். கபடதாரியைக் கண்ட மனைவியார் நாயகரை எழுப்ப மெய்ப்பொருள் நாயனார் எழுந்து அவரை வணங்கினார்.

கபடதாரியாகிய முத்திநாதன் மெய்ப்பொருள் நாயனாரைப் பார்த்து சைவ ஆகமங்களுள் சிறந்த ஆகமம் ஒன்றை உமக்குப் போதிப்பதற்குக் கொண்டு வந்திருக்கிறேன் பட்டத்தரசி இல்லா மல் நீர் மட்டும் தனியாக இருக்கவேண்டும் என்றார். அதற்கு உடன் பட்ட மெய்ப்பொருள் நாயனார் மனைவியாரை அந்தப்புரத்துக்கு

அனுப்பிவிட்டு வேடதாரியாகிய முத்திநாதனை ஆசனத்தில் இருத்தித் தாம் கீழே இருந்து வணங்கிக் கொண்டிருந்தார். முத்திநாதன் வஞ்சகக்கவளியை அவிழ்ப்பவன் போல அவிழ்ந்து அதற்குள் இருந்த உடைவாளை எடுத்தான் வணங்கிக் கொண்டிருந்த மெய்ப்பொருள் நாயனுரை வாளினுல் குற்றினுன். அப்பொழுது கடைசி வாசலில் நின்ற தத்தன் ஓடிவந்து தனது உடைவாளினுலே முத்திநாதனை வெட்டப் போனுன். அப்பொழுது இரத்தம் சொரிய விழப்போன மெய்ப்பொருள் நாயனுர் தத்தனைத் தடுத்து இவர் சிவனடியார் ஆனபடியால் இவருக்கு ஒரு தீங்கும் ஏற்படாது அழைத்துக் கொண்டு போய் நம்மூர் எல்லையில் விட்டுவா என்ருர். அதன்படியே தத்தன் கபடதாரியை அழைத்துச் சென்று ஊரின் எல்லையில் விட்டுத் திரும்பி வந்து செய்தி சொன்னதும் மெய்ப்பொருள் நாயனுர் தத்தனைப் பார்த்து "நீ இன்றைக்குச் செய்த உதவியை யார் செய்யவல்லவர்'' என்று கூறினுர். அதன் மேல் குமாரர்களையும், மந்திரிமார்களையும் அழைத்து விபூதியின் மேல் உள்ள அன்பை வளர்த்து இராச்சியத்தை நடாத்துமாறு கூறினுர். இறுதியாகச் சபாநாயகரைத் தியானம் பண்ணினுர் சபாநாயகர் மெய்ப்பொருள் நாயனுருக்குக் காட்சி கொடுத்துத் தமது திருவடியிலே சேர்த்தருளினுர்.

## விறன்மிண்ட நாயனுர்

மலையமா நாட்டிலே செங்குன்றூரிலே வேளாளர் குலத்திலே பரமசிவனிடத்திலே மிகுந்த பக்தி கொண்டவரும் சிவனடியார்களிடத்திலே தீவிர பக்தியையுடையவருமாகிய விறன்மிண்ட நாயனுர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவஸ்தலங்களுக்குச் செல்லும் போதெல்லாம் முதலில் சிவனடியார்களை வணங்கிய பின்னரே சிவபிரானை வணங்குவார். இப்படியிருக்கும் நாளில் ஓர் தினம் சுந்தரமூர்த்தி நாயனுர் தேவாசிரிய மண்டபத்தில் இருக்கின்ற அடியார்களை வணங்காமல் சென்ருர். இதனைக் கண்ட விறன்மிண்ட நாயனுர் "அடியார்களை வணங்காமல் செல்கின்றவன் ஞெருண்டன் அடியார்களுக்குப் புறகு அவனை வலிய ஆட்கொண்ட பரபசிவனும் புறகு'' என்ருர். இதனைக் கேட்ட சுந்தரர் அவ் அடியார் கண்மேல் திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தைப் பாடினுர். இதனைக் கண்ட விறன்மிண்ட நாயனுர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். இவரின் அடியார் பக்தியைக் கண்ட பரமசிவனுர் அவரைத்தம் உலகிற்கு அழைத்துத் தம்மைச் சேவிக்கின்ற கணங்களுக்குத் தலைவரார்க்கினுர்.

# அமர்நீதி நாயனுர்

சோழ மண்டலத்திலே பழையாறை என்னும் ஊரிலே வைசியர் குலத்திலே பெருஞ் செல்வம் உடையவரும் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்விப்பரும், சிவனடியார்களுக்கு உடுபுடவை கௌபீனம் முதலியன கொடுப்பவருமாகிய அமர்நீதி நாயனுர் என்பவர் ஒருவர் இருந்தார். நல்லூர் என்னும் சிவஸ்தலத்திலே மகோற்சவம் நடந்தபோது இவர் ஒரு திருமடம் கட்டுவித்து அந்த மடத்திலே அடியார்களுக்குத் திருவமுது செய்வித்து வந்தார். இவ்வாறு இருக்கும் நாளிலே சிவ பெருமானுனவர் ஒரு பிராமணவருணத்துப் பிரமச்சாரி வேடங் கொண்டு விபூதிப்பையும், தண்டிலே கட்டப்பட்ட இரு கௌபீனங்களையும் உடையவராய் அமர்நீதி நாயனுரின் மடத்திற்கு வந்தார். பிரமச்சாரியைக் கண்ட நாயனுர் அன்புடன் வரவேற்றுர். பின்னர் மடத்திலே தங்குமாறும், பிராமணர்களால் சமைக்கப்பட்ட திருவமுதை உட்கொள்ளுமாறும் வேண்டினுர். பிரமச்சாரியானவர் தாம் கங்கையிலே ஸ்நானஞ்செய்து வருவதாகவும் அதுவரை வைத்திருக்குமாறும் ஒரு கௌபீனத்தைக் கொடுத்துச் சென்றுர். அமர்நீதி நாயனுர் கௌபீனத்தைப் பாதுகாப்பான இடத்தில் வைத்தார். சிவபெருமான் கௌபீனத்தை மறையச் செய்தார். மழைபொழியச் செய்தார். மீண்டும் சந்நியாசி வேடத்தில் மழையில் நனைந்த பிரகாரம் திருமடத்தை அடைந்தார். தாம் முன்னர் கொடுத்த கௌபீனத்தைத் தருமாறு நாயனுரைக் கேட்டார். அமர்நீதி நாயனுர் வைத்த இடத்திலும், பிற இடங்களிலும் தேடிப் பார்த்தபோது கௌபீனத்தைக் காணவில்லை, நாயனுர் வேறு கௌபீனத்தைக் கொண்டு வந்தார். பிரமச்சாரி தாம் கொடுத்த கௌபீனத்தையே தருமாறு வற்புறுத்தினுர். இறுதியில் தமது கௌபீனத்தின் நிறையுள்ள கௌபீனம் தருமாறு கூறினுர். நாயனுரிடம் உள்ள கௌபீனங்கள், உடுபுடவைகள் தராசில் போடப்பட்டன. தராசு தாழ்ந்திருந்தது, நவரத்தினங்கள், பொன், வெள்ளி, முதலியன போடப்பட்டபோதும் தராசு சமனுகவில்லை. கடைசியாகப் பிரமச்சாரியின் அநுமதியின் பேரில் அமர்நீதி நாயனுரும், மனைவியாரும், புத்திரரும் தட்டில் ஏறியதும் தராசு சமனுனது. (பிரமச்சாரியாரகிய) சிவபெருமான் இடபாரூடராகக் காட்சி கொடுத்தார். நாயனுரும், மனைவியாரும், புத்திரரும் தராசுத்தட்டே விமானமாகி மேலே கொண்டு சென்று சிவலோகத்தை அடைந்தார்கள்.

*

# எறிபத்த நாயனுர்

கொங்க தேசத்தின் இராஜதானியாகிய கருவூரிலே ஆனிலே என்னும் ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தை வழி படுகின்றவரும், அடியார்களுக்குத் திருத்தொண்டு செய்கின்றவரும், அடியார்களுக்கு ஆபத்து நேருங்கால் அவற்றின்றும் அடியார்களேக் காக்கின்றவரு மாகிய எறிபத்த நாயனுர் என்பவர் வாழ்ந்து வந்தார்,

இந்த நாயனுர் காலத்திலே சிவகர்மி ஆண்டார் என்கின்ற தொண்டர் தினமும் பூமாலே கட்டி ஆனிலே இறைவனுக்குச் சாத்தி வந்தார். ஓர் தினம் சிவகாமி ஆண்டார் ஸ்நானஞ் செய்து நந்த வனத்திலே புஸ்பங்களேக் கொய்து கொண்டு மாலே கட்டுவதற் காகச் சிவாலயத்தை நோக்கி விரைந்தார். அந்நாட்டு அரசனுகிய புகழ்ச் சோழனுடைய பட்டத்து யானே அவ் வழியாலே சென்ற போது சிவகாமியாண்டாரின் பூக் கூடையைப் பறித்துச் சிதறிச் சென்றது. இதனுல் துக்கங் கொண்ட சிவகாமியாண்டார் சிவதா சிவதா என்று சொல்லி ஓல மிட்டார். அவ் வழியாலே சென்ற எறிபத்த நாயனுர் அவ்விடம் சென்று நடந்தவற்றை அறிந்தார். யானேயைப்பின் தொடர்ந்து விரைந்து சென்று தனது மழுவினுலே யானேயின் துதிக்கையை வெட்டினுர். யானேயுடன் சென்ற ஐவரையும் கொலே செய்தார்.

இச் செய்தியைத் தூதுவர்கள் புகழ்ச் சோழ அரசனுக்குத் தெரிவித்தார்கள். போர்க்களத்தை அடைந்த அரசன் நடந்த சமாச்சாரத்தை அறிந்தார். எறிபத்த நாயனுரை அணுகிச் சுவாமீ! யானேயையும் பாகர்களேயும் கொன்றது போதாது என்னேயும் கொல்லவேண்டும் என்று வேண்டினுர். இதனேக் கேட்ட எறிபத்த நாயனுர் தம்முடைய கழுத்திலே வாளேப் பூட்டி அரியத் தொடங்கி னுர், அவ்வமயம் "புஸ்பங்களேச் சிதறச் செய்தவர் இறைவனே" என்று ஓர் அசரீரி கேட்டது எறிபத்த நாயனுர் வாளே எறிந்தார். புகழ்ச் சோழ நாயனுரை வணங்கினுர், புகழ்ச் சோழ நாயனுர் எறிபத்த நாயனுரை வணங்கினுர். இறைவனின் திருவருளினுலே பூக் கூடையில் பூக்கள் நிறைந்தன. யானேயும் பாகர்களும் உயிர் பெற்று எழுந்தார்கள். சிவகாமி ஆண்டார் பூக் கூடையுடன் ஆலயத்துக்குச் சென்ருர். அரசன் யானேயில் ஏறிச் சென்ருர். எறி பத்த நாயனுர் சிவகணங்களுக்குத் தலேவரானுர்.

*

## ஏனுதிநாத நாயனர்

சோழ மண்டலத்திலே எயினனூரிலே சான்றோர் குலத்திலே விபூதியில் மிகுந்த பக்தி கொண்ட ஏனுதிநாதர் என்பவர் இருந்தார். இவர் அரசர்களுக்கு வாள்வித்தை பழக்குவதையே தொழிலாகக் கொண்டவர். அத்தொழிலால் வரும் செல்வத்தைச் சிவனடியார்களுக்குக் கொடுத்து வந்தார். இப்படியிருக்கும் நாளில் இவரைப் போல் வாள்வித்தை பயிற்றும் அதிசூரன் என்பவன் ஒருவன் இருந்தான். ஏனுதிநாதருக்கு வருவாய் கூடியும் அதிசூரனுக்கு வருவாய் குறைந்தும் வந்தது. இதனுல் பொருமை கொண்ட அதிசூரன் ஏனுதிநாதரைப் போருக்கு வருமாறு அழைத்தான், போரில் அதிசூரன் தோற்ருன். ஏனுதிநாதரை வஞ்சனையால் வெல்லக் கருதிய அதிசூரன் தனியுத்தம் செய்யவருமாறு ஏனுதிநாதரை அழைத்தான், ஏனுதிநாதரும் அதற்கு உடன்பட்டார். இருவரும் யுத்த சந்நத்தராகித் தனியிடத்திற்குச் சென்ருர்கள். ஏனுதிநாதர் விபூதியின்மேல் உள்ள பத்தியை அறிந்த அதிசூரன் நெற்றியிலே நிறைய விபூதியைத் தரித்துக் கொண்டு அதைப் பரிசினுலே மறைத்தபடி சென்ருன், போர் தொடங்கியதும் நெற்றியை மறைத்த பரிசைக் கீழே பிடித்தான். விபூதியைக் கண்டதும் ஆ கெட்டேனே என்று சொல்லிய ஏனுதிநாதர் எதிர்ப்பவர்போல நின்ருர். பாதகனுகிய அதிசூரன் அவரைக் கொன்ருன், பரமசிவன் ஏனுதிநாதருக்குக் காட்சி கொடுத்துத் தம்முடைய திருவடியிலே சேர்த்தருளினுர்.

## கண்ணப்ப நாயனர்

பொத்தப்பி நாட்டிலே உடுப்பூரிலே வேடர்களுக்கு அரசனுகிய நாகன் என்பவன் ஒருவன் இருந்தான். அவனது மனைவியின் பெயர் தத்தை. இருவருக்கும் புத்திர பாக்கியம் இல்லாமையினுல் அதிக துக்கங் கொண்டு குறிஞ்சிக் கடவுளாகிய முருகப் பெருமானை வழிபட்டு அக்கடவுளுக்குச் சேவற் கோழிகளையும் மயில்களையும் கொடுத்து வந்தார்கள். அந்த முருகக் கடவுளின் திருவருளினுலே தத்தை கருப்பவதியாகி ஓர் ஆண் குழந்தையைப் பெற்ருள். நாகன் கையிலே தூக்கும் போது திண்மையாய் இருந்த படியால் குழந்தைக்குத் திண்ணன் என்று பெயர் இட்டார்கள். திண்ணனுர் வளர்ந்து உரிய பருதத்திலே வில்வித்தையும் பயின்ருர். நாகன் வயோதிபத்தை அடைந்தமையினுல் திண்ணனுரையே அரசனுக்கினுன்

ஓர் தினம் திண்ணனுர் மற்றும் வேடர்களோடும் வேட்டைக்குச் சென்ருர். ஒரு பன்றியைக் கொல்லுவதற்கு அம்பு எய்த போது அது மிகுந்த விசையுடன் ஓடியது. திண்ணனுரும் அதைத் தொடர்ந்து ஓடினுர். நாணன், காடன் என்போரும் பின் தொடர்ந்தார்கள். நெடுந் தூரம் சென்றபின் திண்ணனுர். பன்றியை உடைவாளினுலே குற்றி இறக்கச் செய்தார். உடன்சென்ற இரு வேடுவர்களும் திண்ணனுரைப் பார்த்து நாம் களைப்படைந்து விட்டோம்.

பன்றி இறைச்சியை நெருப்பிலே காய்ச்சித் தண்ணீர் குடித்துச் செல்வோம் என்றுர்கள். பின் மூவரும் பொன்முதலி ஆற்றங்கரைக் குச் சென்றுர்கள். அங்கே காடன் இறைச்சியை நெருப்பிலே வாட்டினுன். நாணனேடு திண்ணனுர் மலையிலே ஏறிக் குடுமித்தேவரை வழிபடச் சென்றுர். சிவலிங்கப் பெருமானைக் கண்டதும் அன்புருவ மானுர். குழந்தையைக் கண்ட மாதாவைப் போல ஓடிச்சென்று தழுவி முத்தமிட்டார். பின்னர் சுவாமி தனித்து இருக்கின்றுரே என்று கவலை கொண்டார். சுவாமிக்கு உணவு கொடுக்க விரும்பி ஆற்றங்கரையை அடைந்தார். அங்கே தீக்கடைக் கோலினுல் காடன் இறைச்சிகளைப் பதமாகவாட்டி வைத்திருந்தான். திண்ணனுர் இறைச் சியைச் சுவை பார்த்து இலையிலே வைத்தார். ஆற்றுநீரை வாயிலே முகந்து கொண்டார். பூக்களைக் குடுமியிலே செருகிக் கொண்டார். குடுமித்தேவரை நோக்கிப் புறப்பட்டார். இவரின் செய்கையைக் கண்ட நாணனும், காடனும் தெய்வப்பயித்தியம் பிடித்து விட்ட தாகக் கருதித் தேவராட்டியை அழைத்து வரச்சென்றுர்கள்.

திருக்காளத்திமலையை அடைந்த திண்ணனுர் காற் செருப்பினுலே சிவலிங்கத்தின் மீதிருந்த பூக்களை நீக்கினுர். வாயில் இருந்த நீரை உமிழ்ந்தார். பூக்களைச் சாத்தினுர். இறைச்சியை முன்பாகப் படைத் தார். "சுவாமீ, இந்த இறைச்சி பதம் பார்த்து வைக்கப்பட்டிருக்கின் றது. இவற்றை உண்ணவேண்டும்'' எனவேண்டி உண்பித்தார். இரவு நேரத்தில் அம்பும் வில்லும் வைத்துக் காவல் செய்தார். மறுநாள் வைக றையிலே சுவாமிக்கு மாமிச உணவு கொண்டு வரும் பொருட்டு மலைச் சாரலுக்குப் போனுர். திருக்காளத்தி அப்பரைத்தினமும் பூசிக்கும் சிவகோச்சாரியார் என்னும் அந்தணர் தமது நியமங்களை முடித்துக் கொண்டு ஆலயத்தை அணுகினுர். அங்கே இறைச்சியும் எலும்பும் கிடக்கக் கண்டு மிகவும் மனம்வருந்தி அவற்றைத் திருவலகினுல் மாற் றினுர். மீண்டும் ஸ்நானஞ் செய்து சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகளை நிறைவேற்றினுர். திண்ணனுர் தினமும் பகலில் வேட்டையாடியும் இரவில் காவல் காத்தும் வந்தார். சிவகோச்சாரியாரும் தினமும் சுத்தி செய்து பூசையை நிகழ்த்தி வந்தார். அதனுல் சிவகோச்சாரியார் மனம் மிகவும் வேதனையடைந் திருந்தது. இவ்வாறு நான்கு நாட்கள் நிறைவேறின. ஐந்தாம் நாள் இரவு சிவகோச்சாரியாருடைய கனவிலே தோன்றிய எம்பெருமான் ''நம்பக்தனுடைய செய்கைகளை நீ மறைந் திருந்து பார்ப்பாயாக" என்று ஆணையிட்டார்.

வேட்டைக்குச் சென்ற திண்ணனுர் இறைச்சியும், திருமஞ்சன மும், புஸ்பமும் எடுத்துக் கொண்டு சுவாமி சந்நிதானத்துக்கு விரைந் தார். குடுமித்தேவரின் வலக்கண்ணிலிருந்து இரத்தம் சொரியத் தொடங்கியது. இதனைக்கண்ட திண்ணனுர் தாம் கொண்டுவந்த பொருட்களைச் சிதறிவிட்டார். சுவாமிக்கு இவ்வாறு செய்தவர் யார் என்று சொல்லி நாலாபக்கமும் சென்று பார்த்தார். பின்னர் மருந் துச் செடிகளைப் பிடுங்கி வந்து கண்ணிலே பிழிந்து விட்டார். அப் போது இரத்தம் தடைப்படாமையைக் கண்ட திண்ணனுருக்கு

''ஊனுக்கு ஊனிடல் வேண்டும்'' என்ற பழமொழி ஞாபகத்துக்கு வந்து உடனே மகிழ்ச்சி கொண்ட திண்ணனூர் சுவாமி சந்நிதானத்திலே இருந்து அம்பை எடுத்துத் தம்முடைய கண்ணைத் தோண்டிச் சுவாமியினுடைய கண்ணிலே அப்பினூர். உடனே இரத்தம் தடைப்பட்டது திண்ணனூர் ஆனந்தக் கூத்தாடினூர். மேலும் திண்ணனூரின் தீவிர பக்தியைச் சிவகோச்சாரியாருக்குக் காட்ட விரும்பிய எம்பெருமான் இடக்கண்ணிலிருந்தும் இரத்தம் சொரியச் செய்தார். இதனைக் கண்ட திண்ணனூர் ''மருந்து கண்டு விட்டேன். சுவாமியின் நோயைத் தீர்ப்பேன்'' என்று கூறிக்கொண்டு தமது இடக் கண்ணைத் தோண்ட முனைந்தார். இரண்டாவது கண்ணும் தோண்டப்பட்டால் கண்ணை அப்ப வேண்டிய இடம் தெரியாது. இதற்காகத் தமது செருப்புக் காலைச் சுவாமியின் கண்ணருகே ஊன்றினூர். கண்ணைத் தோண்டுவதற்காக அம்பை வைத்தார். எம்பெருமான் இலிங்கத்தினின்றும் தோன்றி ''நில்லு கண்ணப்ப'' எனக்கூறி அவரது கையைப் பிடித்துக் கொண்டார். இந் நிகழ்ச்சிகளை யெல்லாம் கண்டு களித்த சிவகோச்சாரியார் பல முறை வணங்கினூர். தேவர்கள் பூ மழை பொழிந்தார்கள். திண்ணனூரின் திடமான பக்தி நெறியை வியந்த எம்பெருமான் ''கண்ணப்பா நீ நமக்கு வலப்பகத்தில் நில்'' என்று அருள் புரிந்தார்.

## குங்குலியக் கலயநாயனூர்

சோழமண்டலத்திலே, திருக்கடவூரிலே, பிராமண குலத்திலே சிவபக்தி மிக்க கலயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருவீரட்டானம் என்னும் கோயிலில் வீற்றிருக்கின்ற பரமசிவனுக்குத் தினமும் குங்கிலியத் தூபம் இட்டு வந்தார். பரமசிவனுடைய திருவருளினூலே அவருக்கு வறுமை ஏற்பட்டது. அங்ஙனம் வறுமை வந்தபோது கலயனூர் தமது நிலபுலன்களை விற்றுத் தொண்டைத் தவறாது செய்து வந்தார். இவரது நிலமை குறித்து மக்களும், சுற்றத்தார்களும் வருந்தினூர்கள்.

ஓர் தினம் கலயநாயனூரின் மனைவியார் அரிசி வாங்கிவருமாறு தமது தாலியைக் கணவனூரிடம் கொடுத்து அனுப்பினூர். கலயனூர் தாலியைக் கொண்டு செல்லும் போது வழியிலே ஒரு வணிகன் குங்கிலியப் பொதி கொண்டு வருவதைக் கண்டார். சுவாமிக்குத் தூபம் இடவேண்டும் என்னும் விருப்பினூலே கையில் இருந்த தாலியைக் கொடுத்துக், குங்கிலியப் பொதியை வாங்கிக் கொண்டு ஆலயத்துக்கு விரைந்து சென்று தூபம் இடும் பணியைச் செய்தார், அவரது வீட்டிலே மனைவி மக்கள் பட்டினியால் வாடினூர்கள். அன்றிரவு கலயனூர் வீட்டிலே பொற்குவியலும், நெற்குவியலும் நிறைந்திருக்குமாறு இறைவன் அருள் செய்தார். கலயநாயனூரின் கனவிலே இறைவன் தோன்றி ''நீ வீட்டிற்குச் சென்று பாலும் அன்னமும் உண்டு உன் துன்பத்தை ஒழி'' என்று அருள் செய்தார்.

வீட்டிற்குச் சென்ற குங்குலியக் கலயநாயனர் பொற்குவியலேயும் நெற்குவியலேயும் கண்டு மனேவியாரை நோக்கி "இவையெல்லாம் எப்படி வந்தன?" என்று வினவினர். மனேவியார் "எல்லாம் எம்பெருமான் திருவருளால் வந்தன," என்ருர். அதன் மேல் மனேவியார் உணவு சமைத்தார். சிவனடியார்களே அன்போடு அழைத்து அமுது செய்வித்தார்கள்.

திருப்பனந்தாள் என்ற திருப்பதியிலே வீற்றிருக்கின்ற சிவலிங்கம் சாய்ந்திருந்தது. இதனே நிமிரச் செய்து வழிபடுவதற்கு இராஜாவானவர் தமது யானேகளேப் பூட்டி இழுப்பித்தார். நிமிரவில்லே. இதனுல் அவர் பெருங்கவலே கொண்டிருந்தார். இதனேக் கேள்வியுற்ற குங்குலியக் கலயநாயனர் பக்தி பரவசத்துடன் அவ்விடம் சென்று சிவலிங்கத்திலே கட்டப்பட்ட கயிற்றைத் தமது கழுத்திலே கட்டியிழுத்தார். உடனே சிவலிங்கம் நிமிர்ந்தது, அரசனும் மற்றையோரும் குங்குலியக் கலயனரின் பக்தியைப் போற்றினர்கள். இதல் மேல் கலயனர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர், திருநாவுக்கரசு நாயனர் முதலாய நாயன்மார்களேயும் தமது இல்லத்துக்கு அழைத்து அமுது செய்வித்தார். இவ்வாருகப் பலதிருப்பணிகளேயும் செய்து குங்குலியக் கலயநாயனர் சிவபதம் அடைந்தார்.

## மானக்கஞ்சாற நாயனர்

கஞ்சாறூரிலே வேளாளர் குலத்திலே, அரசர்களிடத்திலே பரம்பரையாகச் சேனதிபதி உத்தியோகம் வகிக்கும் குடியிலே அடியார் பக்தியில் சிறந்த மானக்கஞ்சாற நாயனர் என்பவர் இருந்தார். அவர் சிலகாலம் பிள்ளேப்பேறின்மையால் பரமசிவனே உபாசனே பண்ணினர். அப்பரமசிவனுடைய திருவருளினலே ஒரு பெண் குழந்தையைப் பெற்ருர். அப்பெண் வளர்ந்து மணப்பருவத்தை அடைந்தாள். ஏயர்கோன் கலிக்காமநாயனர் என்பவர் சில முதியவர்கள் மூலம் அப்பெண்ணேத் தமக்குத் திருமணம் பேசுவித்தார். சுபதினத்திலே மணமகன் கஞ்சாறூருக்குச் செல்ல ஆயத்தமானர்.

கருணநிதியாகிய பரமசிவன் சிவவேடந் தாங்கி மானக்கஞ்சாறர் வீட்டிற்குச் சென்ருர். அவர் சிவனடியாரை வரவேற்று வணங்கினர். மேலும் சிவனடியார் வேடத்தில் வந்த பரமசிவன் மானக்கஞ்சாறரை நோக்கி "இவ்விடம் என்ன மங்கல கிருத்தியம் நடக்கப்போகிறது?" என்று வினவினர். மானக்கஞ்சாறர் அடியேனுடைய புத்திரிக்கு விவாகம் நடக்கப்போகிறது, என்ருர். மேலும் மகளே அழைத்துவந்து சிவனடியாரை வணங்கச் செய்தார். சிவனடியார் அப்பெண்ணே ஆசீர்வதித்தார். மானக்கஞ்சாறரின் அடியார்

பக்தியை உலகுக்குக் காட்ட விரும்பிய பரமசிவன் மானக்கஞ்சாற ரைப் பார்த்து இப்பெண்ணின் தலைமயிர் நமக்குப் பஞ்சவடிக்கு உதவும் என்றார். உடனே மானக்கஞ்சாறர் வாளினாலே தமது மகளின் கூந்தலை அரிந்து அச்சிவனடியார் கையிலே நீட்டினார். எம்பெரு மான் இடபாருடராகக் காட்சிகொடுத்தார். மானக்கஞ்சாறருக் குத் தம்முடைய சந்நிதியிலே இருக்கும் பேற்றைக் கொடுத்தரு ளினார். பெண்ணின் கூந்தல் முன்போலாயது. கலிக்காமர் அப் பெண்ணை விவாகம் செய்துகொண்டு தமது ஊருக்குச் சென்றார்.

## அரிவாட்டநாயனார்

சோழமண்டலத்திலே கணமங்கலம் என்கின்ற ஊரிலே வேளாளர் குலத்திலே சிவபக்தியிற் சிறந்தவரும் இல்லறத்தை நல் லறமாக நடாத்துகின்றவருமாகிய தாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். இவரிடம் செல்வமும் குறைவின்றி இருந்தது. தாய னார் தினமும் செந்நெல்லரிசியும் செங்கீரையும், மாவடுவும் பரம சிவனுக்குக் கொண்டுசென்று படைத்து வந்தார். இவ்வாறு செய்து வரும் நாளிலே இறைவனுடைய திருவருளினாலே இவருக்கு வறுமை உண்டாயிற்று. வறுமை வந்த போதும் தாம் செய்து வந்த தொண்டைத் தவறவிடவில்லை. கூலிக்கு நெல் அறுத்து அத னால் வரும் ஊதியத்தைக் கொண்டு சுவாமிக்குத் திருவமுது செய் யும் தொண்டைத் தவறாது செய்து வந்தார். இவ்வாறு நடக்கும் நாளில் தமக்கு உணவு இல்லாது பெரும் கஷ்டப்பட்டார். அவ ரது மனைவியார் கொல்லையில் உள்ள இலைகளைப் பிடுங்கிச் சமைத்து வைக்க அதனை உண்டுவந்தார். இலைகளும் முடிந்தபின்னர் தண் ணீரை மட்டும் உட்கொண்டு வந்தார்.

ஓர்தினம் சுவாமிக்குப் படைக்கும்பொருட்டுச் செந்நெல் அரிசியும் செங்கீரையும் மாவடுவும் எடுத்துக்கொண்டு சென்றார். மனைவியார் பஞ்சகவ்வியம் எடுத்துக்கொண்டு அவருக்குப்பின் சென்றார். தாயனார் பசிக்களையினாலே தள்ளாடித் தவறிவிழ, மனை வியார் விழாதவாறு தடுத்தார். அப்போ கொண்டுசென்ற பொருட்கள் யாவும் சிதறிவிட்டன. இதனால் மனவேதனையுற்ற தாயனார் அரிவாளினாலே தமது கழுத்தை வெட்டத் தொடங்கி னார். பிரபஞ்சம் எங்கும் வியாபித்திருக்கும் பரமசிவன் இடபாரு டராகத் தோன்றித் தமது கையினாலே தடுத்தார். தாயனாரைப் பார்த்து "நீ உமது மனைவியோடு சிவலோகத்துக்கு வருவாயாக," என்று அருள் செய்தார். அரிவாளினாலே வெட்டப்போனமையால் இவருக்கு அரிவாட்டநாயனார் என்னும் பெயர் உண்டாயிற்று.

## ஆனாய நாயனார்

மழநாட்டிலே மங்கலவூரிலே ஆயர் குலத்திலே சிவபக்தியிற் சிறந்த ஆனாயர் என்பவர் இருந்தார். அவர் வேய்ங்குழலிலே ஸ்ரீ பஞ்சாட்சரத்தைச் சத்தசுரம் பொருந்த வாசித்துப் பசுநிரைகளுக்கும் மக்களுக்கும் புகட்டி வருவார். இவரது வேய்ங்குழலைக் கேட்டுப் புற்களை மேய்ந்த பசுக்கூட்டங்கள் அசைவிடாமல் மெய் மறந்து நின்றன. பசுக்கன்றுகள் பால்குடித்தலை மறந்து நின்றன. காட்டு மிருகங்கள் எல்லாம் இசையைக் கேட்டு மெய்மறந்து சமீபத்தில் வந்தன. விஞ்சையர்கள், தேவர்கள், கின்னரர்கள் யாவரும் இசைமயமாயினர். பாம்புகள், மான், மரை, சிங்கம், புலி முதலாய மிருகங்களும் இசையைக் கேட்டு அசைவற்று நின்றன. இசையின் ஒலத்தைக் கேட்ட இறைவன் பார்வதி சமேதராகக் காட்சி கொடுத்தார். ஆனாயநாயரைப் பார்த்து மெய்யன்பனே! நம்முடைய அடியார்கள் உன்னுடைய வேயங்குழலிசையைக் கேட்கும் பொருட்டு நம்முடைய உலகத்திற்கு வருவாயாக என்று அருள் புரிந்தார், ஆனாயர் இறைவன் பக்கத்தில் வேய்ங்குழல் வாசிப்பதற்காகத் திருக்கைலாயத்தை அடைந்தார்.

## மூர்த்தி நாயனார்

பாண்டி நாட்டிலே, மதுராபுரியிலே வைசியர் குலத்திலே சிவ பக்தியில் மிகவும் திளைத்த மூர்த்திநாயனார் என்பவர் இருந்தார் இவர் அத்தலத்திலே இருக்கின்ற சோமசுந்தரப் பெருமானுக்குச் சந்தனக்காப்புக் கொடுத்து வந்தார். கருணாட தேசத்து அரசன் பாண்டியனோடு யுத்தஞ் செய்து அவனை வென்று அந்நகருக்கு அரசனாயினான். அந்த அரசன் சமணர்களுடைய துர்ப்போதனையினாலே சமண சமயத்திலே சேர்ந்து சிவனடியார்களுக்கு இடுக்கண் செய்து வந்தான். ஆயினும் மூர்த்திநாயனார் தாம் செய்யும் தொண்டைத் தவறவிடாது செய்துவந்தார். மேலும் அரசன் மூர்த்திநாயனாருக்குப் பல கஷ்டங்களை ஏற்படுத்தினான். அவர் சந்தனக்கட்டை வாங்கும் இடங்களில் கொடுக்கவிடாது தடைசெய்தான். மூர்த்தி நாயனார் பல இடங்கள் சென்று தேடியும் சந்தனக்கட்டை வாங்க முடியவில்லை. இதனால் வேதனையுற்ற மூர்த்திநாயனார் சந்தனக் கட்டைக்குப் பதிலாகத் தமது கையைச் சந்தனக்கல்லில் வைத்துத் தேய்த்தார். உதிரம் பெருகியது. நரம்புகள் வெளிவந்தன. "அன்பனே! நீ இச் செய்கையைச் செய்யாதே கொடுமைகள் யாவற்றையும் நீக்கி இந்த நாட்டைப் பரிபாலனஞ் செய்து சிவலோகத்தை அடைவாய்" என்று அசரீரி கேட்டது. மூர்த்திநாயனார் திகைத்தார். இவரது கை முன்போலானது.

கருணுட தேசத்து அரசன் அன்றிரவே இறந்துவிட்டான். மறுநாள் மந்திரிமார்கள் அரசனைக் கொண்டுவருமாறு யானையைக் கண்ணைக்கட்டி விட்டசர்கள். யானை திருக்கோயிலின் புறத்தே மூர்த்தி நாயனுரை அணுகியது. அவரை வழிபாடு செய்தபின் தூக்கித் தம் முதுகிலே வைத்துக்கொண்டு சென்று முடிசூட்டு மண்டபத்தை அடைந்தது. மந்திரிமார்கள் முடிசூட்டுவதற்கு ஆயத்தஞ் செய்தார்கள். மூர்த்திநாயனுர் ''விபூதி, உருத்திராக்கம் ஆகிய சிவ சின்னங்களே ஆபரணங்களாக அணியவேண்டும். அவ்வாறு அணிவதென்ருல்தான் அரசாள்வேன்,'' என்ருர். அதற்கு மந்திரிமார் ஒப்புக்கொண்டார்கள். சுபதினத்திலே மூர்த்திநாயனுருக்கு முடி சூட்டப்பட்டது. அவர் முடிசூடியதும் சோமசுந்தரக் கடவுளின் ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்து விபூதி, உருத்திராக்கம் முதலியன தரித்துக்கொண்டு அரண்மனைக்கு வந்தார். பின்னர் சிங்காசனத்தில் இருந்து சைவசமயமும் சிவசின்னங்களும் சிறந்து விளங்குமாறு பலகாலம் அரசாண்டு இறுதியில் சிவலோகவாழ்வைப் பெற்ருர்.

## முருக நாயனுர்

சோழமண்டலத்திலே, திருப்புகலூரிலே, பிராமண குலத்திலே முருகநாயனுர் என்பவர் இருந்தார். இவர் மிகுந்த சிவபக்தியுடையவர். தினமும் சூரியன் உதிக்குமுன் எழுந்து ஸ்நானம், சந்தியா வந்தனம் என்பன செய்வார். அதன்மேல் பூக்கூடையுடன் சென்று பூக்களைப் பறிப்பார். தனியிடத்திலே இருந்து பலதரப்பட்ட மாலைகளைத் தொடுப்பார். தம்மால் கட்டப்பட்ட மாலைகளை ''வர்த்தமானீச்சரம்'' என்னும் ஆலயத்திலுள்ள இறைவனுக்குச் சாத்தி அர்ச்சனை பஞ்சாட்சரசெபம் முதலாயின செய்து வழிபடுவார் இவ்வாறு வழிபாடு செய்துவரும் நாளில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுருக்குச் சினேகிதரானுர். ஞானசம்பந்தரின் அன்பைப் பெற்ற முருகநாயனுர் அவரது திருமணத்திலே கலந்துகொண்டு சிவலோகத்தை அடைந்தார்.

## உருத்திரபசுபதி நாயனுர்

சோழமண்டலத்திலே, திருத்தலையூரிலே, பிராமணகுலத்திலே, பரமசிவனுடைய திருவடிகளிலே மிகுந்த அன்புகொண்ட பசுபதி என்பவர் இருந்தார். இவர் தாமரைத் தடாகத்திலே கழுத்தளவினதாகிய தண்ணீரிலே நின்றுகொண்டு இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துக்கொண்டு பரமசிவனை மறவாத சிந்தனையோடு வேதபுருஷனுக்குக் கண்ணுகிய ஸ்ரீ உருத்திரத்தை ஓதுவார். இவ்வாறு பலகாலம் ஓதியபடியால் இவர் சிவபதம் அடைந்தார். உருத்திரத்தை ஓதிவந்த காரணத்தால் இவருக்கு உருத்திரபசுபதி. நாயனுர் என்னும் பெயர் உண்டாயிற்று.

## திருநாளைப்போவார் நாயனூர்

சோழமண்டலத்திலே, மேற்கா நாட்டிலே ஆதனூரிலே, புலையர் குலத்திலே நந்தனூர் என்பவர் இருந்தார். இவர் பரமசிவனுடைய திருவடிகளை என்றும் மறவாத சிந்தையுள்ளவர். அவ்வூரிலே தமக் கென விடப்பட்ட நிலத்தின் விளைவினாலே சீவனஞ் செய்து வந் தார். அத்துடன் சிவாலயங்களுக்குத் தேவையான தோலும், வாரும் வீணைக்கு யாழுக்கு நரம்பும் அருச்சனைக்குக் கோரோசனையும் கொடுக்கின்றவர். ஆலயங்களின் வாயிற்புறத்திலே நின்று அன்பு மேலீட்டினால் கூத்தாடிப் பாடுகின்றவர்.

ஓர்தினம் திருப்புன்கூருக்குச் சென்று சுவாமிதரிசனம் செய் தார். அங்கே சுவாமியை நேரே தரிசிக்க விரும்பியபோது சுவாமி அவருடைய விருப்பத்தின் பிரகாரம் இடபதேவரை விலகச்செய்து காட்சி கொடுத்தார். அந்தத்தலத்திலே நந்தனூர் ஒரு குளத்தை யும் வெட்டியுள்ளார். இங்ஙனம் இருக்கும்போது நந்தனூருக்குச் சிதம்பரம் சென்று வழிபடவேண்டும், என்ற எண்ணம் உதயமா னது. சிதம்பரஞ் சென்றால், உள்ளே பிரவேசிக்க முடியாதே என்று துக்கித்தார். பின்னர் ஆசைமேலீட்டினால் ''நாளைக்குப் போவேன், நாளைக்குப் போவேன்'' என்று கூறுவார். இவ்வாறு கூறுவதனால் இவருக்குத் 'திருநாளைப் போவார்' என்ற பெயர் ஏற்பட்டது.

நந்தனூர் பக்திமேலீட்டினால் ஓர்தினம் ஊரில் இருந்து புறப் பட்டுச் சிதம்பரத்தை அடைந்தார். அங்கே திருவெல்லையை வலஞ் செய்து வழிபட்டார். பின்னர் உள்ளே போகமுடியவில்லையே என்ற கவலையுடன் நித்திரை செய்தார். அவரது துன்பத்தை நீக்க நடராஜப்பெருமான் திருவுளங் கொண்டார். நந்தனூரது கன விலே தோன்றி ''நீ நெருப்பிலே மூழ்கி எழுந்து நம்முடைய சந் நிதானத்துக்கு வருவாய்'' என்று அருளிச்செய்தார். தில்லைவாழ் அந்தணர்களுடைய சொப்பனத்திலே தோன்றித், திருநாளைப் போவார் பொருட்டு அக்கினி வளர்க்குமாறு கட்டளையிட்டார். விழித்தெழுந்த தில்லைவாழ் அந்தணர்கள் தில்லையிலே கூடி னார்கள். சபாநாயகரின் கட்டளைப்படி கோபுரவாசலுக்கு முன்னே நெருப்பு வளர்க்கப்பட்டது. திருநாளைப் போவார் சபாநாயகரு டைய திருவடிகளைத் தியானஞ் செய்துகொண்டு அக்கினியை வலம் வந்தார். கூப்பிய கரத்துடன் அக்கினியிலே புகுந்தார். அவ்வாறு புகுந்த நந்தனூர் பிராமண முனிவ வடிவத்துடன் எழுந்தார். தில்லைவாழ் அந்தணர்கள் அஞ்சலிசெய்து திருநாளைப்போவாரை ஆலயத்துக்கு அழைத்துச் சென்றார்கள். நந்தனூர் கனகசபையைத் தரிசனஞ் செய்தார். அதன்மேல் அவரைக் காணமல் அனைவரும் திகைத்தார்கள். சபாநாயகர் திருநாளைப் போவாருக்குத் தமது ஸ்ரீபாதங்களைக் கொடுத்தருளினார்.

## திருக்குறிப்புத்தொண்ட நாயனுர்

தொண்டைமண்டலத்திலே காஞ்சீபுரத்திலே ஏகாவியர் குலத்திலே அடியார்களின் குறிப்பறிந்து தொண்டுசெய்கின்ற திருக்குறிப் புத் தொண்டர் என்பவர் இருந்தார். இவர் சிவனடியார்களின் வஸ்திரங்களை ஒலித்துக் கொடுத்தலாகிய தொண்டைத் தவருது செய்துவந்தார். சிவபெருமான் சிவபக்தர் வேடத்தில் அழுக்கடைந்த கந்தையுடன் இத்தொண்டரின் இல்லத்துக்குச் சென்ருர். சிவனடியாரை வரவேற்று உபசாரம் செய்த தொண்டர் அழுக்கடைந்த கந்தையைத் தருமாறும் தாம் அதை ஒலித்துத் தருவதாகவும் கூறினுர். சிவனடியாராகிய கடவுள் தொண்டரைப் பார்த்து, "குளிர் மிகுதியாக இருக்கின்றபடியால் அழுக்கடைந்த கந்தையாஞலும் அதை விட்டுப் பிரியமுடியாது காலந்தாழ்த்தாமல் சீக்கிரம் ஒலித்துக் கொண்டுவந்து தரவேண்டும்," என்ருர்.அதற்கு உடன்பட்ட தொண்டர் கந்தையை வாங்கிச்சென்று ஒலிக்கத் தொடங்கினுர். அப்பொழுது இறைவனது திருவருளினுலே மாலைக்காலம் வந்தது. மழையும் பொழிந்தது. இதனுல் தொண்டர் கவலை கொண்டார். தாம் செய்யவிரும்பிய தொண்டு தவறிவிட்டதே, என்று சொல்லிக் கீழே விழுந்தார். சிவபக்தரின் மேனி குளிரினுல் வருத்தம் உறப்போகின்றதே என்ற கவலைமேலீட்டினுல் தலையைக் கல்லிலே மோதப் புகுந்தார். அப்போது மழை நின்றது சிவபெருமான் இடபாரூடராகக் காட்சி கொடுத்தார். தொண்டரை நோக்கி நீ நம்முடைய பதத்தை அடைவாய் என்று அருள்செய்தார்.

## சண்டேசுர நாயனுர்

சோழமண்டலத்திலே, திருச்சேய்ஞலூரிலே, பிராமண குலத்திலே, காசிப கோத்திரத்திலே எச்சதத்தன் என்னும் அந்தணர் இருந்தார். அவருக்கு அவர் மனைவியாகிய பவித்திரை வயிற்றிலே விசாரசர்மர் என்பவர் திருவவதாரஞ் செய்தார். விசாரசர்மர் ஐந்து வயதிலே வேதங்களையும் ஆகமங்களையும் தாமே அறியும் அறிவைப் பெற்ருர். தாய்தந்தையர் அவருக்கு ஏழு வயதிலே உபநயனஞ் செய்தார்கள். இவர் ஆசாரியர் இல்லாமல் தாமே சகல கலைகளையும் இறைவன் அருளால் அறிந்தார்.

பஞ்சகிருத்தியங்களை நடாத்துகின்றவரும், எண்குணங்களைக் கொண்டவருமாகிய பதி சிவபெருமானே என்றும் அவர் அக் குணங்களைச் செயற்படுத்துவது சிவசக்தியினுல் என்பதும், சைவசமயமே மெய்ச்சமயம் என்பதும் விசாரசர்மருடைய மனதில் பதிந்த உண்மைகளாகும், ஓர்தினம் விசாரசர்மர் தம்மோடு வேத அத்தியனஞ் செய்கின்ற பிள்ளைகளோடு சென்றஞான்று ஓர் ஈற்றுப்பசு இடைய

னுக்குக் குத்தப்போயிற்று. இதனுல் கோபங்கொண்ட இடையன் அப்பசுவிற்குக் கோலினுல் அடித்தான். அதுகண்ட விசாரசர்மர் பசுக்களின் உறுப்பிலே தேவர்களும் தீர்த்தங்களும் இருத்தலை அவனுக்கு அறிவுறுத்தி அன்று முதல் தாமே பசுக்களை மேய்க்கும் திருப்பணியை மேற்கொண்டார். பிராமணர்களின் சம்மதத்துடன் பசுக்களை ஆற்றங்கரைகளிலும், வயல்களிலும் மேயவிட்டுத் தண்ணீர் அருந்தவிட்டு மேய்த்துவந்தார். இதனுல் பசுக்கள் கூடுதலாகப் பாலைப் பொழிந்தன. பிராமணர்கள் அதிக மகிழ்ச்சி அடைந்தார்கள். கன்றுகள் இல்லாமலே பசுக்கள் பாலைச் சொரிந்தன. இதனைக் கண்ட விசாரசர்மர் இப்பாலைக்கொண்டு இறைவனுக்குத் திருமஞ்சனம் ஆட்ட விழைந்தார்.

மண்ணியாற்றங்கரையிலே மணற்றிடலிலே, திருவாத்தி மரத்தின்கீழே சிவலிங்கம் அமைக்கப்பட்டது. கோவிலும் மதிலும் கட்டப்பட்டது. பத்திர புட்பங்கள் பறிக்கப்பட்டன. குடங்களிலே பால் நிரப்பப்பட்டன. பாலினுல் அபிஷேகம் செய்து, புஷ்பங்களால் அருச்சனை செய்து கிடையாதவற்றை மானசீகமாகப் பாவித்து விதிப்படி சிவபூசை செய்துவந்தார். இச் சிவபூசையானது பார்ப்பவர்களுக்கு விளையாட்டாக இருந்தபோதிலும் மிகுந்த பக்தியுடன் நடைபெற்றது. இதன் உண்மையை உணராத ஒருவன் பிராமணர்களிடம் சென்று "விசாரசர்மர் பாலைக்கறந்து வீணுக்குகிருர்" என்று தெரிவித்தான். பிராமணர்கள் எச்சதத்தனிடம் சென்று நடப்பவற்றை முறையிட்டார்கள். கோபங்கொண்ட எச்சதத்தன் மகன் அறியாதபடி ஆற்றங்கரையை அடைந்தான். அருகில் இருந்த குமார மரத்தின்மேல் ஏறி அமர்ந்தான். மகனின் செய்கைகளை அவதானித்தான். பாற்குடங்களை எடுத்து அபிஷேகம் பண்ணுவதைக் கண்டதும் மரத்தினின்றும் இறங்கினுன். கோலினுல் விசாரசர்மருக்குப் பலமாக அடித்தான். அப்போதும் விசாரசர்மர் அசையவில்லை. அதன்மேல் பாற்குடங்களைக் காலினுல் இடறினுன். இதனைக் கண்டதும் விசாரசர்மர் பதைபதைத்தார். தந்தை என்பதையும் மறந்தார். தமக்கு அருகாமையில் இருந்த கோலை எடுத்தார். அது மழுவாக மாறியது. மழுவினுல் தந்தையின் காலைத் துண்டித்தார். மீண்டும் அபிடேக ஆராதனைகள் நடைபெற்றன. இறைவன் இடபாரூடராகக் காட்சி கொடுத்தார். நாமே உமக்குத் தந்தை என மொழிந்தார். "தொண்டர்களுக்கெல்லாம் தலைவரான சண்டேசுர பதவியை உனக்குத் தந்தோம்" என்ருர். அமுதும் பரிவட்டமும் புஷ்பமும் உனக்கே என்ருர். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். விசாரசர்மர் சண்டேசுர பதவி பெற்ருர். எச்சதத்தனும் குற்றங்கள் நீங்கப்பெற்றுச் சிவலோகம் அடைந்தான்.

## திருநாவுக்கரசு நாயனுர்

திருமுனைப்பாடி நாட்டிலே, திருவாமூரிலே, வேளாளர் குலத்திலே, குறுக்கையர் குடியிலே புகழனுர் என்பவர் இருந்தார். அவர் மனைவி யார் பெயர் மாதினியார் இவர்கள் இருவரும் செய்த தவத்தின் பய னுக, திலகவதியார் என்கின்ற புத்திரியும், மருணீக்கியார் என்கின்ற புத்திரனும் திருவவதாரஞ் செய்தார்கள். மருணீக்கியாருக்கு உரிய பருவத்திலே வித்தியாரம்பம் செய்யப்பெற்றுச் சகல கலைகளிலும் வல்லவரானுர். திலகவதியார் வளர்ந்து மணப்பருவம் அடைந்தபோது சேனுதிபதி கலிப்பகையாருக்கும் இவருக்கும் திருமணம் பேசி நிச்சயிக் கப் பட்டது. இத்தருணத்திலே புகழனுர் தேகவியோகம் அடைந்தார், அவருடன் மாதினியாரும் உடன்கட்டை ஏறினுர். திலகவதியா ரையும், மருணீக்கியாரையும் சுற்றத்தவர்கள் தேறுதல் கூறி வளர்த்து வந்தார்கள். திலகவதியாருக்கு நிச்சயிக்கப்பட்ட கலிப்பகையார் போர் செய்யச் சென்றபோது போரில் இறந்துவிட்டார். இதை அறிந்த திலகவதியார் தாமும் இறக்கத் துணிந்தார், தம்பியாராகிய மரு ணீக்கியார் தனக்காக உயிர்வாழுமாறு கேட்டதன் பேரில் இறவாது தம்பியாருக்காக உயிர்வாழ முடிவுசெய்தார்.

யாக்கை நிலையாமையை உணர்ந்த மருணீக்கியார் தம்மிடம் உள்ள திரவியங்கள் யாவற்றையும் தருமநெறியிலே செலவழித்தார். தாமும் இல்லறத்திலே புகாமல் துறவறத்தை மேற்கொண்டார். சமணர்க ளுடைய போதனைகளை மேற்கொண்ட இவர் பாடலிபுரத்திற்குச் சென்று சமண சமயத்தை மேற்கொண்டார். அத்துடன் சமணசமயக் குருவாகவும் நியமிக்கப்பட்டார். சமணசமயக் குருவாக இருக்கும் போது தருமசேனர் என்னும் பெயரைப் பெற்றுர். திலகவதியார் திருவாமூரிலே திருவதிகை வீரட்டானம் என்னும் பதியிலே பரம சிவனை வழிபட்டுச் சிவசின்னங்களை அணிந்து ஆலயத் தொண்டுக ளைச் செய்துவந்தார். அவ்வாறு இருக்கும்போது தம்பியார் சமண சமயத்திலே சேர்ந்ததைக் கேள்வியுற்றுக் கவலை கொண்டார். இதனை இறைவனுக்கே முறையிட்டார். இறைவனது அருளினுலே தரும சேனருக்குச் சூலைநோய் உண்டானது. எதுவித பரிகாரங்களிலும் நோய் தீரவில்லை. வேதனையுற்ற தருமசேனர் யாரும் அறியாதபடி புறப்பட்டுத் திருவதிகை சென்று தமக்கையாரை வணங்கினுர். திலக வதியார் தம்பியாருக்கு விபூதியில் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதிக் கொடுத்தார். மருணீக்கியார் விபூதியை உடல் முழுவதும் பூசினுர். அதன்மேல் திலகவதியார் தம்பியாரையும் அழைத்துக்கொண்டு திரு வதிகை சென்றுர். மருணீக்கியார் ஆலயத்தை மும்முறை வலம் செய்து வழிபட்டார் அப்பொழுது அவருக்குச் செய்யுள் பாடும் சக்தி உண்டானது. தமது சூலைநோய் நீங்கும்படி இறைவனைப் பிரார்த்தித்து ''கூற்ருயினவாறு விலக்ககிலீர்'' என்னும் திருப் பதி கத்தைப் பாடியருளினுர், உடனே சூலைநோய் நீங்கியது.

வீரட்டானேஸ்வரரின் அசரீரியில் இவர் அற்புத சின்மயமான தேவாரத்தைப்பாடினமையால் இவருக்கு ''நாவுக்கரசு'' என்ற பெயர் விளங்குவதாக என்று கேட்டது. இவ்வாறு நாவுக்கரசர் இறைவன் அருளைப் பெற்று வழிபாடு செய்து தேவாரங்கள் பாடுகின்ற செயல்களையெல்லாம் பல்லவ அரசன் அறிந்தான். நாவுக்கரசரைத் தண்டிக்க விரும்பினன். நாவுக்கரசரை அழைத்துச் சுண்ணும்பு அறையிலே ஏழு நாட்கள் அடைப்பித்தான். அது மருணீக்கியாருக்கு வீணு கானமும், தென்றலும் போலக் குளிர்ந்தது. அப்போ :'மாசில் வீணையும்'' என்னும் திருப்பதிகத்தைப் பாடினர். இரண்டாவதாக நஞ்சு கலந்த பாற்சோற்றைக் கொடுத்தான். ''இறைவன் அடியார்களுக்கு நஞ்சும் அமுதாம்'' என்று சொல்லி உட்கொண்டார். யானையைக் கொண்டுவந்து கொல்லுமாறு விட்டார்கள். அது வலஞ்செய்து வணங்கியது. அதன்மேல் கல்லோடு கட்டிக் கடலிலே போட்டார்கள். அப்போது நாவுக்கரசர் ''சொற்றுணை வேதியன்'' என்னும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடினர். கல்லானது தெப்பமாக மிதந்து கரைசேர்ந்தது. இந்த அற்புதங்களையெல்வாம் கண்ட பல்லவ ராஜன் நாயனரை வணங்கிச் சைவசமயத்தில் பிரவேசித்தான். சைவசமயமே உண்மைச் சமயம் என உணர்ந்த காடவனென்பவனும் பாடலிபுரத்திலே இருந்த சமணப் பள்ளிகளை இடிப்பித்தான். திருவதிகையிலே ''குணதரவீச்சரம்'' என்னும் கோயிலைக் கட்டினன். அதன்மேல் நாவுக்கரசர் பற்பல தலங்கள்தோறும் சென்று வழிபாடு செய்து திருப்பதிகங்கள் பாடினர்.

''பொன்னர் திருவடி'' என்ற முதலையுடைய தேவாரப்பதிகம் பாடியபோது சிவன் திருவருளால் பூதம் ஒன்று தோன்றி நாயனரின் திருத்தோளிலே சூலக்குறியையும் இடபக்குறியையும் பொறித்தது. இவ்வாறு நாவுக்கரசர் ஆலயங்களுக்குச் சென்று உழவாரத் தொண்டும் பாடல்கள் பாடும் தொண்டும் செய்துவந்தார். அவ்வாறு இருக்கும் நாளில், திருஞானசம்பந்தரின் பெருமைகளைக் கேள்வியுற்றுச் சீர்காழி சென்று அவரைச் சந்தித்தார். இருவரும் பலகாலம் சீர்காழியிலே தங்கியிருந்தார்கள். இருவருமாகப் பல ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்தார்கள். திருநல்லூரிலே நாவுக்கரசருக்குத் திருவடி தீட்சை செய்யப்பட்டது. அப்பூதியடிகளின் தொண்டைக் கேள்வியுற்று அவரது இல்லத்திற்குச் சென்று அரவந் தீண்டிய அவர் மகனை ''ஒன்றுகொலாம்'' என்ற தேவாரப்பதிகம் பாடி உயிர் பெறச் செய்தார், அவரது இல்லத்திலே உணவருந்தி அங்கே சில காலம் இருந்தார். மேலும் பல ஆலயங்களுக்குச் சென்று உழவாரத் தொண்டும் பாடற்றெண்டும் செய்துவந்தார். திருப்புகலூருக்குச் செல்லும் வழியிலே முருகநாயனர், சிறுத்தொண்டர், திருநீலநக்க நாயனர் ஆகியோரைச் சந்தித்தார். திருவீழிமிழலையில் இருக்கும் போது நாவுக்கரசருக்கும் படிக்காசு கொடுக்கப்பட்டது. அவர் அதை மாற்றிச் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தார்.

வேதாரணியம் சென்று வழிபட்டபோது அங்கே கதவு திறக்கப்படாதிருத்தலை இருவரும் அறிந்தார்கள். நாவுக்கரசர் ''பண்ணினேர் மொழி'' என்ற பாடலை முதலாகக் கொண்டு திருப்பதிகம் பாடியதும் கதவு திறக்கப்பட்டது. ஞானசம்பந்தர் ''சதுரம் மறைதான்'' என்ற பாடலை முதற் கொண்டு பாடியதும் கதவு அடைக்கப்பட்டது. மேலும் பல தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்தார் திருப்பைஞ்சலி செல்லும் வழியிலே இறைவன் தண்ணீர்ப் பந்தலையும், குளத்தையும் உண்டாக்கிப் பொதி சோறு கொடுத்தார். பின் அவரும் பல ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்தபின் திருக்காளத்தியப்பரையும் தரிசனஞ் செய்தார். உத்தரகைலாசத்தில் இறைவனை வணங்க முயன்றபோது இறைவன் திருவையாற்றிலே கைலாசக் கோலத்தைக் காட்டியருளினர். திருமுதுகுன்றிலே கைத்தொண்டு செய்து கொண்டிருக்கும் நாளிலே உழவாரத்தில் பொன்னும், நவரத்தினங்களும் செதுக்கப்பட்டன. அவற்றை யெல்லாம் நாவுக்கரசர் அகற்றிவிட்டார். ''எண்ணுகேன் என் சொல்லி யெண்ணுகேனே'' என்ற திருத்தாண்டகத்தைப் பாடியதும் சித்திரைச் சதய நன்னாளில் சிவபெருமானுடைய திருவடியை அடைந்தார்.

## குலச்சிறை நாயனர்

பாண்டிநாட்டிலே மணமேற் குடியிலே குலச்சிறை நாயனர் என்பவர் இருந்தார். அவர் விபூதி, உருத்திராக்கம் தரிக்கின்றவர்களும் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதுகின்றவர்களுமாகிய சிவனடியார்களை அழைத்து வரவேற்று உபசரித்துத் திருவமுது செய்விக்கின்றவர். நெடுமாறர் என்னும் அரசருக்கு முதன் மந்திரியாக இருந்தவர். மங்கையற்கரசியாரின் திருத்தொண்டிற்குத் துணைசெய்தவர். திருஞானசம்பந்தரை அழைப்பித்துத் திருநீற்றை வளர்க்கச் செய்தவர். சுந்தரரால் ''பெருநம்பி'' என்று சிறப்பித்துப் பாடப்பட்டவர்.

## பெருமிழலைக் குறும்ப நாயனர்

மிழலை நாட்டிலே பெருமிழலை யென்னும் ஊரிலே சிவபக்தி, அடியார் பக்திகளிற் சிறந்த பெருமிழலைக் குறும்ப நாயனர் என்பவர் இருந்தார். இவர் அடியார்களின் குறிப்பறிந்து தொண்டு செய்பவர். அடியார்களைத் தினமும் திருவமுது செய்வித்து, அவர்களுக்கு வேண்டுவனவற்றைக் கொடுப்பவர். சுந்தர மூர்த்தி நாயனரின் திருவடிகளை மறவாத சிந்தையுடையவர். அட்டமா சித்திகளையும் அடைந்தவர். ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதுபவர். குறும்ப நாயனர் இவ்விதம் வாழ்ந்து வரும் நாளிலே சுந்தர மூர்த்திநாயனர் திருவஞ்சைக் களத்திலே சிவபெருமானுடைய திருவருளினலே உத்தரகைலாசத்தை அடைந்ததை அறிந்தார். சுந்தரரைப் பிரிந்து இங்கே யான் வாழமாட்டேன் என்று யோக நிட்டையிலிருந்து உடலினின்றும் பிரிந்து திருக்கைலாசத்தில் சிவபெருமானுடைய திருவடியை அடைந்தார்.

# காரைக் காலம்மையார்

சோழமண்டடத்திலே காரைக் காலிலே வைசியர் குலத்திலே தனதத்தன் என்பவன் இருந்தான். அவனுக்குப் புனிதவதியார் என்னும் புத்திரியார் பிறந்தார். புனிதவதியார் வளர்ந்து மணப்பருவம் அடைந்ததும், நாகபட்டணத்தில் வசிக்கின்ற நிதிபதி என்பவனின் மகன் பரமதத்தனுக்கு விவாகம் செய்து கொடுத்தான். அத்துடன் அவர்கள் வசிப்பதற்குத் தமது வீட்டிக்கு அருகிலே வீடு கட்டிக் கொடுத்து அதற்கு ஏற்றவசதிகளும் அமைத்துக் கொடுத்தான். பரமதத்தனும், புனிதவதியாரும் இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வந்தார்கள். சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தும் வஸ்திரம் முதலாயின கொடுத்தும் வந்தனர்.

இவ்வாறு இல்லறம் நடாத்திவரும் நாளில் பரமதத்தனிடம் வியாபார நிமித்தம் வந்த சிலர் அவனுக்கு இரண்டு மாம் பழங்களை அன்பளிப்புச் செய்தனர். பரமதத்தன் அவற்றை மனைவியாரிடம் அனுப்பிவிட்டான். புனிதவதியார் அம் மாம் பழங்களை வாங்கி வைத்திருந்தார். அன்றைய தினம் சிவனடியார் ஒருவர் பசியுடன் அங்கே வந்தார். புனிதவதியார் சிவனடியாருக்கு அமுது படைத்தார். கறியமுது பாகம் பண்ணப்படவில்லை. எனவே அன்றைய தினம் கணவன் அனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை எடுத்து வந்து அரிந்து படைத்தார். சிவனடியார் திருவமுது செய்து விட்டுச் சென்றுவிட்டார்.

பரமதத்தன் அன்று நண்பகல் வீடு வந்து உணவு உட்கொள்ளும் போது மிகுதியாக இருந்த மாங்கனியை உண்டார். அதன் சுவையைக் கண்ட பரமதத்தன் மற்றைய மாங்கனியையும் கொண்டுவருமாறு மனைவியாரைப் பணித்தான். மனைவியார் என் செய்வார். பொய் கூறவும் முடியவில்லை. வீட்டின் புறத்தே சென்று இறைவனுக்கு முறையிட்டார். இறைவன் திருவருளால் மாங்கனி ஒன்று அவரது கையில் இருந்தது. புனிதவதியார் அதைக் கணவரது கலத்திலே படைத்தார். அம்மாங்கனியை உண்ட பரமதத்தன் "இக்கனி பூமியில் கிடைக்கக் கூடியது அன்று. இதை எவ்வாறு பெற்ருய்?" என்று வினவினுன். புனிதவதியார் நடந்ததைக் கூறினுர். பரமதத்தன் இதை நம்பவில்லை. அப்படியானுல் மீண்டும் ஒரு மாங்கனி பெறுமாறு கேட்டான். இறைவனுல் புனிதவதியாருக்கு இரண்டாவது தடவையாக மாங்கனி கொடுக்கப்பட்டது. பரமதத்தனின் கையில் கொடுத்ததும் மாங்கனி மறைந்து விட்டது. இந் நிகழ்ச்சியைக் கண்ட பரமதத்தன் புனிதவதியாரைத் தெய்வம் எனக் கருதினுன். அவரிடமிருந்து பிரிந்து வாழ விரும்பினுன்.

பரமதத்தன் பாண்டி நாடு சென்று அங்கே ஒரு வைசியனுடைய மகளை விவாகம் செய்து அவ்விடத்திலேயே வாழ்ந்து வந்தான். சிலகாலம் சென்றபின்பு பரமதத்தனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்குப் புனிதவதி என நாமஞ் சூட்டி

ஞன். இங்ஙனமாகப் பரமதத்தனுடைய சமாச்சாரங்களை யெல்லாம் அறிந்த சுற்றத்தவர்கள் புனிதவதியாரையும் அழைத்துக் கொண்டு பாண்டிநாடு சென்றார்கள். பரமதத்தன் இருக்கும் இடத்தை அணுகினார்கள். இதனை அறிந்த பரமதத்தன் தனது இரண்டாவது மனைவியையும் மகளையும் அழைத்து வந்து புனிதவதியாரை வணங்குமாறு பணித்தான். தானும் வணங்கினான் இதனைக் கண்ட புனிதவதியார், இறைவனை வேண்டிப் பேய்வடிவைப் பெற்றார். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள் புனிதவதியாருக்கு ஞானம் உதயமானது இறைவன்மேல் அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும் பாடினார். கைலையை நோக்கிப் புறப்பட்டார். அண்மையில் சென்றதும் காலினால் நடவாது தலையினால் நடந்து சென்றார். புனிதவதியார் சமீபத்தில் வந்ததும் இறைவன் ''அம்மையே" என்று அழைத்தார். புனிதவதியார் "அப்பர்'' என்று செல்லிக் கொண்டு இறைவன் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தார். சுவாமி புனிதவதியாரை நோக்கி ''என்னவரம் வேண்டும்?'' என்று கேட்டார். அம்மையார் "தேவரீருடைய திருவடிக் கீழ் இருந்து பாடிக்கொண்டு இருக்கும் வரம் வேண்டும்'' என்றார். இறைவனால் வரம் கொடுக்கப்பட்டது. அம்மையார் திருவாலங்காட்டில் இறைவன் திருவடிக் கீழ் என்றும் பாடிக் கொண்டிருக்கின்றார். ''கொங்கை திரங்கி'' ''எட்டியிலவ மீகை'' என்பன அம்மையாரால் பாடப்பட்ட திருப்பதிகங்களாகும்.

## அப்பூதியடிகள் நாயனார்

சோழ மண்டலத்திலே, திங்களூரிலே, பிராமண குலத்திலே புண்ணியமே வடிவெடுத்தாற் போன்ற அப்பூதியடிகள் நாயனார் என்பவர் இருந்தார். அவர் திருநாவுக்கரசு நாயனாருடைய அற்புதங்களைக்' கேள்வியுற்று அவர்மேல் மிகுந்த பக்தியுடையவராக விளங்கினார். அப்பூதியடிகள் தம்முடைய வீட்டிலுள்ள பிள்ளைகள் மிருகங்கள் யாவற்றிற்கும் அவரது பெயரையே சூட்டினார், அது மாத்திரமா? தம்மால் அமைக்கப்பட்ட திருமடங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் ஆகியவற்றிக்கும் நாவுக்கரசரின் பெயரையே சூட்டினார்,

இவ்வாறிருக்கும் நாளிலே திருநாவுக்கரசு நாயனார் திருப்பழனமென்னும் திருத்தலத்தை வணங்கிக் கொண்டு அவ்வழியாலே செல்லும் போது தண்ணீர்ப் பந்தல் ஒன்று இருப்பதைக் கண்டார். அப்பந்தலிலே தமது பெயர் எழுதப்பட்டிருப்பதைக் கண்டதும் "இதனைச் செய்தவர் யார்?'' என விசாரித்தார், அப்பூதியடிகள் நாயனாரே இவ்வாறு செய்தவர் என அறிந்ததும் அப்பூதியடிகளின் வீட்டிற்குச் சென்றார். அப்பூதியடிகளைப் பார்த்து நீர் செய்யும் தரும கைங்கரியங்களுக்கு உமது பெயரை எழுதாது பிறருடைய பெயரை எழுதக் காரணம் யாது? என வினவினார். அப்பூதியடிகள் ''சிவபெருமானால் சூலையோய் கொடுத்து ஆட் கொள்ளப்பட்ட நாவுக்கரசையா பிறரொருவ என்றீர்'' எனக் கோபத்துடன் கூறினார்,

பின்னர் வந்திருப்பவர் நாவுக்கரசு நாயனர் என்பதை அறிந்ததும் அவரது பாதங்களிலே வீழ்ந்து வணங்கினர். அப்பூதியடிகள் நாவுக்கரசரைத் திருவமுது செய்யுமாறு வேண்டினர். நாவுக்கரசரும் அதற்கு உடன்பட்டார். உணவு சமைக்கப்பட்டது.

அப்பூதியடிகள் மகன் மூத்ததிருநாவுக்கரசு வாழைக்குருத்து அரியும்போது அரவம் தீண்டி இறந்து விட்டான். அப்பூதியடிகளும் மனைவியாரும் மகனின் சடலத்தைப் பின்புறத்தே மறைத்து வைத்தார்கள். திருநாவுக்கரசு நாயனரை உணவு அருந்த வருமாறு அழைத்தார்கள். திருவமுது உட்கொள்ளச், சென்ற நாயனர் "விபூதி அணிவதற்கு உமது மூத்த மகனை அழையும்", என்றார். அப்பூதியடிகள் நாவுக்கரசரைப், பார்த்து "அவன் இப்போ உதவான்" என்றார். அதன்மேல் நடந்தவற்றை அறிந்த நாவுக்கரசர் சிவாலயத்துக்குச் சென்று சடலத்தையும் அங்கே கொண்டுவரச் செய்து விஷத்தை நீக்கியருளுமாறு தேவாரப்பதிகம் பாடினர். புத்திரர் உயிர்பெற்று எழுந்துநாவுக்கரசரை வணங்கினர். பின்னர் நாவுக்கரசர் அப்பூதியடிகளின் இல்லத்திற்கு வந்து அவரோடும் புத்திரரோடும் உணவருந்தினர். அங்கிருந்து புறப்பட்டுத் திருப்பழனத்தை நாவுக்கரசர் அடைந்தார். அப்பூதியடிகள் நாவுக்கரசரையே பெரும் செல்வம் என நினைத்து வாழ்ந்து இறைவன் திருவடிகளை அடைந்தார்.

## திருநீலநக்க நாயனர்

சோழ மண்டலத்திலே, சாத்த மங்கையிலே, பிராமண குலத்திலே, திருநீலநக்க நாயனர் என்பவர் இருந்தார். இவர் சிவார்ச்சனை பண்ணிச் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தல் முதலாய பணிகளைத் தவருது செய்து வந்தார்.

ஓர் தினம் அவந்தி ஆலயத்துக்குச் சென்று பூசை பண்ணியபின் பஞ்சாட்சர செபம் செய்தார். அச்சமயம் ஓர் சிலம்பி சிவலிங்கத்தின் மேலே விழுந்தது. அது கண்ட மனைவியார் உடன் சென்று வாயினல் ஊதித் துமிந்தார். இதனைக் கண்ட திருநீலநக்கர் கோபங்கொண்டு மனைவியாரைப் பார்த்து நான் உன்னைத் துறந்தேன். என்றார். பின்னர் மனைவியாரை ஆலயத்திலேயே விட்டு விட்டு வீடு வந்தார். மனைவியார் செய்வதறியாது ஆலயத்திலேயே இருந்தார். நாயனர் நித்திரை செய்யும் போது கனவிலே தோன்றய இறைவன் தமது திருமேனியைக் காட்டி மனைவியார் ஊதித்துமிந்த இடம்போக மற்றைய இடங்களில் எல்லாம் சிலம்பியின் கொப்புளம் என்று சொல்லியருளுனர். விழித்தெழுந்த நாயனர் ஆனந்தக் கூத்தாடினர். ஆலயத்துக்குச் சென்று மனைவியாரை அழைத்துக் கொண்டு வீடு திரும்பினர்.

திருநீலநக்கர் திருஞானசம்பந்த சுவாமிகள்மேல் எல்லையற்ற பக்தியுடையவராக விளங்கினர். ஞானசம்பந்தர் அவந்தி என்னும் ஆலயத்துக்கு வந்தபோது திருநீலநக்க நாயனரின் இல்லத்திலே தங்கினர். அத்துடன் சிவனடியார்களோடும் அவர் இல்லத்திலே திருவமுது செய்தருளினர். ஞானசம்பந்தர் பாடிய திருப்பதிகத்திலே திருநீலநக்கரையும் சிறப்பித்துப் பாடியருளினர். ஞானசம்பந்தருடைய திருவடியிலே நீங்காத அன்புடன் அவர் செல்லும் ஆலயங்கள் தோறும் சென்றுர் இறுதியாக ஞானசம்பந்தரின் திருமணத்தைச் சேவித்துச் சிவபதம் அடைந்தார்,

## நமிநந்தியடிகள் நாயனர்

சோழ மண்டலத்திலே, யமப்பேறூரிலே பிராமண குலத்திலே பரமசிவனுடைய திருவடிகளை மறவாதவரும்,. அகோராத்திரம் வழிபடுகின்றவமாகிய நமிநந்தியடிகள் என்பவர் இருந்தார். இவர் திருவாரூருக்குப்போய் வன்மீகநாதரை வணங்கிக் கொண்டு அர நெறி என்ற ஆலயத்துக்குச் சென்று அங்கே சுவாமி தரிதனஞ் செய்தார், பின்னர் அந்த ஆலயத்திலே எண்ணில்லாத தீபம் ஏற்றவிரும்பினர். ஆலயத்தின் பக்கத்திலே உள்ள வீட்டிற்குச் சென்று "சுவாமிக்கு விளக்கேற்றுவதற்கு நெய் தாருங்கள்" என்று கேட்டார். அவ் வீட்டுக்காரர் சமணர்கள். அவர்கள் இவரைப் பார்த்துக் கையிலே சுவாலிக்கின்ற அக்கினியையுடைய உங்கள் பரமசிவனுக்கு விளக்கு மிகையன்றே, அவ்வாறு வேண்டுமாயின் நீரை முகந்து எரியும், என்று நகைத்தார்கள். இதனைக் கேட்ட நமிநந்தியடிகள் மிகுந்த மனவருத்தத்துடன் ஆலயத்துக்குச் சென்று வணங்கினர் "நமிநந்தியே குளத்து நீரை முகந்து எரிப்பாயாக" என்று அசரீரி கேட்டது. நமிநந்தியடிகள் இறைவன் கட்டளைப் பிரகாரம் குளத்து நீரை முகந்து வந்து விளக்குத்தகளிகளிலே விட்டு எரித்தார். விளக்குகள் சுடர் விட்டுப் பிரகாசித்தன. அடிகள் இப்பணியைத் தொடர்ந்து செய்து வந்தார்.

நமிநந்தியடிகளின் பெருமைகளை அறிந்த சோழ மகாரஜா இவரையே அவ்வாலயத்தின் அத்தியட்சகராக நியமித்தார். அடிகள் வீதி விடங்கப் பெருமானுக்குப் பங்குனி மாதத்திலே மகோற்சவம் நடாத்து வித்தார். ஓர் தினம் சுவாமி திருமணலிக்கு எழுந்தருளியபோது பலசாதியினரும் அங்கு சேவித்துச் சென்றுர்கள். அங்கு சென்று திரும்பி அடிகள் வீட்டின் வெளிப்புறத்திலே நித்திரை செய்தார். அவர் கனவிலே காட்சி கொடுத்த வீதி விடங்கப் பெருமான் திருவாரூர்ப் பிறந்தார்கள். அனைவரும் நம்முடைய கணங்கள் என்று கூறினர். விழித்தெழுந்த நமிநந்தியடிகள் வீட்டினுள் சென்று சிவார்ச்சனை பண்ணினர். மேலும் அடிகள் திருவாரூரிலே நெடுங்காலம் தொண்டு செய்து கொண்டிருந்தார். நாவுக்கரசரது தேவாரத்திலே சிறப்பித்துப் பாடப் பெற்றுர். மேலும் இவர் பல காலம் தொண்டு செய்து இறுதில் சிவபதம் அடைந்தார்.

# திருஞான சம்பந்த மூர்த்தி நாயனூர்

சோழ மண்டலத்திலே, பன்னிரு திருப்பெயர்களையுடைய சிவஸ் தலத்திலே, பிராமண குலத்திலே, வேதங்களிலே மகாபண்டித்தியம் உடைய வரும், கௌணியர் கோத்திரத்தையுடைய வருமாகிய சிவபாதவிருதயர் என்பவர் இருந்தார் அவர் மனைவியார் பகவதி யார் அவ்விருவரும் செய்த தவப்பேற்றின் பயனுக, உலகுக்கு ஞான ஒளியைக் கொடுப்பவராகிய பிள்ளையார் பகவதியாருடைய திருவயிற்றுலே திருவவதாரஞ் செய்தருளினுர். அவருக்குச் சாதர் மம், நாமகரணம், அன்னப் பிராசனம், சௌளம் என்கின்ற கருமங் கள் சிறப்பாக நடைபெற்றன. பிள்ளையாருக்கு மூன்று வயதான போது ஓர் தினம் தந்தையார் ஸ்நானம் பண்ணுவதற்காகத் தோணிபுரத்திற்குச் சென்றுர். அக்குழந்தையும் பின் தொடர்ந்து சென்றது. ''உன் செய்கை இது வாகில் வா'' என்று அழைத்துச் சென்றுர். பிள்ளையைக் கரையிலே இருத்திவிட்டுச் சிவபாதவிருதயர் தீர்த்தத்தினுள்ளே இறங்கி ஸ்நானம் செய்தார். தந்தையாரைக் காணுத குழந்தை ''அம்மே அப்பா'' என்று அழுதது. இந்த அழைப் பைக் கேட்ட சிவபெருமானும் உமா தேவியாரும் இடபாரூடராகத் தோன்றி ஞானப்பாலைக் கொடுத்து மறைந்தனர், நியமங்களை முடித்துக் கொண்டு வந்த சிவபாதவிருதயர் குழந்தையின் வாயில் பால் வடிவதைக்கண்டு யார் தந்த பாலையுண்டாய் என்று அதட் டியபோது குழந்தை ஒரு விரலினுலே சுட்டிக்காட்டித் ''தோடு டைய செவியன்'' என்ற தேவாரத்தைப் பாடியருளியது, சிவபாத விருதயர் நடந்த நிகழ்ச்சிகளை அறிந்த பரவசமாயினுர்.

ஞானசம்பந்தப்பிள்ளையார் தொடர்ந்து தேவாரங்கள் பாடினுர். எட்டாவது பாட்டில் இராவணனுக்கு அருள்புரிந்த திறமையும், ஒன்பதாவது பாட்டில் பிரமவிட்டுணுக்கள் அடி முடி தேடிய திறத் தையும், பத்தாவது பாட்டில் கபடமார்க்கங்களின் திறத்தையும் அமைத்துப் பாடியருளினுர். இவரின் அற்புதங்களைக் கேள்வியுற்ற பிராமணர்கள் அங்கே வந்து ஞானக் குழந்தையை வணங்கினுர்கள். ஞான சம்பந்தர் சிவபாதவிருதையரின் தோழின் மேல இருந்த பிரகாரம் சீர்காழியை வலஞ்செய்து கொண்டு தமது திருமாளி கையை அடைந்தார். இரண்டாவது நாள் திருக் கோலக்கா சென்று வழிபட்டுத் தேவாரம் பாடினுர். அங்ஙனம் பாடும் போது சிவபெரு மானுடைய திருவருளினுலே பஞ்சாட்சரம் பொறிக்கப்பட்ட பொற் றுளம் ஒன்று இவரது கையில் வந்திருந்தது. ஞான சம்பந்தர் ஏழி சையும் சிறக்கத் திருப்பதிகத்தைப் பாடிமுடித்துத் திருக்கடைக்காப் புச் செய்தருளினுர். பிராமணர்களின் வேண்டுகோளின் பிரகாரம் திருநனிபள்ளிக்குச் சென்று வழிபட்டுத் திருப்பதிகம் பாடினுர். அதன் மேல் ஞான சம்பந்தர் அங்கிருந்து புறப்பட்டுத் தலைச்சங்காடு முதலா கத் திருக்குருகாவூர் ஈறுகப்பலதலங்களுக் கெல்லாம் சென்று வழிபட் டுத் தேவாரம் பாடினுர். இவர் நடந்து செல்லுதலைப் பொறுத சிவபாதவிருதயர் தோழின் மேல் சுமந்து சென்றுர்.

இவர் பலதலங்களை வழிபாடு செய்தபின் மீண்டும் சீர்காழில் வந்து தங்கினுர். ஞானக் குழந்தையின் அற்புதங்களைக் கேள்வியுற்ற திருநீலகண்டப் பெரும்பாணர் விறலியாரோடு சீர்காழிக்கு வந்து வணங்கினுர். ஞான சம்பந்தரின் அநுமதியின் பிரகாரம் அவர் பாடும் பாடல்களைப் பாணர் யாழிலே வாசித்தார். அதன்மேல் பாணரின் வேண்டுகோளின் பிரகாரம் மேலும் பல தலங்களுக்குச் சென்று வழிபட்டார். திருத்தூங்கானை மாடம் என்னும் தலத்தை வணங்கிக் கொண்டு திருநெல்வாய் அரத்துறைக்குச் செல்லும் போது தந்தையாரின் தோள்மேல் இருத்தலை விரும்பாது பஞ்சாட்சரத்தை ஓதிக் கொண்டு நடந்து சென்ருர். பின் இராக்காலம் வந்ததும் அத்தலத்திலேயே தங்கினுர். காலையில் எழுந்ததும் திருநெல்வாய் அரத்துறைப் பெருமான் இவருக்கு முத்துச்சிவிகையும் முத்துக்குடையும், முத்துச்சின்னங்களும் கொடுத்தருளினுர். அக்கடவுளின் திருவருளை வியந்து "எந்தையீசன் எம்பெருமான்" என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினுர். சீர்காழிக்குச் சென்றபோது தந்தையாரின் வேண்டுதலின் பிரகாரம் உபநயனம் செய்யப்பட்டது. பின் அந்தணர்கள் மந்திரோபதேசம் செய்யப்புகும் போது ஞான சம்பந்தர் தாமாகவே வேதங்களை ஓதிப் பல கலைகளையும் சொல்லியருளினுர். திருப்பாச்சிலாச்சிரமத்துக்குச் சென்ற போது கொல்லிமழவனுடைய புத்திரி முயலகன் என்னும் நோயினுல் துன்பப்படுவதைக் கண்டார். "துணிவளர் திங்கள்" என்ற பதிகம்பாடி அவளின் நோயை நீக்கியருளினுர். தந்தையார் யாகம் செய்வதற்குப் பொருள் கேட்ட போது இவர் இறைவனை வேண்டி "இடரினும் தளரினும்" என்னும் பதிகம் பாடினுர். பூதம் ஒன்று ஆயிரம் பொன் உள்ள பொற்கிழி ஒன்றைக் கொணர்ந்து கொடுத்தது. "மாதர் மடப்பிடியும்" என்ற திருபதிகம் பாடியபோது திருநீலகண்டருடைய யாழிலே அடங்காமை கண்டு அவர் கவலை கொண்டார். ஞான சம்பந்தர் இயன்றமட்டும் வாசிக்குமாறு அருள் செய்தார்.

திருமருகலுக்குச் சென்றபோது அந்த ஆலயத்திலே தங்கியிருந்த வணிகன் அரவம் தீண்டி இறந்ததையும் அவனுடன் வந்த கன்னிபுலம்புவதையும் கண்டார், விடத்தை நீக்கியருளுமாறு திருமருகக் கடவுளை வேண்டிச் "சடையாய் எனுமால்" என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினுர். வணிகன் விடம் தீர்ந்து எழுந்து வணங்கினுன். சம்பந்தப் பெருமான் வணிகனுக்கும் கன்னிக்கும் அங்கேயே திருமணமும் செய்து வைத்தார். பின்னரும் பற்பல தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்து பல அடியார்களையும் சந்தித்தார், திருப்புகலூருக்குச் சென்றபோது திருநாவுக்கரசு நாயனுரைச் சந்தித்து அளவளாவினுர். இருநாயன்மாரும் திருவீழிமிழலையில் இருக்கும்போது அங்கே பஞ்சம் உண்டானது. இறைவன் திருவருளால் அடியவர்கள் இருவருக்கும் படிக்காசு கொடுக்கப்பட்டது. அக்காசை மாற்றித் திருமடங்களில் அடியார்களுக்கு அமுது கொடுக்கப்பட்டது.

நாவுக்கரசரும், ஞான சம்பந்தரும் வேதாரணியத்தை அடைந்தபோது அங்கே திருக்கதவு அடைக்கப்பட்டிருந்தது: நாவுக்கரசர் ''பண்ணினேர் மொழி'' என்ற பாடலை முதலாகக் கொண்டு திருப்பதிகம் பாடியதும் கதவு திறக்கப்பட்டது. ஞான சம்பந்தர் ''சதுரம் மறைதான்'' என்ற பாடலை முதற் கொண்டு பாடியதும் கதவு அடைக்கப்பட்டது. பாண்டியநாட்டிலே சமண சமயம் மேலோங்கியிருந்தது, மங்கையற்கரசியாரும். குலச்சிறையாரும் சைவசமயிகளாக இருந்தார்கள், ஞான சம்பந்தர் பாண்டிநாட்டிற்கு அழைக்கப்பட்டார். சமணர்கள் அரசனின் அநுமதியுடன் ஞான சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குத் தீவைத்தார்கள், சம்பந்தப் பெருமான் ''பையவே சென்று பாண்டியற்காகவே என்று பாடினார், பாண்டியமன்னனுக்கு வெப்பநோய் ஏற்பட்டது. எதுவித மருந்துகளிலும் நோய்மாறவில்லை. ஞான சம்பந்தர் ''மந்திரமாவது நீறு'' என்ற அடியை முதலாகக் கொண்டு திருநீற்றுப் பதிகம்பாடி பாண்டியனது உடம்பில் விபூதியை அணிந்ததும் வெப்பு நோய் நீங்கியது. சமண சமயக் குருமாருக்கும், ஞான சம்பந்தருக்கும் நடைபெற்ற வாதங்களில் ஞானசம்பந்தரே வென்றார், பாண்டியனும் அவ்வூர் மக்களும் சைவசமயிகள் ஆனார்கள். இராமேஸ்வரம் வழிபட்டபோது அங்கிருந்துகொண்டே ஈழநாட்டில் உள்ள திருக்கேதீஸ்வரம், திருகோணமலை முதலாயதலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடினார்.

திருமயிலாப்பூரில் சிவநேசர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஞான சம்பந்தரிடத்தில் மிகுந்த பக்தியுள்ளவர். அவருடைய மகள் பூம்பாவை என்பவள் பூக்கொய்யும் போது அரவம் தீண்டி இறந்துவிட்டாள். சிவநேசர் அவளைத்தகனஞ் செய்து அவளது எலும்பையும், சாம்பலையும் ஒரு குடத்திலே இட்டுக் கன்னிமாடத்திலே சேமித்து வைத்திருந்தார். ஞான சம்பந்தர் திருமயிலாப்பூருக்கு வந்துள்ளதை அறிந்த சிவநேசர் அங்கு சென்று தனது குறையை முறையிட்டார். ஞான சம்பந்தர் குடத்தை ஆலயத்தின் கோபுர வாசலுக்குக் கொண்டு வருமாறு பணித்தார். இறைவனை வழிபட்டு ''மட்டிட்ட புன்னை'' என்ற பாடலை ஆரம்பித்தார். முதற்பாட்டிலே அப்பெண் வடிவு பெற்றது. எட்டாம் பாட்டிலே வளர்ச்சி பெற்றது. பத்தாம் திருப்பாட்டை முடித்ததும் குடம் உடைந்தது பூம்பாவை வெளியில் வந்து ஞான சம்பந்தரை வணங்கினாள். சிவநேசர் இறைவனையும் ஞான சம்பந்தையும் வணங்கினார். பூம்பாவை பலகாலம் வாழ்ந்து சிவபதம் அடைந்தாள்.

நம்பாண்டார் நம்பியின் மகளுக்கும் ஞான சம்பந்தருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. குறித்ததினத்திலே ஞான சம்பந்ர் சிவிகையில் ஏறிச் சென்று மணமகள் வீட்டை அடைந்தார். மணமகளைக் கொண்டு வந்து ஞான சம்பந்தருக்கு வலப்பக்கத்திலே இருத்தினார்கள். திருநீலநக்க நாயனார் திருமணச் சடங்குகளை நிறைவேற்றினார். திருமணம் நிறைவேறியதும் மனைவியையும் அழைத்துக் கொண்டு ஞான சம்பந்தர் நல்லூர்ப் பெருமணம் என்ற ஆலயத்

திற்குச் சென்ருர். அங்கு வீற்றிருக்கும் கடவுளை நோக்கித் தேவரீருடைய திருவடிகளை அடையும் பதம் இது என்று "நல்லூர்ப் பெருமணம்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினுர். உடனே சோதி தோன்றியது, திருக்கல்யாணத்தைத் தரிசிக்க வந்த அனைவருக்கும் "காதலாகி" என்று தொடங்கிப் பஞ்சாட்சரப்பதிகத்தை ஓதி அவர்களைச் சோதியிலே புகச் செய்தார். இறுதியாக மனைவியாரைக் கைப்பற்றிக் கொண்டு சோதியை வலஞ் செய்து அதனுள்ளே புகுந்து சிவசாயூட்சிய முத்தியை அடைந்தார்.

## ஏயர்கோன் கலிக்காம நாயனுர்

சோழ மண்டலத்திலே, திருப் பெருமங்கலத்திலே, வேளாளர் குலத்திலே சோழ இராசாக்களுக்குச் சேனுதிபதித் தொழில் பூண்ட ஏயர் குடியிலே கலிக்காம நாயனுர் என்பவர் இருந்தார். இவர் குருலிங்கசங்கம பத்தியிலே சிறந்தவர், திருப்புன்கூரிலே இருக்கும் இறைவனுக்கு அளவற்ற திருப்பணிகள் செய்தவர்.

சுந்தரமூர்த்தி நாயனுர் சிவபெருமானைப் பரவையாரிடம் தூதாக அனுப்பியது தவறு என்று கலிக்காம நாயனுர் கருதினுர். இதனுல் சுந்தரமூர்த்தி நாயனுரிடத்திலே வெறுப்பு மிக்கவராக விளங்கினுர். இச் சமாச்சாரத்தை அறிந்த சுந்தரமூர்த்தி நாயனுர் அதையும் இறைவனுக்கே முறையிட்டார். இறைவன் இவர்கள் இருவரையும் ஒற்றுமையாக்க விரும்பினுர். இறைவன் அருளால் கலிக்காம நாயனுருக்குச் சூலை நோய் ஏற்பட்டது.

கலிக்காமர் நோயினுல் பெரிதும் கஷ்டப்பட்டார் அவரது கனவிலே தோன்றிய இறைவன் சுந்தரனுலன்றி இந் நோய் தீராது என்று அருளிச் செய்தார். இறைவன் கட்டளைப் பிரகாரம் நோயை நீக்குவதற்காகச் சுந்தரர் புறப்பிட்டு வந்தார். அவரின் வருகையைக் கேள்வியுற்ற கலிக்காமர் இவர் வருமுன் எனது உயிரை மாய்ப்பேன் என்று உடைவாளினுலே வயிற்றைக் கிழித்து இறந்து விட்டார். கலிக்காமர் வீட்டிற்கு வந்த சுந்தரர் நடந்த நிகழ்ச்சியை அறிந்ததும் இவரைப்போல் யானும் இறப்பேன் என்று சொல்லி உடைவாளை எடுத்தார். அவ்வமயம் பரமசிவனது திருவருளினுலே கலிக்காம நாயனுர் உயிர்பெற்று எழுந்து சுந்தரரின் உடைவாளைப் பிடித்தார், பின்னர் இருவரும் ஒருவரையொருவர் வணங்கினுர்கள். அதன்மேல் இருவரும் நண்பர்கள் ஆனுர்கள். திருப்புன் கூருக்குச் சென்று சுவாமிதரிதனஞ் செய்தார்கள். இறுதியாகக் கலிக்காமர் சுந்தரரின் அநுமதி பெற்றுக் சொண்டு தம்முடைய ஊருக்குச் சென்று பல தொண்டுகள் செய்தபின் சிவபதம் அடைந்தார்.

## திருமூல நாயனர்

திருக்கைலாசத்தில் சிவபெருமானது ஆலயத்தின் முதற் பொருளாகிய திருநந்தி தேவருடைய திருவருளைப் பெற்ற மாணுக்கர்களாகிய சிவயோகிகளுள் ஒருவர். அகத்திய முனிவரிடத்தே பொருந்திய நண்பினுலே அவருடன் சிலநாள் இருத்தற்கு விரும்பினுர். அவர் பொதியமலையை அடைதற் பொருட்டுத் திருக்கைலாசத்தை விட்டு அகன்று வழிக்கொண்டு திருக்கேதாரம் முதலாகச் சிதம்பரம் ஈருகப் பல தலங்களையும் வணங்கிக் கொண்டு திருவாவடுதுறையை அடைந்து அங்கே சுவாமிதரிசனம் செய்து கொண்டு இருந்தார்.

ஓர் தினம் அந்தச் சிவயோகியார் அத்தலத்தை விட்டு அகன்று வழியிலே சென்ருர். காவிரி ஆற்றங்கரையிலே பசுக் கூட்டங்கள் அழுதலையும் அவற்றை மேய்க்கும் மூலன் என்பவன் அவ்விடத்திலே இறந்து கிடத்தலையும் அவர் கண்டார் இடையன் உயிர் பெற்று எழுந்தாலன்றிப் பசுக்களின் துன்பம் தீராது, சிவயோகியார் இதற்குப் பரிகாரம் தேடமுற்பட்டார். சிவயோகியார் தமது உடம்பைப் பாதுகாப்பாக ஓர் இடத்திலே வைத்துவிட்டு மூலனுடைய உடம்பினுள்ளே புகுந்தார். உடனே திருமூலர் உயிர் பெற்று எழுந்தார். பசுக்கள் மிகவும் சந்தோஷம் அடைந்தன, திருமூல நாயனர் பசுக்களை நல்லபுல் தரையிலே மேயவிட்டார். மாலைநேரத்திலே பசுக்களை அவைகளின் வீடுகளுக்கு அழைத்துச் சென்ருர். மூலனுடைய மனைவி தனது நாயகர் வந்துவிட்டார் என்று அணுகினுள். யோகியார் உனக்கும் எனக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்ருர். இதனைக் கேட்ட மூலனுடைய மனைவி மிகவும் வேதனைப்பட்டாள். திருமூல நாயனர் தாம் வந்த வழியே சென்று சேமித்து வைத்த உடம்பைப் பார்த்தார். அதைக் காணவில்லை, இறைவன் கொடுத்த இச் சரீரத்தைக் கொண்டு ஒரு நூல் இயற்ற விழைந்தார். திருவாவடுதுறையை அடைந்து அங்குள்ள இறைவனை வணங்கினுர். ஆலயத்தின் மேற்குப் பக்கத்தில் உள்ள அரசின் கீழ் சிவயோகத்தில் இருந்தார். வருஷம் ஒருபாட்டாக மூவாயிரம் வருஷம் மூவாயிரம் பாட்டுக்கள் பாடினுர். நான்கு பாதங்களின் தன்மைகளையும் உணர்த்துகின்ற திருமந்திரம் என்னும் நூலைப் பாடியருளினுர். அதன் மேல் திருக்கைலாயத்தை அடைந்தார்.

## தண்டியடிகளுயனர்

சோழமண்டலத்திலே, திருவாரூரிலே தண்டியடிகளுயனர் என்பவர் இருந்தார், இவர் பிறவிக் குருடர். தம்முடைய அகக்கண்ணினுலே சிவபெருமானைத் தினந்தோறும் தோத்திரம் பண்ணித் துதிப்பவர். ஸ்ரீ பஞ்சாட்சரத்தை அன்பினேடு ஜெபிப்பவர். திருப்பதியிலுள்ள பூங்கோயிலை வணங்குகின்றவர்.

இத் தண்டியடிகள் தாம் வணங்குகின்ற ஆலயத்துக்கு மேற்குத் திசையில் இருக்கின்ற திருக்குளத்தைப் பெருப்பிக்க விரும்பினார். திருக்குளத்தின் உள்ளேயும் வெளியேயும் இருதடிகளை நாட்டி அதிலே ஒரு கயிற்றைக் கட்டி அந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு குளத்தைத் தோண்டினார். இதனைக் கண்டு பொறாமை கொண்ட சமணர்கள் தண்டியடிகளை அணுகி நீர் குளத்தைத் தோண்டுவதன் மூலம் எத்தனையோ உயிர்களைக் கொலை செய்கின்றீர்? உமக்குக் கண்ணும் தெரியாதோ என்று ஏளனஞ் செய்தார்கள். இதனைக் கேட்ட தண்டியடிகள் மிகவும் வருத்தங் கொண்டு சிவபெருமானுக்கு முறையிட்டார். தண்டியடிகளின் கனவிலே தோன்றிய சிவபெருமான் நாளை உன் கண்காணச் செய்கிறேன் என்று அருள் செய்தார். மறுதினம் தண்டிகள் குளத்திலே முழுகி எழுந்ததும் கண்ணைப் பெற்றார். இவரை ஏளனஞ் செய்த சமணர்கள் கண்ணை இழந்தார்கள். இதனைக் கண்ட சோழமகாராஜா சமணர்களை அவ்வூரை விட்டுத் துரத்தி விட்டார். சமணப்பள்ளிகளையும் பாழிகளையும் இடிப்பித்தார். குளத்தைச் சிறப்பாகக் கட்டுவித்துத் தண்டியடிகளை வணங்கினார். தண்டியடிகள் அந்த ஆலயத்திலே இருந்து பலகாலம் தொண்டு செய்து சிவபதம் அடைந்தார்.

## மூர்க்க நாயனார்

தொண்டை நாட்டிலே, திருவேற் காட்டிலே, வேளாளர் குலத்திலே அடியார் ஒருவர் இருந்தார். இவர் தினந்தோறும் சிவனடியார்கள் விரும்பியவற்றைக் கொடுத்தும் வந்தார் சிவனடியார்களுக்கு அமுது செய்வித்தலாகிய மகேசுர பூசையைச் செய்து வரும் நாளிலே பெருந் தொகையான சிவனடியார்கள் அங்கு வருகை தந்தார்கள். அடியவர் தம்மிடம் உள்ள திரவியங்கள் எல்லாவற்றையும் விற்று இத் தொண்டைச் செய்து வந்தார். பணம் போதாமையினால் சூதாட்டத்தில் ஈடுபட்டு அதனால் வரும் பொருளைக் கொண்டு மகேசுர பூசை செய்து வந்தார். சூதிலே மறுத்தவர்களை உடைவாளினாலே குற்றுவார். இதனால் இவருக்கு மூர்க்கர் என்னும் பெயர் உண்டாயிற்று, சிவனடியார்கள் திருவமுது செய்த பின்னரே தாம் உட்கொள்வார், இவ்வாறு மூர்க்க நாயனார் மகேசுர பூசை செய்தலையே தலையாய கடனாகக் கொண்டு இறுதியில் சிவபதம் அடைந்தார்.

✱

## சோமாசிமாற நாயனர்

சோழமண்டலத்திலே, திருவாரூரிலே பிராமண குலத்திலே சோமாசிமாற நாயனர் என்பவர் இருந்தார். இவர் பரமசிவனது ஸ்ரீ பஞ்சாட்சரத்தை மிகுந்த அன்பினேடு செபித்தலை நியமமாகக் கொண்டவர். சிவனடியார்கள் தம்முடைய இல்லத்துக்கு வந்தால் எக்குலத்தாராயினும், எக்குணத்தாராயினும் அவர்களை எதிர் கொண்டு அழைத்துத் திருவமுது செய்விப்பவர். யாகங்களை வேதவிதிப்படி செய்விப்பவர். திருவாரூரிலே சுந்தரமூர்த்தி நாயனர் இருக்கும் இடத்தை அடைந்து அவருடைய திருவடிகளிலே பக்திபண்ணி அதனலே சிவபதம் அடைந்தார்.

## சாக்கிய நாயனர்

திருச்சங்க மங்கையிலே வேளாளர் குலத்திலே சாக்கிய நாயனர் என்பவர் இருந்தார். அவர் சனன மாண துன்பங்களை உணர்ந்து அவைகளினின்றும் விடுபடுவதற்கு நெறியாது என்று ஆராய்வாராயினர். சிலகாலம் பௌத்த சமய நூல்களை ஆராய்ந்தார். அதன் மேல் சைவசமயமே உண்மைச் சமயம் என உணர்ந்து பரமசிவனை அன்பினேடு தியானம் செய்வாராயினர். தினந்தோறும் சிவலிங்கத்தைத் தரிசித்த பின்பே போசனம் பண்ணுதலை நியமமாகக் கொண்டவர். சிவலிங்கத்தைத் தரிசனம் செய்யச் செல்லும் போது சிறுபிள்ளை விளையாட்டாக அருகிலே கிடந்த கல்லை எடுத்துச் சிவலிங்கத்துக்கு எறிந்து விட்டுச் செல்வார். இவ்வாறு தினமும் செய்துவரும் நாளிலே ஓர் தினம் கல்லை எறியாது மறந்து சென்று விட்டார். போசனம் பண்ணப்புகும்போது ஞாபகம் வந்ததும் உடனே சென்று கல்லை எறியச் சென்றர். அப்போ எம்பெருமான் சாக்கிய நாயனருக்குக் காட்சி கொடுத்துத் தம்முடன் சேர்த்துக் கொண்டார்.

## சிறப்புலி நாயனர்

சோழநாட்டிலே, திருவாக்கூரிலே, பிராமண குலத்திலே சிறப்புலி நாயனர் என்பவர் இருந்தார். அவர் சிவனடியார்கள் எழுந்தருளி வந்தால் அவர்களை வணங்கி அவர்களுக்குத் திருவமுது கொடுப்பார். அத்துடன் சிவனடியார்களுக்கு வேண்டிய திரவியங்களையும் கொடுத்து வந்தார். ஸ்ரீ பஞ்சாட்சரத்தை அன்பினேடு செபிப்பார். யாகங்கள் பலவற்றைச் செய்வித்தார் இத்தகைய புண்ணியங்களினலே சிறப்புலி நாயனர் சிவபதம் அடைந்தார்.

# சிறுத்தொண்ட நாயனர்

சோழ மண்டலத்திலே, திருச் செங்காட்டங் குடியிலே மகாமாத்தியர் குலத்திலே பரஞ்சோதியார் என்பவர் இருந்தார். இவர் ஆயுள் வேதங்களிலும் குதிரையேற்றம் யானையேற்றம் முதலியவற்றிலும் மிகச் சிறந்தவர். வேதம் முதலாய நூல்களை நன்கு ஓதியுணர்ந்தவர். சிவபெருமானே மெய்ப்பொருள் என்றும் அவரது திருவடிகளை அடைதலே முத்திநெறி என்றும் தெளிந்தவர். சிவபெருமானிடத்திலே பக்தி செலுத்தி அகோராத்திரம் தியானிப்பவர். இவ்வாறிருந்த போதிலும் இவர் அரசனிடத்தே அணுக்கராகி அரசனது கடமைகளையும் தவருது செய்து வந்தார் பல அரசர்களை வென்று அதனுல் நன்கு மதிக்கப்பட்டவர். இவ்வாறிருந்து வரும் நாளிலே மந்திரிகளில் சிலர் அரசனிடம் சென்று இவர் பரமசிவனுக்குத் தொண்டு செய்பவர். இதனுலே இவருக்குப் மேரும் புகழும் வருகின்றன என்று கூறினுர்கள். இதனைக் கேட்ட அரசன் பரஞ்சோதியாரை அழைத்து நீர் எனக்குப் பணிவிடை செய்தலை ஒழித்து விரும்பியவாறே தொண்டு செய்யும் எனக் கூறி நிதிக் குவைகளையும் கொடுத்து அனுப்பினுர்.

பரஞ்சோதியார் கணபதீஸ்வரம் என்னும் ஆலயக்கடவுளை வணங்கித் திருத்தொண்டு செய்து வந்தார். திருவெண்காட்டு நங்கையாரோடும் கூடி இல்லறத்தை நல்லறமாக மேற் கொண்டார். சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தலையே பெருந் தொண்டாக மேற்கொண்டு வந்தார். இக் காரணத்தாலே இவருக்குச் சிறுத் தொண்டர் என்னும் பெயரும் உண்டாயிற்று. கணபதீஸ்வரப் பெருமானின் கிருபையாலே திருவெண் காட்டு நங்கையாரிடத்தே சீராள தேவர் என்னும் புத்திரர் அவதரித்தார். அப்புத்திரருக்கு ஐந்து வயதிலே வித்தியாரம்பம் செய்யப்பட்டது. கணபதீஸ்வரர் ஆலயத்துக்கு வழிபாடு செய்ய வந்த ஞான சம்பந்தர் அத் தேவாரத்திலே சிறுத் தொண்டநாயனுரையும் சிறப்பித்துப் பாடினுர்.

சிறுத் தொண்டரின் மெய்யன்பை உலகிற்குக் காட்டச் சிவபெருமான் திருவுளங் கொண்டார். பைரவர் வேடந் தாங்கிச் சிறுத் தொண்டருடைய இல்லத்திற்குச் சென்ருர். மனைவியார் வரவேற்று உபசரித்த போது பெண்கள் இருக்கும் இடத்திலே நாம் இரேம். திருவாத்தி மரத்தின் கீழ் இருக்கின்றேம். சிறுத் தொண்டரை வந்து அழைக்குமாறு கூறவும் என்று சொல்லிச் சென்று விட்டார். சிறுத் தொண்டர் வீடு வந்த போது மனைவியார் நடந்த சமாச் சாரத்தைத் தெரிவித்தார். சிறுத் தொண்டர் பைரவராகிய சிவபெருமானிடம் சென்று அழைத்தார். அதற்கு பைரவராகிய சிவபெருமான் நாம் உண்பது நரபசு. அதுவும் ஐந்து வயதினை உடையதாகவும், தாயார் பிடிக்கத் தந்தை அரிய வேண்டும். இத்தகைய கறியமுது படைத்தாலே நாம் உண்போம் என்ருர். இதற்கு இணங்கிய சிறுத் தொண்டர் மனைவியாரிடம் சென்று சமாச் சாரத்தை தெரிவித்தார். தங்கள் புத்திரனையே கறியமுது சமைக்கத் தீர்மானித்தார்கள்.

பாடசாலை சென்ற சீராளதேவர் அழைக்கப்பட்டார். அவருக்கு நீராட்டிச் சீராட்டினார்கள். சந்தணநங்கையார் பிடிக்கச் சிறுத் தொண்டர் வாளினால் அரிந்தார். கறியமுது சமைக்கப்பட்டது. கழிக் கப்பட்ட தலையையும் தாதியாகிய சந்தணநங்கையார் கறியமுது செய்தார். பைரவர் அழைத்துவரப்பட்டார். திருவமுது படைக்கப் பட்டது. தலைக்கறியும் வேண்டும் என்றார். அதுவும் படைக்கப் பட்டது. புத்திரனை அழையும் என்றார். சிறுத் தொண்டர் அவன் இப்போ உதவான் என்றார் பைரவர் அவன் வந்த பின்னர் தான் யான் உணவு உண்பேன் அவனைத் தேடி அழையும் என்றார் நாயனா ரும் மனைவியாரும் வீட்டின் புறத்தே போய் சீராளதேவா என்று அழைத்தனர். புதல்வர் பள்ளிக் கூடத்தில் இருந்து வருபவர் போல வந்தார் தாயும் தந்தையும் புதல்வனை அழைத்துச் சென்றபோது பைரவரைக் காணவில்லை படைக்கப்பட்ட கறியமுது முதலானவற் றையும் காணவில்லை. எம்பெருமான் இடபாரூடராகக் காட்சி கொடுத் தார். சிறுத் தொண்டரும் மனைவியாரும் தாதியாகிய சந்தண நங்கை யாரும் புதல்வனும் வணங்கினார்கள். நால்வருக்கும் திருக்கைலா சத்தை அடைதலாகிய பேரின்ப வாழ்வைக் கொடுத்தருளினார்.

## சேரமான் பெருமா ணாயனார்

மலைநாட்டிலே, கொடுங்கோளூரிலே சேரர் குடியிலே பெருமாக் கோதையார் என்னும் சற்புத்திரர் அவதரித்தார் இவர் வளர்ந்து உரிய வயதை அடைந்ததும் சனன மரணங்களின் துன்பங்களை உணர்ந் தார் இவற்றின்றும் விடுபட வேண்டும் என்று வைராக்கியம் பூண் டார். இராஜ புத்திரருக்குரிய தொழில்கள் ஒன்றையும் செய்யாது திருவஞ்சைக்களம் என்னும் ஆலயத்திற்குச் சென்று தங்கியிருந்து விடியற் காலத்திலே பூப்பறித்தல் முதலாய தொண்டுகளைச் செய்து வந்தார்.

இவ்வாறு நிகழும் காலத்திலே செங்கோற் பொறையன் என்னும் அரசன் தவம் செய்வதற்காகத் தபோவனம் சென்றான். மந்திரிமார் கள் பெருமாக்கோதையாரிடம் சென்று அரசியலை ஏற்று நடத்துமாறு வேண்டினர். அவர் சிவபெருமானுக்கு முறையிட்டு அவரது அருளைப் பெற்றபின் அதற்கு உடன்பட்டார் மந்திரிமார் சுபதினத்திலே இவரை யானைமேல் ஏற்றி அழைத்துச் சென்றார்கள். அவ்வாறு செல் லும் போது வழியிலே ஒரு வண்ணான் உவர்மண் கொண்டு செல்லும் போது மழை காரணமாக அவனது உடம்பிலே விபூதி அணிந்தது போல் காணப்பட்டது. உடனே பெருமாக்கோதையார் அவனை வணங்கினார். இதனைக் கண்ணுற்ற அவன் அடியேன் அடிவண்ணான் என்றான். அடியேன் அடிச்சேரன் தேவரீர் திருநீற்றை நினைப்பித்தீர் என்றார் பெருமாக்கோதையார். அதன் மேல் அரசமாளிகையை அடைந்த சேரமான் பெருமாள் சிங்காசனத்திலிருந்து மனுநீதிப்படி

அரசியற்றினர். சிவபெருமானுக்குப் பிரீதியாகிய யாகங்கள் பலவற்றைச் செய்தார். தொண்டனாகிய பாணபத்திரனுடைய கனவிலே தோன்றிய சிவபெருமான் சேரனுக்குத் திருமுகவோலை கொடுத்து அனுப்பினர். சேரமான் பாணபத்திரனுக்கு வேண்டிய திரவியங்களைக் கூலியாட்கள் மூலம் அனுப்பி வைத்தார்.

திருவஞ்சைக் களத்துக்குச் சுந்தரமூர்த்தி நாயனர் சென்று வணங்கியதும் சிவபெருமானல் அவருக்கு வெள்ளை யானை அனுப்பப்பட்டது. சுந்தரர், தோழராகிய சேரமானை நினைத்துக் கொண்டு வெள்ளை யானையில் ஏறிக் கைலாயஞ் சென்ருர், இதனை அறிந்த சேரமான் பெருமாள் அவ்விடம் நின்ற குதிரையில் ஏறித் திருவஞ்சைக்களம் சென்ருர். சுந்தரர் சென்று விட்டார் என்பதை அறிந்ததும் தனது குதிரைக்குப் பஞ்சாட்சரத்தை ஓதினர். குதிரை ஆகாயத்தில் பாய்ந்து சென்று வெள்ளை யானையை வலஞ் செய்து கொண்டு சென்றது, இருவரும் கைலை வாயிலை அடைந்தார்கள். சேரமான் வாயிலிலே தடுத்து நிறுத்தப்பட்டார். உள்ளே சென்ற சுந்தரர் சேரமானின் வருகையை இறைவனுக்குத் தெரிவித்தார். சேரமான் உள்ளே அழைக்கப்பட்டார். அவர் பாடிய திருவுலா சிவபெருமானல் அருள் செய்யப்பட்டது. கணங்களுக்கு நாதனய் இருக்கும் பதவி கொடுக்கப்பட்டது. சிவகணநாதரான பெருமாக் கோதையார் கைலாசத்திலே ஞானவுலாவைப் பூமியிலே விளங்கச் செய்தருளினர்.

## கணநாத நாயனர்

சோழ மண்டலத்திலே, சீர்காழியிலே, பிராமண குலத்திலே கணநாத நாயனர் என்பவர் இருந்தார். இவர் திருத்தோணியப்பருக்குத் தினந்தோறும் திருப்பணிகள் செய்பவர். தம்மை வந்து அடைபவர்களுக்குத், திருத்தொண்டுகள் பயிற்றி அவர்களை அத்தொண்டுகளில் ஈடுபடச் செய்பவர். திருநந்தவனம் வைத்தல், பூக்கொய்தல், திருமாலை கட்டுதல், திருமஞ்சனம் எடுத்தல், திருவலகிடுதல். திருமெழுக்கிடுதல், திருமுறை எழுதுதல், திருமுறை வாசித்தல் முதலாய தொண்டுகளைத் தாமும் செய்து மற்றையோரையும் செய்விப்பவர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனரை முப்பொழுதும் பூசிப்பவர். இந்தப் பூசாபலத்தினலே திருக்கைலாசத்தை அடைந்து சிவகணங்களுக்கு நாதராயினர்.

## கூற்றுவ நாயனர்

களந்தை யென்னும் பதியிலே குறுநில மன்னர் குலத்திலே, கூற்றுவநாயனர் என்பவர் இருந்தார். அவர் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை விதிப்படி உச்சரிப்பவர். இறைவன் திருவருளினலே பெருஞ் செல்வமுடையவராக விளங்கினர். அத்துடன் சதுரங்க சேனைகளையும் கொண்டவராகத் திகழ்ந்தார். பல அரசர்களை வென்று பெரும் புகழ் பெற்ருர். கூற்றுவநாயனர் தமக்கு முடிசூட்டுமாறு தில்லை

வாழ் அந்தணர்களை வேண்டியபோது அவர் தாம் சோழகுலத்தாருக்கு மட்டுமே முடிசூட்டுவோம் என்றூர்கள். நாயனுர் திருவடியை முடியாகச் சூட்டுமாறு சிவபெருமானை வேண்டினுர். சிவபெருமான் சொப்பனத்திலே தோன்றித் திருவடிகளை முடியாகச் சூட்டியருளினுர். அதன்மேல் கூற்றுவநாயனுர் பூமி முழுவதையும் அரசாண்டார். ஈற்றில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்கள்தோறும் சென்று வணங்கித் திருப்பணிகள் செய்து சிவபதம் அடைந்தார்.

## புகழ்ச்சோழ நாயனுர்

சோழநாட்டிலே, உறையூரிலே புகழ்ச்சோழ நாயனுர் என்பவர் இருந்தார். அவர் மற்றை அரசர்கள் பணிகேட்கவும், செங்கோன் முறை சிறக்கவும், சைவசமயம் தழைக்கவும் அரசியற்றினுர். இவர் மேலும் சிவாலயங்களுக்கு நித்திய நைமித்தியங்களை வழுவின்றி நடாத்தியும், சிவனடியார்களுக்கு வேண்டுவனவற்றைக் கொடுத்தும் வந்தார். அத்துடன் ஆனிலே என்னும் ஆலயத்தை வழிபட்டுச் சிங்காசனத்தில் இருந்துகொண்டு கொங்கதேசம், குடகதேசம் முதலாயவற்றின் அரசர்கள் கொண்டுவந்த திறைகளை வாங்கி அருள் புரிந்தார். இத்தருணத்தில் சிவகாமியாண்டாரின் புஸ்பங்களைச் சிதறிய யானையையும், பாகனையும் எறிபத்தநாயனுர் கொன்றபோது என்னையும் கொன்றருளும் என்று வேண்டினுர்.

அதிகன் என்பவன் திறைசெலுத்தாதபோது அவனுடன் போர் செய்யுமாறு படைகளை அனுப்பினுர். படைவீரர்கள் அநேகரைக் கொன்று அவர்களின் தலைகளைக் கொண்டுவந்தார்கள். அந்தத் தலைகளுக்குள்ளே ஒரு தலை சடைமுடியுடன் காணப்பட்டது. இதனைக் கண்ட புகழ்ச்சோழர் சிவனடியாரின் தலையைக் கொண்டுவந்ததை அறிந்தார் இவ்வாறு சிவனடியாரைக் கொலைசெய்யக் காரணமான யான் அரசாளுதல் தகுதியன்று எனக் கருதினுர். உடனே மந்திரிமாரை அழைத்துக் குமாரனுக்கு முடிசூட்டுமாறு பணித்தார். பின்னர் அக்கினி வளர்ப்பித்தார். சடாமுடி உள்ள சிரசைக் கையிலே ஏந்தியவண்ணம் அக்கினியிலே புகுந்து பரமசிவன் திருவடியை அடைந்தார்.

## நரசிங்கமுனையரைய நாயனுர்

திருமுனைப்பாடி நாட்டிலே, குறுநில மன்னர் குலத்திலே நரசிங்க முனையரையர் என்பவர் இருந்தார். இவர் விபூதியையே பெருஞ் செல்வமாகக் கருதுபவர். சிவனடியார்களில் மிகுந்த பக்தியுடையவர். சர்வான்மாக்களும் சைவசமயத்தை மேற்கொள்ளவேண்டும் என்னும் விருப்புடன் அரசாள்பவர் சிவாலயங்கள் தோறும் நித்திய நைமித்தியங்கள் வழுவின்றி நடாத்துவிப்பவர். திருவாதிரை நட்சத்திரத்திலே, சிவாலயங்களிலே விசேட பூசை செய்வித்துச், சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்து நூறு பொன்னும் கொடுப்ப

வர். ஓர் தினம் சிவனடியார்கள் பலர் வந்திருந்தார்கள். அவர்களு டன் தூர்த்த வேடம் உள்ள ஒருவரும் விபூதி அணிந்துகொண்டு வந்திருந்தார். பக்கத்தில் உள்ளவர்கள் இகழ்ந்தார்கள். நரசிங்க முனையார் அவருக்கு எதிர்சென்று அஞ்சலி செய்தார். விபூதி அணிந் தவர்களை உலகத்தார் இகழாவண்ணம் அவருக்கு இருநூறு பொன் கொடுத்தார். இவ்வாறு தொண்டுகள் பலசெய்து சிவபதம் அடைந் தார்.

## அதிபத்த நாயனார்

சோழமண்டலத்திலே, நாகபட்டினத்திலே, நுளைபாடியிலே, பர தவர் குலத்திலே அதிபத்தநாயனார் என்பவர் இருந்தார். இவர் பர தவர்களுக்குத், தலைவராய் இருந்தார். மற்றைய பரதவர்கள் குவிக் கும் மீன்களைப் பெற்று வாழ்ந்து வந்தார். சிவபக்தியின் காரண மாக அகப்படும் மீன்களிலே தலைமீனை இது பரமசிவனுக்கு என்று அன்போடு கடலிலே விட்டு வந்தார். சிலநாட்களாக ஒருமீன் மட் டும் அகப்பட அதைக் கடலிலே விட்டு வந்தார். இவ்வாறு நெடு நாட்களாகச் செய்துவரும்போது உணவில்லாமல் பெரிதும் கஷ்டப் பட்டார்.

ஓர்தினம் பரதவர்கள் மீன்பிடிக்கச் சென்றபோது ஒரு பொன் மீன் வலையில் அகப்பட்டது. இதனைக்கண்ட அதிபத்தர் இது என்னை ஆட்கொண்ட பரமசிவனுக்கு என்று கடலிலே விட்டார். உடனே சிவபெருமான் இடபாரூடராகக் காட்சிகொடுத்து அதிபத்தருக்கு அடியார்களுடன் இருக்கும் பதவியைக் கொடுத்தருளினார்.

## கலிக்கம்ப நாயனார்

நடுநாட்டிலே திருப்பெண்ணாகடத்திலே, வைசியர் குலத்திலே, கலிக்கம்பநாயனார் என்பவர் இருந்தார். அவர் திருத்துங்கானைமா டம் என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவனுக்குத் தொண்டு செய்பவர். சிவனடியார்களை வழிபட்டுத் திருவமுதும் திரவியங்க ளும் கொடுப்பவர். சிவனடியார்கள் வீட்டிற்கு வந்தால் அவர்களை உபசரித்து மனைவியார் கரகநீர் வார்க்கத் திருவடிகளைச் சுத்தஞ் செய்தபின்னரே திருவமுது கொடுப்பார். இவரிடம் முன்பு பணி விடை செய்து வந்த ஒருவர் சிவனடியாராக வந்தபோது மனைவி யார் கரகநீர் வார்க்கப் பின்னிட்டார். அப்போது கலிக்கம்பநாய னார் வாளினால் மனைவியாரின் கையைத் துண்டித்துவிட்டுத் தாமே கரகநீர் வார்த்தார். சிவபெருமான் அருளால் கை முன்போல் ஆனது, மேலும் சிலகாலம் தொண்டு செய்து சிவபதம் அடைந் தார்.

## கலிய நாயனார்

தொண்டைமண்டலத்திலே திருவொற்றியூரிலே, சக்கரபாடி யிலே, செக்கார் குலத்திலே கலியநாயனார் என்பவர் இருந்தார். இவர் செல்வம் யாக்கை என்பன நிலையாமையை உணர்ந்து திரு

வெர்ற்றியூர்க் கோவிலுக்கு எண்ணிறந்த திருவிளக்கேற்றும் தொண்டைச் செய்துவந்தார். சிலகாலம் செய்ல வறுமை வந்தது. அப்பொழுதும் தொண்டைத் தவறவிடவில்லை. வேறு இடங்களில் கூலிபெற்றும் விளக்கேற்றி வந்தார். ஓர் தினம் எண்ணை வாங்கப் பொருள் இல்லாதபோது தமது திருப்பணி தடைப்பட்டுவிடப் போகிறதே என்ற கவலையால் ஆயுதத்தினலே கழுத்தை அரியத் தொடங்கினர். பரமசிவன் இடபாரூடராகக் காட்சி கொடுத்து அவரது கையைத் தடுத்தார். பின்னர் தமது திருவடியிலே சேர்த்துக்கொண்டார்.

## சத்தி நாயனர்

சோழநாட்டிலே, வேளாளர் குலத்திலே, சத்திநாயனர் என்பவர் இருந்தார். இவர் பரமசிவனுடைய திருவடிகளை மறவாத சிந்தையோடு திருத்தொண்டு செய்பவர். யாராவது சிவனடியார்களை இகழ்ந்து பேசினல் அவர்களது நாக்கைத் தமது தண்டத்தினல் துண்டிப்பவர். இவ்வாறு தொண்டுகள் பல செய்து பரமசிவனது திருவடியை அடைந்தார்.

## ஐயடிகள் காடவர்கோனுயனர்

தொண்டைமண்டலத்திலே பல்லவர் குலத்திலே சைவத்திருநெறி விளங்க அரசியற்றும் ஐயடிகள் காடவர் கோனுயனர் என்பவர் இருந்தார். இவர் முத்தி அடைதல் வேண்டும் என்ற விருப்பத்தினல் பிற தேசங்களையும் தமது அரசிற்கு உட்படுத்தி அரசியற்றினர். சிலகாலம் சென்றதும் அரசாட்சியை வெறுத்துத் தமது புத்திரனுக்கு முடிதரித்துவிட்டுத் தலவழிபாடு செய்தார், சிதம்பரம் முதலாய தலங்களுக்குச் சென்று தரிசனம்பண்ணி ஒவ்வொரு திருவெண்பாப் பாடினர், இங்ஙனம் சிலகாலம் தொண்டுகள் செய்துகொண்டிருந்து சிவபதம் அடைந்தார்.

## கணம்புல்ல நாயனர்

வடவெள்ளாற்றுக்குத் தென்கரையில், இருக்கும்வேளூரில் சிவபக்தியிற் சிறந்தவரும் பெருஞ் செல்வமுடையவருமாகிய ஒரு நாயனர் இருந்தார், இவர் சிவாலயத்துக்கு விளக்கு ஏற்றும் பணியை மேற்கொண்டு வந்தார். சிலகாலம் சென்றபின் வறுமை வந்தது. இவர் சிதம்பரம் சென்று தரிசனஞ் செய்தார். தமது வீட்டில் உள்ள பொருட்களை விற்றுத் திருப்புலீச்சரம் என்னும் ஆலயத்தில் திருவிளக்கு ஏற்றிவந்தார். இவ்வாறு செய்துவரும் நாளில் வீட்டில் உள்ள பொருட்களும் முடிவடைந்தன. கணம்புல்லுகளை அரிந்து விற்று அதனல் வரும் பொருளைக் கொண்டு நெய் வாங்கி விளக்கு எரித்தார். இதனல் இவருக்குக் கணம்புல்ல நாயனர் என்னும் பெயர் உண்டாயிற்று. ஓர் தினம் கணம்புல்லு விலைப்படாதுபோகவே அப்புல்லையே நெய்யாகப் பாவித்து விளக்கு எரித்தார். இதனல் இறைவனின் கருணையைப் பெற்றுச் சிவலோகம் அடைந்தார்.

## காரிநாயனுர்

திருக்கடவூரிலே, தமிழ்மொழியிலே மிகவும் பாண்டித்தியம் படைத்த காரிநாயனுர் என்பவர் இருந்தார். இவர் தம் பெயரிலே சொல்விளங்கப் பொருள் மறைந்துகிடக்கக் கோவை பாடினுர். அப்பாடல்களை மூவேந்தர்களிடத்தும் சென்று பொருள் விளங்கச் சொல்லி அதனுலே வரும் திரவியங்களைக்கொண்டு சிவாலயம் கட்டுவித்தும், சிவனடியார்களுக்குக் கொடுத்தும் வந்தார். திருக்கைலாசமலையில் இருக்கும் இறைவனிடத்தே அதிக பக்தியுடையவராக விளங்கினுர். இவர் தமது உடம்போடு கைலாசமலையை அடையும் பேற்றைப் பெற்றவர்.

## நெடுமாற நாயனுர்

பாண்டிநாட்டிலே, மதுராபுரியிலே, கூன்பாண்டியர் என்பவர் இருந்தார். அவர் சமணர்களுடைய துர்ப்போதனையினுலே ஆருகத மார்க்கத்தை மேற்கொண்டார். தமது மனைவியாகிய மங்கையர்க்கரசியாரும் முதன்மந்திரியாகிய குலச்சிறையாரும் செய்த பெருஞ் சிறப்பினுலே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரால் தீண்டப்பட்டு அவரால் விபூதி சாத்தப்பட்டு, அவர் அருளிய திருநீற்றுப் பதிகத்தின் பயனுகக் கூனும் நிமிர்ந்து நெடுமாறர் என்னும் பெயரையும் பெற்றுர். திருநெல்வேலிப் போர்க்களத்திலே வடபுலத்தார்களை வென்றுர். இங்ஙனம் சைவசமயம் விருத்தியாகும்படி நெடுங்காலம் அரசியற்றிக்கொண்டிருந்து சிவபதம் அடைந்தார்.

## வாயிலார் நாயனுர்

தொண்டைநாட்டிலே, திருமயிலாப்பூரிலே, வாயிலார்நாயனுர் என்பவர் இருந்தார், இவர் பரமசிவனை என்றும் மறவாத சிந்தனையுடையவர்மனமாகிய ஆலயத்தினுள்ளே இறைவனை இருத்தி ஞானமாகிய விளக்கை ஏற்றி ஆனந்தமாகிய திருமஞ்சனமாட்டி அன்பாகிய திருவமுதை நிவேதித்து நெடுங்காலம் ஞானபூசை செய்து சிவபதம் அடைந்தார்.

## முனையடுவார் நாயனுர்

சோழநாட்டிலே, திருநீடூரிலே, வேளாளர் குலத்திலே, சிவனடியார்களிடத்திலே மிகுந்த பக்தியுடைய அடியவர் ஒருவர் இருந்தார். இவர் போர்முனையிலே தோற்றவர்கள் தம்மிடம் வந்து கூலி பேசினுல் அவர்களுக்காகச் சென்று போர்செய்து அதில் வெற்றிகொண்டு அவர்கள் கொடுக்கும் பணத்தைக்கொண்டு சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்து வந்தார். இதனுல் அவருக்கு முனையடுவார் என்னும் பெயர் வந்தது. இவர் நெடுங்காலம் இத்தொண்டைச் செய்துகொண்டிருந்து சிவபதம் அடைந்தார்.

## கழற்சிங்க நாயனார்

காடவர் குலத்திலே, பரமசிவனுடைய திருவடிகளை அன்றிப் பிறிதொன்றையும் அறியாத கழற்சிங்கநாயனார் என்பவர் இருந்தார். இவர் திருவருள் வலிமையினாலே வடபுலத்தார்களை வென்று சைவசமயம் தழைத்தோங்க அரசாண்டார். பல தலங்களையும் வழிபட்டுக்கொண்டு திருவாரூரை அடைந்தார்.

அங்கே தனது மாதேவியாரோடு அக்கோயில் வீதியை வலஞ் செய்து வணங்கினார். மாதேவியார் வீதிவலம் வரும்போது நிலத்திலே கிடந்த பூ ஒன்றை எடுத்து மோந்தார், இதனைக் கண்ட செருத்துணைநாயனார் மாலைகட்டும் பூவை எடுத்துவிட்டாள் என நினைத்து மாதேவியாரின் மூக்கை அரிந்தார். இதனை அறிந்த கழற்சிங்க நாயனார் உடனே ஓடிவந்து பூ எடுத்த கையை வெட்டினார். அதுகண்டு தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். இவ்வாறு தொண்டுகள் செய்து நெடுங்காலம் அரசியற்றினார், சைவநெறி தழைத்தோங்கச்செய்து இறைவன் திருவடி அடைந்தார்.

## இடங்கழி நாயனார்

சோணாட்டிலே, கொடும்பாளூரிலே, குறுநிலமன்னர் குலத்திலே, கனகசபை முகட்டைச் செம்பொன்னால் வேய்ந்த ஆதித்தன் குடியிலே இடங்கழிநாயனார் என்பவர் இருந்தார். அவர் சிவாலயங்களுக்கு நித்திய நைமித்தியங்கள் சிவாகம விதிப்படி நடக்க வழிசெய்தார். அத்துடன் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தும் அரசியற்றினார். சிவனடியவர் ஒருவர் பொருள் இல்லாத காரணத்தால் அர்த்தராத்திரியிலே இடங்கழிநாயனாருடைய பண்டாரத்திலே புகுந்து பொருட்களை எடுத்தார். காவலாளர்கள் அச் சிவனடியாரைப் பிடித்துச்சென்று அரசருக்குமுன் நிறுத்தினார்கள். அரசர் விசாரணை செய்தபோது சிவனடியார் மகேசுர பூசைக்குப் பொருள் இல்லாத காரணத்தால் எடுத்தேன் என்றார். அரசர் சிவனடியாருக்குத் தண்டனை கொடாது அவர் விரும்பிய திரவியங்களைக் கொடுத்து அனுப்பினார். இடங்கழிநாயனார் இவ்வாறு பல காலம் ஆட்சிசெய்துகொண்டிருந்து சிவபதம் அடைந்தார்.

## செருத்துணை நாயனார்

சோழமண்டலத்திலே, தஞ்சாவூரிலே, வேளாளர் குலத்திலே செருத்துணைநாயனார் என்பவர் இருந்தார் இவர் தொண்டுகள் பல செய்துவந்தார். ஓர் தினம் கழற்சிங்க நாயனாருடைய மனைவி மாதேவியார் பூவை எடுத்து மோந்த குற்றத்திற்காக அவளுடைய மூக்கை அரிந்தார். மேலும் இன்ன பல தொண்டுகள் செய்து சிவபதம் அடைந்தார்.

## புகழ்த்துணை நாயனார்

செருவிலிபுத்தூரிலே ஆதிசைவர் குலத்திலே புகழ்த்துணை நாயனார் என்பவர் இருந்தார். இவர் சிவபெருமானுக்கு அருச்சனை செய்யும் தொண்டை இடைவிடாது செய்துவந்தார். அங்ஙனம் செய்துவரும் நாளில் அவ்வூரில் இவர் உணவு இல்லாமல் பசிக் களையுடன் திருமஞ்சனம் ஆட்டும்போது கைசோர்ந்து கலசம் திருமுடிமேல் விழச் சுவாமி சந்நிதியிலே விழுந்து அயர்ந்து நித்திரை செய்தார். இவரது சொப்பனத்திலே தோன்றிய இறைவன் தினமும் ஒவ்வொரு பொற்காசு தருவதாகவும் அதைக்கொண்டு பொருட்களை வாங்குமாறும் பணித்தார். நாயனார் விழித்தெழுந்து பீடத்தில் இருந்த பொற்காசை எடுத்துப் பொருட்களை வாங்கினார். இவ்வாறு பஞ்சம் நீங்கும்வரைக்கும் பொற்காசு பெற்றார். பஞ்சம் நீங்கிய பின்னரும் தொண்டு செய்து பரமசிவனது திருவடியை அடைந்தார்.

## கோட்புலி நாயனார்

சோழநாட்டிலே, நாட்டியத்தான் குடியிலே, வேளாளர் குலத்திலே சிவபக்திமிக்க கோட்புலி நாயனார் என்பவர் இருந்தார். இவர் அரசனிடத்திலே சேனாதிபதி உத்தியோகம் வகித்து வந்தார். தனக்குக் கிடைக்கும் வேதனத்தைக் கொண்டு சிவாலயங்களுக்கு நைவேதனத்தின் பொருட்டு நெல்லுவாங்கிக் கொடுக்கும் பணியை மேற்கொண்டு வந்தார். ஓர்தினம் இவர் போர்முனைக்குச் செல்லவேண்டியிருந்தது. தாம் திரும்பி வரும்வரைக்கும் தேவையான நெல்லை வாங்கித் திருவமுதின் பொருட்டு வைத்துவிட்டுப் போர்முனைக்குச் சென்றார். அவ்வமயம் அந்நாட்டிலே பஞ்சம் ஏற்பட்டது. இவர்களது உறவினர்கள் பின்னர் கொடுக்கலாம் எனக் கருதி இவர் வாங்கி வைத்த நெல்லை எடுத்துவிட்டார்கள் கோட்புலி நாயனார் போர் முடிந்து வந்தார். நடந்த சமாச்சாரத்தை அறிந்ததும் தமது உறவினர்கள் அனைவரையும் வாளினால் வெட்டினார். அவ்வமயம் சிவபெருமான் தோன்றி அவர்களுக்கும் அனுக்கிரகம் செய்து நாயனாரையும் தம்முடைய உலகத்துக்கு அழைத்துக்கொண்டார்.

## பூசலார் நாயனார்

தொண்டை மண்டலத்திலே திருநின்றவூரிலே பூசலார் என்பவர் இருந்தார். அவர் சிவனடியார்களுக்கு வேண்டுவனவற்றைக் கொடுத்துவந்தார். மேலும் பூசலார் பரமசிவனுக்குச் சிவாலயம் கட்டுவதற்கு விரும்பினார். அவ்வாறு செய்வதற்குப் பொருள் கிடைக்கவில்லை. இதனால் வருந்திய நாயனார் மனத்தினால் கோயில் கட்டுவதற்குத் துணிந்தார். அதற்குரிய உபகரணங்களைச் சேமித்தார். சுபதினத்திலே மனோபாவனையினால் கோயில் கட்ட ஆரம்பித்தார். பூசலார் சிலகாலத்தில் கோவிலைக் கட்டி முடித்தார். பிரதிட்டை செய்வதற்குரிய சுபதினத்தையும் நியமித்தார்.

காடவராஜா காஞ்சீபுரத்திலே ஒரு சிவாலயம் கட்டுவித்தார். பிரதிட்டை செய்வதற்குரிய சுபமுகூர்த்தமும் நியமிக்கப்பட்டது. பிரதிட்டைக்குரிய தினத்திற்கு முதல் தினத்திலே காடவராஜாவின் சொப்பனத்திலே தோன்றிய இறைவன் "திருநின்றவூரிலே பூசலாருடைய கோவிலுக்கு நாம் செல்லவேண்டும் உன்கோவிலின் பிரதிட்டையை இன்னொருதினம் செய்வாய்" என்று திருவாய்மொழிந்தார். விழித்தெழுந்த காடவர் கோமான் திருநின்றவூரை அடைந்தார். பூசலாரை அணுகிக் கோயிலைக் காட்டுமாறு வேண்டினார். பூசலார் பொருள் இல்லாத காரணத்தால் தாம் மனோபாவனையினால் கோயில் கட்டியதைத் தெரிவித்தார். காடவர் கோமான் பூசலாரை வணங்கிக்கொண்டு தமது ஊரை அடைந்தார். உரிய நேரத்திலே பூசலாரின் மனக்கோயிலிலே கும்பாபிஷேகம் நடைபெற்றது. பூசலார் மேலும் மனத்தினாலே பூசை செய்துகொண்டு இருந்து சிவபதம் அடைந்தார்.

## மங்கையற்கரசியார்

மதுரையிலே இருந்த நெடுமாறனுக்கு மனைவியார் மங்கையற்கரசியார். இவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் தேவாரத்திலே சிறப்பித்துப் பாடப்பட்டவர். இறைவன் திருவருளினாலே நாயகருக்கு வழித்தொண்டு செய்துகொண்டிருந்தவர். பாண்டிநாடெங்கும் சைவநெறியைப் பரவச் செய்து பரிபாலனஞ் செய்தவர். இறுதியிலே நாயகரோடு சிவபதம் அடைந்தவர்.

## நேசநாயனார்

காம்பீலி நகரத்திலே, சாலியர் குலத்துக்குத் தலைவராகிய நேசநாயனார் என்பவர் இருந்தார். இவர் தம்முடைய மனத்தின் செய்கையைப் பரமசிவனுடைய திருவடிக்கு ஆக்கி, வாக்கின் செய்கையை ஸ்ரீ பஞ்சாட்சரத்துக்கு ஆக்கி, கையின் செய்கையை சிவனடியார்களுக்கு ஆக்குவாராகி சிவனடியார்களுக்கு நாள்தோறும் வஸ்திரங்கள் நெய்து கொடுத்து வந்தார். தினமும் அடியார்களை வணங்கித் துதித்துக்கொண்டிருந்து சிவபதம் அடைந்தார்,

## கோச்செங்கட்சோழ நாயனார்

சோழமண்டலத்திலே, சந்திரதீர்த்தத்தின் பக்கத்திலே ஒரு வனம் இருந்தது. அந்த வனத்திலே வெண்நாவல் மரத்தின்கீழே ஒரு சிவலிங்கம் வெளிப்பட்டது. அதைக் கண்ட வெள்ளை யானை ஒன்று துதிக்கையினாலே தீர்த்தம் முகந்து ஆட்டிப், புஸ்பங்களைச் சாத்தி வழிபட்டு வந்தது. அதனாலே அந்தத் தலத்திற்குத் திருவானைக்கா என்று பெயர் வந்தது. அறிவு நிரம்பிய சிலந்தி ஒன்று அந்தச் சிவலிங்கத்தின்மேலே சருகுவிழாவண்ணம் தன் வாய்நூலினாலே மேற்கட்டி செய்தது. இது அசுத்தம் என நினைத்த வெள்ளை

யானை மேற்கட்டியைச் சிதைத்தது. இதனால் கோபங்கொண்ட சிலந்தி வெள்ளையானையின் துதிக்கையிலே புகுந்து கடித்தது. வெள்ளானை துதிக்கையை நிலத்திலே மோதி இறந்தது. அது திருக்கைலாசமலையை அடைந்து அங்கு சேவித்துக்கொண்டிருந்தது.

சுபதேவன் என்ற சோழ அரசன் சிதம்பரத்தை அடைந்து புத்திரப் பேற்றைக் குறித்து வழிபாடு செய்தான்: மேற்கட்டி செய்த சிலந்தி சுபதேவரின் மனைவி கமலவதி வயிற்றிலே மகவாய் வந்து அடைந்தது. சோதிடரின் கூற்றுப்படி ஒரு நாழிகை கழித்துக் கமலவதி குழந்தையைப் பெற்றாள். பிள்ளை சிவந்த கண்ணையுடையதாய் இருத்தலைக்கண்ட கமலவதி 'என்கோச் செங்கண்ணனோ' என்று சொல்லிக்கொண்டு இறந்துவிட்டாள். சுபதேவன் மகனை வளர்த்து முடிசூட்டிவிட்டுத் தவஞ்செய்து சிவலோகத்தை அடைந்தான். முற்பிறப்பின் தொடர்பாகக் கோச்செங்கட் சோழநாயனார் சைவத்திரு நெறி தழைக்க அரசியற்றினார். சோழநாட்டிலே சிவாலயங்கள் பல கட்டுவித்தும் பூசை முதலியன நடைப்பதற்கு நிபந்தங்கள் அமைத்தும் திருத்தொண்டுகள் செய்துகொண்டிருந்து சபாநாயகருடைய திருவடியை அடைந்தார்.

## திருநீலகண்ட யாழ்ப்பாணர்

நடுநாட்டிலே, திருவெருக்கத்தம்பூரிலே, திருநீலகண்ட யாழ்ப்பாணர் இருந்தார். இவர் பரமசிவனுடைய திருப்புகழை யாழில் இட்டு வாசித்து வந்தார். அடியார்கள் கனவிலே தோன்றிய சொக்கநாத சுவாமி பாணரை ஆலயத்தின் முன்றலிலே அழைத்து வருமாறு கட்டளையிட்டார். சுவாமியின் கட்டளையை அறிந்த பாணர் சுவாமி சந்நிதானத்திலே இருந்து யாழ் வாசித்தார். அதன் மேல் "இவருக்குப் பொற்பலகை இடுங்கள்" என்று அசரீரி கேட்டது. அதன்படி அடியார்கள் பொற்பலகை இட்டார்கள். பாணர் பொற்பலகையில் இருந்து யாழ் வாசித்தார். பின்னர் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு வன்மீகநாதரையும் வணங்கினார். அவ்விடத்தினின்றும் நீங்கிச் சீர்காழியை அடைந்து ஞானசம்பந்தரை வழிபட்டார். சம்பந்தர் பாடும் திருப்பதிகங்களை யாழில் வாசிக்கும் பேற்றைப் பெற்றார். திருநல்லூர்ப் பெருமணத்திலே சம்பந்தப்பெருமானின் திருமணத்திலே பங்குகொண்டு அவருடனே சிவபதம் அடைந்தார்.

## சடைய நார்

திருநாவலூரிலே, ஆதிசைவ குலத்திலே, சடையனார் என்பவர் இருந்தார். இவர் உலகெலாம் மெய்ஞ்ஞான ஒளியைப் பெற்று உய்யும்படி செய்து சமயகுரவராகிய சுந்தரமூர்த்தி நாயனாரைப் புதல்வராகப் பெற்ற பெரும் பேற்றை உடையவர்.

## இசைஞானியார்

சடையனருடைய மனைவியார் இசைஞானியார் என்பவர். எம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்திநாயனரைப் பெற்ற பெரும் கீர்த்தியை உடையவர்.

## சேக்கிழார் நாயனர்

தொண்டைமண்டலத்திலே குன்றத்தூரிலே, சேக்கிழார் மரபிபிலே, இறைவன் திருவருளினல் அருண்மொழித்தேவர், பாலறுவாயர் என்று இருசற்புத்திரர்கள் திருவவதாரஞ் செய்தார்கள். அருண்மொழித்தேவர் சேக்கிழார் மரபை விளக்கியபடியால் அவருக்குச் 'சேக்கிழார்' என்னும் நாமம் உண்டாயிற்று; இவரது அறிவு ஆற்றல் முதலியவற்றைக் கேள்வியுற்ற அனபாய சோழமகாராஜா இவரை அழைத்துத் தமக்கு முதன் மந்திரியாக்கினர். அத்தோடு உத்தம "சோழப் பல்லவர்" என்ற சிறப்புப் பெயரையும் இவருக்கு நல்கினர். இவர் குன்றத்தூரிலே ஒருகோயில் அமைத்துத் திருநாகேச்சரம் என்னும் நாமத்துடன் நித்திய நைமித்தியங்களை வழுவற நடாத்தி வந்தார். இவற்றுடன் சோழமகாராஜாவினுடைய செங்கோலையும் சிறப்பாக நடாத்தி வந்தார்.

இவ்வாறு சேக்கிழார் செங்கோலை நடாத்திவரும் நாளிலே சைவமக்கள் சிலர் சமயநூலாகிய சீவகசிந்தாமணியை மெய்நூல் எனக் கருதிக் கற்ருர்கள். சோழராஜாவும் சீவகசிந்தாமணிக் கதைகளைக் கேட்பாராயினர். இதனைக்கண்ட சேக்கிழார் சோழஇராஜாவை அணுகி மூவகைப் பேற்றையும் தரத்தக்க சிவசரித்திரங்களைக் கற்குமாறு கூறினர். இராஜாவானவர் அவ்வாறு பலன் அளிக்கக்கூடிய சிவசரித்திரங்கள் உண்டாயின் அவற்றைக் கூறுவீராக என்று கூறினர். முதலில் நம்பியாண்டார் நம்பியந்தாதி ஓதிப் பொருளும் கூறப்பட்டது. இதனைக் கேட்ட சோழமகாராஜா சேக்கிழாரை நோக்கித் திருத்தொண்டர்களின் திறனைத் தெளிவாய் விளங்கும்படியாக பெருங்காப்பியம் அமைத்துத் தருமாறு வேண்டினர். சேக்கிழார் சிதம்பரஞ் சென்று சிவகங்கையில் ஸ்நானஞ் செய்து தமது நியமங்களை முடித்துக்கொண்டு கனகசபை சென்று அனலிடைப்பட்ட மெழுகுபோல உருகிநின்று "எம்பெருமானே! திருத்தொண்டர்களுடைய திறத்தை விரித்துப் பெருங்காப்பியமாகப் பாடுவதற்கு அருள் செய்யவேண்டும். அடியெடுத்துத் தந்தருள வேண்டும் என்று பிரார்த்தித்தார். சபாநாயகருடைய திருவருளினலே "உலகெலாம் உணர்ந் தோதற்கரியவன்" என்று அசரீரி கேட்டது. இதனைக்கேட்ட தில்லைவாழ் அந்தணர் சபாநாயகருக்குச் சாத்தியமாலை, திருநீறு, பரிவட்டம் முதலியவற்றைச் சேக்கிழாருக்குச் சாத்தினர்கள். சேக்கிழார் அதன்மேல்

சமயகுரவர்களையும் வணங்கிக்கொண்டு ஆயிரங்கால் மண்டபத்திற்குச் சென்று, சிவசின்னங்களையும் அணிந்துகொண்டு சபாநாயகரைத் தியானம்பண்ணி அவரால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட "உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்" என்ற அடியை முதலாகக்கொண்டு புராணம் பாட ஆரம்பித்தார், சிலகாலத்திலே புராணம் பாடி முடிக்கப்பட்டது. சேக்கிழார் அதற்குத் "திருத்தொண்டர் புராணம்" எனப் பெயர்சூட்டிக் கவளியிலே வைத்தருளினர்.

அபயகுல சோழமகாராஜா சிதம்பரத்துக்கு வந்தார். புராணம் பாடி முற்றுப்பெற்றதை அறிந்தார். இறைவனின் உத்தரவுப்படி புராணத்தைக் கேட்க விழைந்தார். சகல விற்பன்னர்களுக்கும் நிருபம் அனுப்பப்பட்டது. சித்திரை மாதம் திருவாதிரை நட்சத்திரத்திலே சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்திற்கு வழிபாடு செய்து வாசித்துப் பொருள் சொல்லத் தொடங்கினர். சோழமகாராஜாவும் எண்ணிறந்த அடியார்களும் சிதம்பரத்திலேயே தங்கியிருந்து புராணத்தைக் கேட்டார்கள். அனைவருக்கும் சோழராஜாவினுடைய செலவிலே போசனங்கள் வழங்கப்பட்டன. இறுதியாக அடுத்தவருடம் சித்திரை மாதம் திருவாதிரை நாளிலே புராணம் பூர்த்திசெய்யப்பட்டது. பின்னர் சோழராஜா புராணப் புஸ்தகத்தைப் பொற்கலத்திலே வைத்துச் சேக்கிழாரையும் புஸ்தகத்தையும் யானைமேல் வைத்து மங்களவாத்திய சகிதம் வீதிவலம் கொண்டு வரப்பட்டது. சோழராஜா சேக்கிழாருக்குத் "தொண்டர் சீர்பரவுவார்" என்ற பட்டத்தையும் சூட்டி வணங்கினர். திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது. அரசர் புராணத்தைச் செப்பேடு செய்வித்தார். சேக்கிழாரின் தம்பி பாலறுவாயரை அரசர் அழைப்பித்து முதன் மந்திரியாக்கினர். சேக்கிழார் சிதம்பரத்திலேயே சிறிது காலம் தங்கியிருந்து இறைவன் திருவடியை அடைந்தார். உமாபதி சிவாச்சாரியார் இப்புராணத்தைச் சுருக்கித் 'திருத்தொண்டர் புராண சாரம்' என்னும் பெயருடன் எழுபத்தைந்து திருவிருத்தங்கள் பாடியுள்ளார். அவரே சேக்கிழார் புராணமும் பாடியுள்ளார்.

## பத்தராய்ப் பணிவார்

சிவனடியார்களைக் கண்டால் அவர்களையே சிவம் எனக்கருதி வணங்குபவர்கள் சிவனடியார்களுக்குத் தொண்டு செய்தலையே மேலான பணியாகக் கொண்டவர்கள். சிவபெருமானையும் சிவனடியார்களையும் அருச்சிக்கின்றவர்கள், சிவசரித்திரங்களையே கேட்கின்றவர்கள். எத்தொழிலைச் செய்தாலும் சிவபெருமானை ஒரு போதும் மறவாத சிந்தையுள்ளவர்கள், ஆகியோர் பத்தராய்ப் பணிவார்கள் என்று சொல்லப்படுவார்கள்.

## பரமனையே பாடுவார்

மனிதர்களையும் தேவர்களையும் மதித்து அநித்தியமான வாழ்க்கையை மெய்யெனக் கருதி வாணாளை வீணுக்குபவர்களைப் பாடாமல். வேதசிவாகமங்கள் மூலம் சிவபெருமானுடைய மகிமையை அறிந்து அவருடைய திருவடியை அடையும் நோக்குடன் அப்பெருமானை மெய்யன்போடு பாடி, நாம் சிவனுக்கு ஆளாயினேம் ஒருவருக்கும் குடியல்லோம் என்கின்ற தன்மையுடையவர்களே பரமனையே பாடுவார் என்று சொல்லப்படுவார்கள்.

## சித்தத்தை சிவன்பாலே வைத்தார்

மனதை ஒருவழிப்படுத்தி ஆறு ஆதாரங்களின் அதிதேவதைகளையும் தியானித்து ஆறு ஆதாரத்துக்கும் மேலாகிய பிரமாந்திரமளவும் அசபையுடன் சென்றணைந்து தாமரை மூலாக்கினியை உச்சாடத்தினலே எழுப்பி அமிர்தத்தை சர்வநாடி வழியாக நிரப்பித் தன்னிடத்திலே பூரணப்பிரகாசத்தைப் பாவிக்கின்றவர்களே சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர்கள் என்று சொல்லப்படுவார்கள்.

## திருவாரூர்ப் பிறந்தார்

பூர்வஜென்மத்திலே செய்த புண்ணியத்தினலே திருவாரூரிலே சைவர்களாய்ப் பிறந்த நான்கு வருணத்தார்களும், ஏனைய சாதியினரும் பரமசிவனுடைய திருவடிகளை அடைந்தால் சிவகணநாதர்களாய் இருப்பார்கள். சிவபெருமானே நமிநந்தியடிகளுக்குக் கணநாத வடிவினர்களாகத் தோன்றக் காண்பித்தவர்.

## முப்பொழுதும் திருமேனி தீண்டுவார்

சிருட்டி காலத்திலே சதாசிவனுடைய பஞ்சவத்தினின்றும் தோன்றிய பஞ்சரிஷிகோத்திரத்திலே ஜெனித்த சிவப்பிராமணர்கள் ஆதிசைவர் என்று சொல்லப்படுவார்கள். அவர்களுள்ளே மூவகைத் தீட்சைகள் பெற்று ஆசாரி அபிஷேகமும் செய்யப்பெற்றவர்களே சிவாச்சாரியார்கள் என்று சிவாகமம் செப்பும். பரார்த்தப் பிரதிட்டை, பரார்த்தபூசைகள் செய்வதற்கு உரியவர். இவர்களே சிவாகம விற்பன்னர்களாகி, முப்பொழுதும் சிவலிங்கத்தைத் தீண்டி அருச்சிப்பவர் என்று சொல்லப்படுவார்கள்.

## முழுநீறுபூசிய முனிவர்

மூவகைப்படும் விபூதியாயினும் நித்தியாக்கினியிலிருந்து எடுத்த விபூதியாயினும் சிவபெருமான் முன்னும், குருமுன்னும். வழிநடக்கும் போதும் பூசாது உத்தூளனம். திரிபுண்டரம் முதலாய சிவாகம விதிப்படி பூசுகின்றவர்கள் முழுநீறு பூசிய முனிவர் என்று சொல்லப்படுவார்கள்.


## அப்பாலு மடிசார்ந்தார்

சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர்களுக்கும் தமிழ் நாட்டிற்கு அப்புறத்திலே சிவபெருமானுடைய திருவடிகளை அடைந்தவர்களும் சுந்தரமூர்த்தி நாயனருடைய திருத்தொண்டத் தொகையிலே சொல்லப்பட்ட திருத்தொண்டர்களுடைய காலத்துக்கு முன்னும் பின்னும் சிவபெருமானுடைய திருவடிகளை அடைந்தவர்களும் அப்பாலுமடிசார்ந்தார் என்று சொல்லப்படுவார்கள்.



என்று மின்பம் பெருகு மியல்பினு
லொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்.

திருச்சிற்றம்பலம்



சந்திரா அச்சகம்,
காங்கேசன்துறை.